மனித உரிமைகளுக்கான

# குழந்தைகளின் குரல்

**Focus**

## சமச்சீர்க்கல்வி சமன்செய் கல்வியாக மலர்ந்திட

–முனைவர். ச.சீ. இராசகோபாலன்

பகலவன் சாயா ஆங்கிலப் பேரரசை எதிர்த்து ஆயுதமேந்தியும், அமைதி முறையிலும் போராட்டம் நடத்தி இந்தியா விடுதலை பெற்றது ஒரு வரலாற்றுச் சிறப்புமிக்க நிகழ்வாகும். அதைவிடக் கடினமான போர் குறுநில மன்னர்கள்போல் திகழும் ஆங்கிலவழிக் கட்டணப்பள்ளிகளுக்கு முடிவுகட்டத் தேவைப்படுகின்றது. இயக்கமல்ல, ஒரு பெரும் போராட்டமே சமச்சீர் கல்வி முறையைக் கொணர நடைபெற வேண்டும். நடக்குமா ? என்பது ஒரு பெரிய வினாக்குறி.

### ஆங்கிலேயர் ஆட்சியில்

ஆங்கில ஆட்சியின் பொழுதுகூட தொடக்கக் கல்வி முதல் பல்கலைக் கழகக் கல்விவரை ஒரு வகை சமச்சீர் கல்வியே இருந்து வந்தது. பாடத் திட்டத்திலோ, தேர்வு முறைகளிலோ கல்விக் கூடத்திற்குக் கல்விக்கூடம் வேறுபாடு கிடையாது. கட்டணக் கல்வியாய் அமைந்ததால் பொருளாதார வேறுபாடுகள் காரணமாக அனைவர்க்கும் கல்வி கிடைக்கப் பெறாதிருந்தது. கல்வி விதி 92(பி) பிரிவின்படி தாழ்த்தப்பட்ட, பிற்படுத்தப்பட்ட. வகுப்பு மாணவர்க்குக் கட்டணச் சலுகைகள் வழங்கப்பெற்றன. இருந்தபோதிலும கல்விக் கூடங்களின் எண்ணிக்கை குறைவாக இருந்ததால் பத்து முதல் இருபது கி.மீ. தொலைவு நடந்து கல்வி கற்கச் செல்லவேண்டிய நிலை இருந்தது.

### விடுதலைக்குப் பின்னர்

விடுதலை பெற்ற பின்னர் பட்டி தொட்டியெல்லாம் பள்ளிகள் தொடங்கப்பெற்றன. படிப்படியாகக் கட்டணச் சலுகைகள் வழங்கப்பெற்று 1964ஆம் ஆண்டில் கட்டணமில்லாக் கல்விமுறை செயல்படுத்தப்பட்டது. ஓராசிரியர் பள்ளிகள் இல்லா நிலை, அனைத்து ஆசிரியர்களும் பயிற்சி பெற்றவர் என்ற உயர்நிலையை நாட்டிலேயே முதலாவதாக அடைந்தமாநிலம் என்ற பெருமையைத் தமிழகம் எய்தியது. பாகுபாடுகளற்ற கல்விமுறை செயல்பட்டது. ஆங்கில வழிக்கல்வி இருந்தபோதிலும், 98 விழுக்காட்டிற்கு மேற்பட்டவர் தமிழ் வழியிலேயே பயின்றனர். பொதுத் தேர்வில் முதலிடங்களைத் தமிழ்வழி மாணவரே பெற்றனர். மருத்துவர், பொறியாளர், ஆட்சிப்பணி, வழக்குரைஞர் எனப் பல்வேறு துறைகளிலும் தமிழ்வழி மாணவர் கோலோச்சினர், அது ஒரு பொற்காலம் !

### தன் நிதிக் கல்விக் கூடங்களும் கல்வி மறுப்பும்

1976ஆம் ஆண்டு எம்.ஜி.ஆர். ஆட்சிப்பொறுப்பு ஏற்றவுடன், புதிய கல்லூரிகளை அரசு, தொடங்காதென்றும், உயர் கல்வியினைத் தன் நிதிக் கல்லூரிகளே வழங்குமென்றும்

அறிவித்தார். பல்தொழிற் கல்லூரிகளும், பொறியியல் கல்லூரிகளும் தன் நிதிக் கல்விக் கூடங்களாகத் தொடங்கப்பெற்றன. முதலீடு ஏதுமில்லாது, எவ்வித உட்கட்டமைப்பு வசதியுமில்லாது தொடங்கப்பெற்ற இக் கல்லூரிகள் நிர்வாகங்களுக்குப் பெரும் பணச் சுரங்கங்களாக அமைந்தன.

இத் தருணத்தில் பல்கலைக்கழகம் பள்ளிக் கல்வி அளிப்பது தங்கள் பொறுப்பல்ல என்றும், மெட்ரிகுலேசன் தேர்வுகள் தொடர்ந்து நடத்தப்படாதென்றும் அறிவித்தது. அப்பொழுதிருந்த 34 மெட்ரிக் பள்ளிகளை மாநில வாரியத்துடன் இணைத்துக்கொள்ளாது. அவற்றிற்கெனத் தனி இயக்ககம் அமைத்ததும், மெட்ரிக் வாரியத்திற்கான விதிகளை அப்பள்ளி முதல்வர்களே உருவாக்க அனுமதித்ததும், அவர்கள் இயற்றிய விதிகளுக்குக் கண்ணை மூடிக் கொண்டு ஒப்புதல் அளித்ததும், புதிய மெட்ரிக் பள்ளிகள் தொடங்கத் தூண்டியதும் தமிழக அரசு செய்த மாபெரும் மக்கள் விரோதச் செயல்கள் ஆகும். இவற்றைக் கல்வியாளர்களும், அரசியல் வாதிகளும், பொது மக்களும் கண்டுகொள்ளாது புதிய ஆங்கிலவழிக் கட்டணப் பள்ளிகளை ஆதரிக்கவும் முற்பட்டனர். தன் நிதிக் கல்லூரிகள் போல இவையும் கல்வி வணிகக் கூடங்களாக இயங்கி வருகின்றன. எவ்விதக் கட்டுப்பாட்டிற்கும் தம்மை ஆட்படுத்திக்கொள்ள அவை தயாராக இல்லை.

பெரும்பாலான தன் நிதிக் கல்விக் கூடங்கள் சாதியத் தலைவர்களால் உருவாக்கப்பட்டு, தங்கள் சாதி அமைப்புகளின் நலனிற்கு முன்னுரிமை அளித்து வந்ததால், சமூகத்தை ஒருங்கிணைக்கும் ஒரு கருவியாகக் கல்வி அமையாது. சாதியத்தை வளர்க்கும் ஒன்றாக மாறியதன் விளைவை நாம் இன்று காண்கிறோம். மாணவர் சேர்க்கை, ஆசிரியர் நியமனம் ஆகியவற்றில் இடஒதுக்கீட்டுக் கொள்கைகளை இக்கல்விக் கூடங்கள் பின்பற்றுவதில்லை. அரசும் அதனை வலியுறுத்த தவறிவிட்டது. அண்மையில் வெளியிடப்பட்ட ஓர் ஆய்வில், தமிழகத்தில் உள்ள 186 தன் நிதிப் பொறியியல் கல்லூரிகளில் ஒரு ஆசிரியர்கூட மலையினத்தைச் சார்ந்தவராக இல்லாததும், மூன்றே மூன்று ஆசிரியர்கள் மட்டுமே தாழ்த்தப்பட்ட இனத்தைச் சார்ந்தவர் என்பதும் கண்டறியப்பட்டுள்ளன. தன் நிதிப்பள்ளிகள், தன் நிதி ஆசிரியர் கல்விக் கூடங்களிலும் இதே நிலைதான் இருக்குமென்று எண்ணுவது தவறல்ல. இந்நிலை அரசு அறியாததல்ல. அறிந்தும் தலையிட விரும்பாததற்குக்காரணம் பல அமைச்சர்களும், சட்டமன்ற உறுப்பினர்களும் அவர்தம் குடும்பத்தாரும் தன் நிதிக் கல்விக்கூடங்களை நிறுவியவர்கள் ஆவர். என்பதே தந்தை பெரியாரது அரை நூற்றாண்டிற்கு மேற்பட்ட போராட்டத்தினால் தாழ்த்தப்பட்ட இனத்தவர்க்குக் கிடைக்கப்பெற்ற வாய்ப்புகள் மறுக்கவும் துறக்கவும் படுகின்ற அவலத்தினின்று மீள ஒரு சமூகநீதிப் போராட்டம் தொடங்கப்பெற வேண்டும்.

### சமச்சீர் கல்வியல்ல, சமன் செய் கல்வியே

ஒரே வாரியம், ஒரே பாடத்திட்டம், ஒரே பாடநூல், ஒரே தேர்வு ஆகியவையே சமச்சீர் கல்வியின் கூறுகளென்று மெத்தப் படித்தவரும் நினைக்கின்றனர். இவை தேவையென்றாலும், இவையே சமச்சீர் கல்வியைக் கொண்டுவந்துவிடாது. ஏற்றத் தாழ்வுகள் நிறைந்த சமூகத்தில் கல்வி அளிப்பதும் அவ்வேறுபாடுகள் மேலோங்குவதும் வியப்பல்ல. கல்வி அறிவாற்றலை வளர்க்கும் கருவி மட்டுமல்ல. வேலை வாய்ப்புகளைத் தந்து சமூகத்தில் உலவிடும் வேறுபாடுகளை அகற்ற உதவும் ஒரு வலிமை மிக்க ஆயுதமாகக் கல்வி அமையவேண்டும். கலைத் திட்டத்தின் மய்யமாகப் பாகுபாடற்ற, சமத்துவம், சமநீதிக் கோட்பாடுகளுக்குட் பட்ட ஓர் ஒப்பற்ற சமுதாயமாகத் தமிழகம் மலரத் தேவையான அடிப்படைகள் இருத்தல் வேண்டும். இன்றைய நடைமுறையில் உள்ள கலைத்திட்டம் சமூகத்தில் நிலவும் வேறுபாடுகளை எதிர் கொள்ளத்தக்கதல்ல. வளர்க்கவே செய்கின்றது. அதுபோலவே கல்வி விதிகள், வகுப்பறைச் செயல்பாடுகள், ஆசிரியர்–மாணவர் உறவு, பள்ளிகள்–சமூகத்தினிடையேயுள்ள பிணைப்பு ஆகியவற்றிலும் அடிப்படை சீர்திருத்தங்கள் கொண்டுவருவதே சமச்சீர் கல்வியின் நோக்கமாக இருக்கவேண்டும். சுருங்கக் கூறின், சமச்சீர் கல்வி என்பது சமுதாயத்தைச் சமன் செய்யும் ஓர் உன்னதக் கருவியாக விளங்கவேண்டும். இன்றைய கல்விமுறையில் வசதியுள்ளோர், படித்தவர் விட்டுக் குழந்தைகள் வேலைவாய்ப்பும் நல்ல வாழ்க்கையும் கிடைக்கும் கல்வி பெற்றிடும் வேளையில் தாழ்த்தப்பட்ட இனத்தவர், ஏழைகள் ஆகியோர் தொடர்ந்து சமூக அநீதியும் வறுமையும் நிரம்பப்பெற்ற வாழ்க்கையையே அமைந்தவர்களாக இருப்பது ஏற்கத்தக்கதல்ல.

### தேவை இயக்கமல்ல; எழுச்சிமிக்கப்போராட்டம்

இன்றையக் கல்வி முறையால் பேரிழப்பிற்கு உள்ளாகியிருக்கும் மக்களிடம் அவர்களுக்கு ஏற்பட்டுள்ள அவலத்தை நீக்கிட ஒரு சீரிய மாற்றம் தேவை என்பதைப் புரிய வைத்து, அவர்களை ஒரு புரட்சிக்கு ஆயத்தப்படுத்துவதே இன்றையத் தேவை. 'சமச்சீர் கல்வி' என்பது மேடைப் போச்சாக அமையாது. புதியதோர் சமுதாயத்தைப் படைக்கும் ஒரு கருவியாக உருவாக ஒடுக்கப்பட்ட மக்கள் அனைவரும் ஒன்று சேர்தல் வேண்டும். கண்துடைப்புச் செயல்பாடுகளில் மயங்கிடாது அடிப்படை மாற்றங்களுக்குப் போராட வேண்டியது அவர்கள் உரிமையும், கடமையும் என்று அறிவுறுத்த வேண்டும்.

அரசியல் அறிவு சிறிதும் இல்லாத – மக்கள் நலனை அறியாத திரைப்படக் கலைஞர்களின் மாய வலையில்

சிக்கித் தவிக்கும் மக்களிடம் ஓர் எழுச்சியை உருவாக்குவது எளிமையானதொன்றல்ல. சனநாயக நெறிகளிலில்லாது செயல்படும் அரசியல் கட்சிகள், இத்தகைய ஒரு போராட்டத்திற்கு ஆதரவு தரும் என்று நம்புவதற்கிடமில்லை. சமச்சீர் கல்வி ஒரு கானல் நீராகத்தான் இருக்குமோ என்ற அச்சமே மேலோங்கியுள்ளது.

### நீதிமன்றத் தடைகள்

டி.எம்.ஏ. பாய் வழக்கில் இந்தியக் குடிமகன் எவரும் கல்விக்கூடங்கள் தொடங்கி நடத்திடவும் அடிப்படை உரிமை உள்ளதென்றும், அரசு உதவிபெறாவிட்டால், மாணவர் சேர்க்கை, ஆசிரியர் தேர்வு, கட்டணங்கள் ஆகியவற்றில் நிர்வாகங்களுக்கு முழுஉரிமை உண்டென்றும் உச்சநீதிமன்றம் தீர்ப்பு வழங்கியதன் விளைவாகத் தன் நிதிக் கல்விக் கூடங்கள் தங்கு தடையின்றிப் பரவலாகத் தோன்றியுள்ளன.

கல்விக்கூடம் தொடங்கிட உரிமை அளித்த உச்சநீதிமன்றம், அடிப்படைக் கல்விக் கூடத் தரமாகக் கிடைக்காத கோடானுகோடி எளியவரது கல்வி உரிமைபற்றி மூச்சுக்கூட விடாதது நமது நாட்டில் நிலவும் பாகுபாடுகளின் வெளிப்பாடே.

பாய் தீர்ப்பை மாற்றி அமைக்கத் தேவைப்படும் சட்டத்திருத்தங்கள் கொணரப்படா விட்டால், சமச்சீர்க் கல்வியின் முக்கிய அங்கமான பொதுப்பள்ளி முறையினைச் செயல்படுத்த இயலாது.

### கல்விச் செலவு

'பணமுள்ளவர் கட்டணம் செலுத்திப் படிக்கட்டுமே, அரசின் கல்விச் செலவு குறையும். அப்பணத்தைப் கொண்டு பொதுப் பள்ளிகளின் தரத்தை உயர்த்தலாமே' என்பது தன்நிதிக் கல்விக்கூட நிர்வாகிகளின் வாதம். செல்வமுள்ளவர் யாராயினும் அவரவர்களுக்குப் படிக்கின்ற குழந்தைகள் இருந்தாலும் இல்லா விட்டாலும், அரசின் கல்விச் செலவை ஏற்க வேண்டும். அதனை வரியாக அரசிற்குச் செலுத்த வேண்டுமே தவிர, பள்ளிகளுக்கல்ல. அப்பொழுதுதான் பொதுப்பள்ளி முறையில் அனைவரும் கற்பர். இதுவே சமன்செய் கல்வி.

### தாய்மொழிக் கல்வி மட்டுமே சமச்சீர் கல்வியை உருவாக்கும்

ஆங்கிலவழிக் கல்வி, தாய்மொழி வழிக்கல்வி இரண்டும் ஒருங்கே வழங்கப்பெற்றால், ஆங்கில வழிக்கல்வியே சிறந்தது என்ற மாயையை மக்களிடம் தோற்றுவிக்கக் கூடுமாதலால், தாய்மொழிவழிக் கல்வி மட்டுமே கல்விக் கூடங்களில் அளிக்கப்படவேண்டும். இதுவே சமன் செய் கல்வி.

நிலாக்கோள் திட்ட இயக்குநர் திரு.அண்ணாதுரை அவர்கள் தொடக்கக் கல்வி உள்படத் தனது பள்ளிக் கல்வியைத் தமிழ் வழியே சிற்றூர்களில் பெற்றார் என்பதையும், அப்துல்கலாம் உள்பட பல சான்றோரும் தமிழ் வழிக் கல்வியே பெற்றனர் என்பதையும் என்றும் நினைவில் கொள்ளவேண்டும்.

இவ்வாண்டு இயற்பியலில், நோபல் பரிசு பெற்ற மூன்று சப்பானியரும் தங்கள் அனைத்து நிலைக் கல்வியையும் தம் சொந்த நாட்டிலேயே தம் தாய்மொழியிலேயே பெற்றனர் என்பதும் அவர்களில் இருவர் தொடர்ந்து தம் தாயகத்திலேயே கற்பித்தும் ஆய்வுகள் நடத்தியும் செயல்படுகின்றனர் என்பதும் மகிழ்ச்சிக்குரியவை. பத்தாயிரம் ஆண்டுகளுக்கு மேலான வரலாறு படைத்த தமிழினை ஆட்சி மொழியாகவும், பயிற்று மொழியாகவும் நீதிமன்ற மொழியாகவும் செயல்படுத்த அரசுக்கு ஏன் தயக்கம் ?

## சமச்சீர்கல்விக்கு சமாதி ?

–எஸ்.எஸ். ராஜகோபாலன்

'தமது தேர்தல் வாக்குறுதியில் 125ஐ நிறைவேற்றிவிட்டதாகத் தமிழக முதல்வர் பட்டியலிட்டு அறிவித்துள்ளார். இலவசங்களுக்கு ஒரு கால வரையறை உண்டு. தொலைக்காட்சிப் பெட்டிகள் பலவும் வெள்ளத்தில் தொலைந்து போய்விட்டன. பழுதுபார்க்கப் பணமில்லை என்றும் நிலைத்திருப்பது கல்வி. ஒருவர்க்கு நல்ல வாழ்க்கையை அமைத்துக் கொடுக்கும் ஒரு உயரிய சாதனம். தி.மு.க தேர்தல் அறிக்கையில் இடம் பெறும் 'சமச்சீர்கல்வி' பற்றி முதல்வர் மூச்சுவிடாதது வியப்பல்ல. காலந்தள்ளிப்போடுவதிலிருந்தே அரசிற்கே அதனைச் செயல்படுத்தும் மன உறுதியில்லை என்பது தெட்டத் தெளிவு. பணத்தேவையற்ற பல செயல்பாடுகளை உடனடியாக மேற்கொள்ள இயலும். இனி புதிய கட்டண ஆங்கிலவழிப்பள்ளிகள் தொடங்க அனுமதி அளிக்கப்படாதென்றும், இந்தாண்டில் தொடக்கக் கல்வி முழுமையும் தமிழ் வழியிலே அளிக்கப்படுமென்றும், ஆறாம் வகுப்புத்தொடங்கி படிப்படியாக தமிழ்வழிக்கல்வி அனைத்து வகுப்புகளுக்கும் கொண்டு வரப்படுமென்றும், பள்ளிகளில் மாணவர் மீதான வன் கொடுமைகளை ஒடுக்கவும் தமிழக அரசு உடனடியாகச் செயல்படவேண்டும். நாளிதழ்களில் இரண்டாண்டுகளாக அறிவியல் ஆசிரியரே இல்லாத பள்ளி போன்ற செய்திகள் வருகின்றன. ஆசிரியரில்லா அரசுப் பள்ளிகள் இல்லாது இருப்பதாக உறுதி செய்வது அரசின் கடமை. பள்ளியில் சேர்ந்த மாணவர்க்கு முறையான கல்வி அளிக்கத் தவறுவது மன்னிக்க முடியாத ஏமாற்று வேலையாகும். சமச்சீர் கல்வித் திட்டம் கைவிடப்படுகின்றது என்று முதல்வர் கூற இயலுமா ?

**–சிந்தனையாளன், பொங்கல் சிறப்பு மலர் 2009**

# ஏலம் போடப்படும் பள்ளிப்படிப்பு

**–இரா.செழியன்**

காலையில் எழுந்ததும் நடைப்பயிற்சியில் ஈடுபாடுடைய பெரியவர்கள் கடற்கரையிலும், சென்னையில் ஆங்காங்குள்ள பூங்காவனங்களிலும் தம்மையொத்த வயதுடையவர்கள் புடைசூழ பவனி வருவதுடன், அன்றாட அரசியலிலிருந்து அங்காடி விலை உயர்வு வரை விசாரணை நடத்தித் தீர்ப்பு வழங்கி விடுவார்கள்.

தற்பொழுது குளிர்காலமாகையால், காலைக் கதிரவன் எழுந்து தனது கதிர்க்கரங்களால் தட்டி எழுப்பிய பின்புதான் பெரியவர்களால் எழுந்திருக்க முடியும். இருப்பினும், பள்ளிக்கூடங்களில் தாம் பெற்ற செல்வங்களுக்கு அல்லது பேரப்பிள்ளைகளுக்கு இடம் பிடிப்பதற்குத் தற்பொழுதே நல்ல பள்ளிக்கூடங்களைத் தேடி விண்ணப்பங்கள் தரப்படும் என்றாலும், அந்தப் பள்ளிக்கூடத்தின் வெளியில் பொழுது விடிவதற்கு முன்னதாகவே, பெய்கிற பனியையும், நடுங்கவைக்கும் குளிரையும் பொருட்படுத்தாமல் வரிசையில் பெரியவர்கள் காத்திருக்கிறார்கள். பார்க்கப்போனால் சிறுவர்களுக்கான வகுப்புகள் அடுத்த 2009–ம் ஆண்டு ஜூன் மாதத்தில்தான் தொடங்கும். ஆயினும், இப்பொழுதே பெரியவர்கள் அதாவது வயதில் பெரியவர்கள், செல்வச்செழிப்பில் பெரியவர்கள் அல்லாதவர்கள் முயற்சிகளை ஆரம்பிக்க வேண்டிய கட்டாயம் இருக்கிறது.

தம்முடைய மூன்று வயது பேரனை ஒரு குறிப்பிட்ட பள்ளிக்கூடத்தில் முதலாவது மழலை வகுப்பில் (எல்.கே.ஜி) சேர்ப்பதற்காகத் தாம் படும் அவதியை என் நண்பர் ஒருவர் என்னிடம் கூறினார். ‘‘மற்ற பிரசித்தி பெற்ற பள்ளிக்கூடங்களில் சேர்வதற்கு அதிகமான நுழைவுக் கட்டணம் இருப்பதால் இந்தப்பள்ளிகளில் பையனைச் சேர்த்திட நான் முயற்சி எடுத்தேன். அந்தத் தனியார் பள்ளிக்கூடத்தின் தாளாளர் என்னை இனிய முகத்துடன் வரவேற்று, என்னுடைய வேண்டுகோளை அமைதியாகக் கேட்டு, கடைசியாக அவர் சொன்னது: 'எல்.கே.ஜி. வகுப்பில் சேர எங்கள் பள்ளியில் நுழைவுக் கட்டணம் ரூபாய் இரண்டு லட்சம் தான்'.

சென்னையில் மழலையர்–சிறுவர்களுக்கான கல்விக்கூடங்கள் பலவற்றின் பெயரில் "ஆஷ்ரம்" என்றிருக்கிறது. பழங்காலத்தில் முற்றும் துறந்த முனிவர்கள் வசித்த பர்ணசாலைகளில் சீடர்களாகச் சேர்ந்தவர்கள் கல்வி அறிவு பெற்றார்கள். தற்காலத்திய ஆஷ்ரமங்களில் இடம்பிடிக்க சீமான் வீட்டுப் பிள்ளைகளால்தான் முடியும். கோடீஸ்வரச் சீமான்கள் வீட்டுப்பிள்ளைகளுக்குப் பணிபுரிய அரண்மனை போன்ற ஆஷ்ரமங்கள் காத்திருக்கின்றன.

நாட்டில் பிறந்த அனைவருக்கும் கல்வி, உடல்நலம், வேலை வாய்ப்பு, தரமான வாழ்க்கை வசதிகள் ஆகியவை அடிப்படை மனித உரிமைகளாக ஏற்று அவற்றைத் தரவேண்டிய பொறுப்பும், கடமையும் அரசாங்கத்துக்கு இருக்கிறது. 1972 டிசம்பர் மாதத்தில் சென்னையில் கூடிய அகில இந்திய காங்கிரஸ் கட்சி மாநாட்டில், சுதந்திர இந்தியாவிற்கான அரசமைப்புச் சட்டத்தை வரையறுப்பதற்கு மோதிலால் நேரு தலைமையில் ஒரு குழு அமைக்கப்பட்டது. ஆறு மாதத்திற்குப் பிறகு அந்தக் குழு தந்த அறிக்கையில், 'கட்டாய இலவசக் கல்வி' ஓர் அடிப்படையான உரிமையாக வைக்கப்பட்டது. அதையொட்டி சுதந்திர இந்தியாவின் அரசியல் நிர்ணய சபை குழுவின் பார்வைக்கு வைக்கப்பட்ட வரைவு அரசமைப்புச் சட்டத்தில் பதினான்கு வயது வரை எல்லா சிறுவர்களுக்கும் கட்டாய இலவசக் கல்வியை, அரசமைப்புச் சட்டம் அமல் படுத்தப்பட்டதிலிருந்து பத்தாண்டுகளுக்குள் தர வேண்டும் என்பது அடிப்படை உரிமையாக இருந்தது. ஆயினும், அந்தப் பத்தாண்டுகளுக்குள் இவ்வாறான கட்டாய இலவசக் கல்வியைத் தருவதற்கு அரசாங்கத்தால் முடியுமா என்ற கேள்வி எழுந்தபொழுது, எல்லோருக்கும் கட்டாய இலவசக் கல்வி என்பது அடிப்படை உரிமைப் பிரிவிலிருந்து எடுக்கப்பட்டு அரசாங்கத்தின் வழிமுறைக் கொள்கைகள் பிரிவுக்குள் சேர்க்கப்பட்டது. வழிமுறைக் கொள்கைகள் பிரிவில் கூறப்பட்டதை நிறைவேற்றும் முறையில் அரசாங்கம் முயற்சி எடுக்குமே தவிர அதைக் கட்டாயப்படுத்தி நீதிமன்றத்தில் யாரும் வழக்குத் தொடர முடியாது. பத்து ஆண்டுகள் என்று விதிக்கப்பட்ட காலவரையறை, கடந்த அறுபது ஆண்டுகளில் இன்னமும் நிறைவேற்றப்படவில்லை.

ஆயினும், உன்னிகிருஷ்ணன் எதிர் ஆந்திரப்பிரதேச அரசாங்கம் என்ற 1993–ம் ஆண்டு உச்ச நீதிமன்ற வழக்கில் கட்டாய இலவசக்கல்வி என்பதை அரசமைப்புச் சட்டத்தின் 21–வது அடிப்படை உரிமையின்கீழ் முழுமையாக நிறைவேற்ற வேண்டிய கடமை அரசாங்கத்திற்கு இருக்கிறது என்று முடிவு செய்தது. இதை அரசாங்கம் மறுதலிக்கவில்லை என்றாலும், அதற்கான 86–வது அரசமைப்புச் சட்டத்திருத்தத்தை 2002 மே மாதத்தில் நாடாளுமன்றத்தில் வாஜபேயி அரசாங்கம் நிறைவேற்றியது. இதன் மூலம் 6 முதல் 14 வயது வரை உள்ள சிறுவர்களுக்கு மட்டும் கட்டாய இலவசக்கல்வி வழங்குவதை ஓர் அடிப்படை உரிமையாக அப்பொழுது ஆக்கியது. முன்பு இருந்த அரசமைப்புச் சட்ட விதியின்படி, பிறந்த ஒவ்வொருவருக்கும் 14 வயதுவரை கட்டாய இலவசக் கல்வியை அரசாங்கம் தரவேண்டும் என்று இருந்தது. ஆனால், 2004–ல் நிறைவேற்றப்பட்ட திருத்தத்தின்படி 6 வயது வரை உள்ள சிறுவர்களுக்காகத்

தரப்பட வேண்டிய மழலைக் கல்விக்கான பொறுப்பு அரசாங்கத்திடமிருந்து நீக்கப்பட்டது. 6 வயதுக்கு

அரசாங்கம் தரும் வாக்குறுதி ஏட்டளவில் இருக்கிறதே தவிர, நாட்டிலுள்ள சாமானிய மக்களுக்குச் சிறிதளவும் பயன்படவில்லை. மூன்று வயதில் மழலையர் வகுப்பில் சேர இரண்டு லட்ச ரூபாய் தேவையென்றால், எத்தனை பெற்றோர்களால் இந்தக் கல்விக்கூட வியாபாரத்தில் போட்டியிட முடியும் ?

கல்வி என்பது நாட்டு மக்களின் அடிப்படை உரிமை என்பது அரசமைப்புச் சட்டத்தில் இருந்தாலும், இன்றைய இந்தியாவில் படிப்பு என்பது பணம் படைத்தோரின் ஏகபோக உரிமையாக ஆகிவிட்டது. அதேசமயம் கல்வியறிவு இல்லாத பெரும்பான்மை மக்களை ஏமாற்ற ஐந்தாண்டுக்கு ஒரு முறை எப்படியாவது கவர்ச்சிகரமான வாக்குறுதிகளைத் தந்து ஆட்சியை மீண்டும் மீண்டும் பிடிப்பது ஆளவந்தார்களுக்கு எளிதான முறையாக, பழகிவிட்ட அரசியல் பாடமாக ஆகிவிட்டது !

**– தினமலர், 20.12.2008**

**நமது நாட்டின் சட்டங்களையும் அவை தற்போது செயல்படுத்தப்படும் நிலைமையையும் பரிசீலனை செய்து பார்க்கும் போது, பாலியல் வன்முறைக்கு பலியான குழந்தைகள் தமக்கான நீதியைப் பெறுவதற்கும், வாழ்க்கையைத் தொடர்ந்து சுமுகமாக நடத்திச் செல்வதற்குமான வாய்ப்புகள் குறைந்து வருகின்றன. இந்தக் கொடுஞ்செயலை முழுமையாகத் தடுத்து நிறுத்துவதற்கு சட்டம் மற்றும் சமூகம் இரண்டிலும் இப்போதுள்ள சூழல் உடனடியாக மாற்றப்பட வேண்டும் என்கிறார் அருண்குமார் சாஹூ.**

ஒரு சமூகம் தன்பாலுள்ள பெண்கள் மற்றும் குழந்தைகளை எவ்விதம் நடத்துகிறது என்பதை வைத்தே அதன் தரம் மதிப்பிடப்படுகிறது. அதன் நீதித்துறை அமைப்புக்கும் கூட இது பொருந்தும். குழந்தைகளை பாலியல் வன்முறைக்கு உட்படுத்துவதைக் காட்டிலும் அருவெறுப்பூட்டும் நிகழ்வு வேறேதுமில்லை. ஏற்கனவே பாதிக்கப்பட்ட குழந்தைகளை மென் மேலும் பாதிப்புக்கு ஆட்படுத்தக் கூடிய நீதித்துறை நடைமுறைகளைக் காட்டிலும் கண்டிக்கத்தக்க அம்சம் வேறேதுமில்லை. பாலியல் வன்முறையால் பாதிக்கப்பட்ட குழந்தையொன்றின் புனர்வாழ்வில் கொஞ்சமேனும் முன்னேற்றம் காணவேண்டுமானால், வழக்குப் புலனாய்வு, குறுக்கு விசாரணை மட்டுமின்றி ஒட்டு மொத்த சட்ட வடிவமைப்பையும் கூட நாம் முழுமையாக செம்மைப்படுத்த வேண்டியிருக்கிறது.

குழந்தைகளை பாலியல் வன்முறைக்கு ஆட்படுத்துவோர் சமூகத்தின் எல்லா அடுக்குகளிலும் நீக்கமற நிறைந்திருக்கிறார்கள். இது போன்ற சம்பவங்கள் ஐரோப்பிய நாடுகளில் தான் அதிகமாக நடைபெறுவதாக பொதுவான நம்பிக்கை நிலவுகிறது. ஆனால் தெற்காசிய

நாடுகளிலும் கூட இவை பரவலாக நிகழ்கின்றன என்பது தான் உண்மை. இந்தியாவில் இந்நிகழ்வுகள் மிக அதிகமாகி இப்பிரச்சினை ஆபத்தின் எல்லையைத் தொட்டுநிற்கிறது. ஐரோப்பிய நாடுகளில் இது தொடர்பான சட்டங்கள் விரிவாக உள்ளன. இந்தியாவில் இக்குற்றம் தொடர்பாக இந்திய தண்டனைச் சட்டம், குற்றவியல் சட்டம் மற்றும் சான்றுகள் தொடர்பான சட்டங்களில் உள்ள சில பிரிவுகளன்றி உறுதியான செயல் முறை குறித்த சட்டப்பிரிவுகளைக் காண்பது அரிது. ஆழ்ந்து பார்க்கும் போது இத்தகைய குறைந்த அளவு சட்டவழிமுறைகளிலும் கூட குழந்தைகள் மீதான பாலியல் வன்முறை குறித்த பிரச்சினைக்கு தீர்வு காண்பதற்கு வழிகள் இல்லை. ஒரு நிகழ்வில் பாதிக்கப்பட்டவர் தனது குற்றச்சாட்டை ஆதாரபூர்வமாக நிலை நிறுத்த வேண்டுமென்று நீதிமன்றங்கள் கட்டாயமாகக் கோருவது பொது விதியாக இருக்கிறது.

## மாணவிகளிடம் சில்மிஷம் செய்த ஆசிரியர் கைது

பந்தலூர் அருகிலுள்ள பிதர்காடு துவக்கப் பள்ளியில் மாணவ, மாணவிகளிடம் ஆபாச முறையில் நடந்து கொண்ட ஆசிரியர் 'சஸ்பெண்ட்' செய்யப்பட்டு, கைது செய்யப்பட்டார்.

நீலகிரி மாவட்டத்தில் பந்தலூர் அருகே பிதர்காட்டு ஊராட்சி ஒன்றிய துவக்கப்பள்ளியில் தமிழ் வழி மற்றும் மலையாள வழியில் கல்வி போதிக்கப்படுகிறது. தமிழ் வழியில் 105 பேர், மலையாள வழியில் 133 பேர் என மொத்தம் 238 மாணவ, மாணவிகள் படிக்கின்றனர். இப்பள்ளியில் தலைமையாசிரியர் உட்பட ஏழு ஆசிரியர்கள் பணியாற்றுகின்றனர்.

அம்பலமூலா பகுதியைச் சேர்ந்த பிரபாகரன்; உதவி ஆசிரியராக உள்ளார். இவர், பள்ளி தலைமையாசிரியர் பாலகிருஷ்ணனின் சகோதரர். ஆசிரியர் பிரபாகரன் அடிக்கடி பள்ளிக்கு வராமல் இருந்ததுடன், பள்ளி மாணவ, மாணவிகளுக்கு பாடம் கற்பிக்காமல், ஆபாசமாக பேசுவதாக புகார் இருந்தது. ஐந்தாம் வகுப்பு படிக்கும் மாணவிகள் மத்தியில் அமர்ந்து கொண்டு சில்மிஷ செயல்களில் ஈடுபட்டதாக கூறப்படுகிறது. இதுபற்றி பள்ளியின் பெற்றோர் ஆசிரியர் கழகத் தலைவர் ஜமால் முகமது, பள்ளி தலைமையாசிரியரிடம் நவம்பர் 22ம் தேதி புகார் தெரிவித்துள்ளார். இந்நிலையில், கடந்த நவம்பர் 24 அன்று பள்ளிக்கு கிராம கல்விக் குழு தலைவர் பிரதீப்குமார், கவுன்சிலர்கள் ஞானசேகர், அம்சு மற்றும் பெற்றோர்–ஆசிரியர் கழக உறுப்பினர்கள் பள்ளியை முற்றுகையிட்டனர்; சம்பந்தப்பட்ட ஆசிரியர் மீது நடவடிக்கை எடுக்குமாறு வலியுறுத்தினர்.

ஆனால், சம்பந்தப்பட்ட ஆசிரியர் பிரபாகரன் பள்ளிக்கு வரவில்லை. இதனால், ஆத்திரமடைந்த பெற்றோர் சாலை மறியல் செய்ய முற்பட்டனர். கல்வித்துறை அதிகாரிகளுக்கு தகவல் தெரிவித்தனர். இதையடுத்து, சம்பந்தப்பட்ட ஆசிரியர் பிரபாகரன், 'சஸ்பெண்ட்' செய்யப்பட்டதாக, மாவட்ட தொடக்கக் கல்வி அலுவலர் தெரிவித்தார்.

அதை ஏற்றுக்கொள்ளாத பெற்றோர், பிரச்னைக்குரிய ஆசிரியரை கைது செய்யுமாறு கோஷம் எழுப்பினர். அவர் மீது நடவடிக்கை எடுப்பதாக போலீசார் உறுதியளித்த பின் கலைந்து சென்றனர்.

மறுநாள் மாலை ஆசிரியர் பிரபாகரனை தேவாலா போலீஸ் இன்ஸ்பெக்டர் கிருஷ்ணசாமி கைது செய்து, கூடலூர் நீதி மன்றத்தில் ஆஜர்படுத்தினார்.

**– 25.11..2008, தினமலர்**

# குழந்தைகள் மீதான பாலியல் வன்முறைக்கு முற்றுப்புள்ளி வைப்போம்!

ஆனால், பாலியல் தாக்குதல் என்பது மூடிய கதவுகளுக்குப்பின்னால் நிகழ்வதால் தனியொரு சாட்சியால் அதனை ஆதார பூர்வமாக நிரூபிப்பதற்கான சாத்தியக்கூறுகள் மிகக்குறைவு என்பதே உண்மை. பாலியல் தாக்குதலால் பாதிக்கப்பட்டவரது வாக்குமூலத்தை முக்கிய ஆதாரமாக ஏற்கமறுத்து, அதனை ஆதாரபூர்வமாக நிரூபிக்க வேண்டுமெனக் கோருவது பாதிக்கப்பட்டவரை மேலும் இழிவு படுத்துவதாகும். குற்ற நிகழ்வுகளை ஏற்கமறுக்கிற மரபுள்ள இந்திய சமூகத்தில் ஒரு சிறுமி அல்லது பெண் தனக்கு நிகழ்ந்த அநீதியை வெளிப்படையாக எடுத்துக் கூறத் தயங்குவார். ஏனெனில் அவ்வாறு கூறும்போது அவரது கற்பு நெறி குறித்து தேவையற்ற குற்றச்சாட்டுகள் எழுவதற்கான வாய்ப்பு கூடுதலாகும். அவ்வாறு கூறுவதால் தானே சமூகத்திலிருந்து விலக்கிவைக்கப் படக்கூடிய ஆபத்து ஏற்படும் என்பதும் அவருக்குத் தெரியும். அதே போல இத்தகைய துயர சம்பவம் குறித்த மனவேதனை அதனைத் தொடர்ந்த பாதிப்புகளிலிருந்து அவர் மீள்வது கூட மிக சிரமம் தான். ஏன் குழந்தைகள்? குழந்தைகள் மென்மையான இயல்புடையவர்கள், அவர்களை எளிதாக வசப்படுத்தலாம். இவற்றுக் கெல்லாம் மேலே குழந்தைகள் கையருகே இருக்கிறார்கள். அதனால் தான் எண்ணற்ற குழந்தைகள் தொடர்ந்து நிகழும் கொடுமையிலிருந்து தப்பிக்க இயலாதவாறு சிக்கிக்கொண்டு விவரிக்கவே இயலாத வகைகளில் எல்லாம் துன்புறுத்தப்படுகிறார்கள்.

குழந்தைகள் மீதான பாலியல் வன்முறை நிகழ்வுகளில் பெரும்பாலானவை புகாராகப்பதிவு செய்யப்படுவதில்லை, அதனால் வழக்கு நடவடிக்கையுமில்லை. எவர் மீதாவது குற்றம் சுமத்தப்பட்டு வழக்கு விசாரணை என்று வருமானால் குற்றத்தை நிரூபிப்பது கடினமென்பதால் பெரும்பாலும் தண்டனை என்பதே இல்லை. மேலும் குற்றவியல் நிதிமன்றங்களில் நடைபெறுகின்ற விசாரணைகளில் ஒவ்வொரு முறையும் ஒவ்வொரு காரணத்தைச் சொல்லி விசாரணையை ஒத்திவைக்கக் கோரி காலங்கடத்துவதும், குறுக்கு விசாரணையின் போது பாதிக்கப்பட்ட குழந்தையை குழப்புவதும், இழிவு படுத்துவதும் குற்றவாளியின் தரப்பு வழக்கமாக மேற்கொள்ளும் தந்திரமாகும். காலங்காலமாக இழுத்தடிக்கிற, மிக சிக்கலான நீதிமன்ற நடைமுறைகள் காரணமாக பாதிக்கப்பட்ட குழந்தை தனது குற்றச்சாட்டை திரும்பப்பெறுமளவுக்கு பயமுறுத்திப் பணிய வைக்க குற்றவாளிக்கு வாய்ப்புகள் தோன்றுகின்றன. குழந்தைகள் மீதான பாலியல் வன்முறை தொடர்பான சர்வதேச புள்ளிவிவரம் கூறுகிறபடி குறைந்தபட்சம் நான்கில் இரண்டு பெண்குழந்தைகளும், ஆறில் ஒரு ஆண்குழந்தையும் பாலியல் வன்முறைக்கு பலியாகின்றன. சட்டம் குறிப்பிட்ட எல்லைக்கு மேல் செயல்பட மறுப்பதாலும், உணர்வற்ற நடைமுறைகளாலும் இத்தகைய பாலியல் வன்முறையால் பாதிக்கப்பட்ட குழந்தைகளது புனர்வாழ்வு முயற்சிகள் முழுமை பெற இயலுவதில்லை. குற்றவாளிகள் தண்டனை பெறுவதற்குரிய வாய்ப்புகள் குறைந்ததாக, பாதிக்கப்பட்ட குழந்தை தனக்கு நேர்ந்த வேதனையை மீண்டும் மீண்டும் அனுபவிக்க நேர்வதாக இச்சட்டம் உள்ளது.

ஒவ்வொரு தேசமும் தனது மாபெரும் சொத்தான மானுட குலத்தைப் பாதுகாத்துப் பராமரிப்பதோடு, அதன் வளர்ச்சிக்கும் உதவிட வேண்டியது கடமையென்பதாகக் கூறப்படுகிறது. குழந்தைகள் நாளைய தேசத்தின் குடிமக்களாதலால் நாட்டின் வளர்ச்சி குழந்தைகள் நலனைப் பொறுத்தே அமையும். எனவே குழந்தைகள் மிகுந்த அக்கறையோடு, கூரிய கவனத்தோடு கண்காணிக்கப்பட வேண்டியவர்களாகிறார்கள். சமூகம் மற்றும் அரசுக்கு குழந்தைகள் நலன் குறித்த மாபெரும் பொறுப்புணர்வு வேண்டும். குழந்தைகளை நல்ல உடல் ஆரோக்கியத்துடனும், நல்ல மன நிலையிலும், உயர் நெறிகளோடும் வளர்த்தெடுக்க வேண்டிய கடமை ஒவ்வொருவருக்கும் உண்டு. குழந்தைப்பருவ வயது வரம்பு 12 ஆண்டுகள் அல்லது, 14 ஆண்டுகள் என்று குழந்தைகள் உளவியல் வல்லுனர்களிடையே மாறுபட்ட கருத்து உள்ளது. மீன்குஞ்சு பிறந்தவுடனே தனித்து வாழக் கற்றுக்கொள்கிறது. ஆனால் மானுடக் குழந்தைகள் நீண்டகாலம் வரை மற்றவர்களை சார்ந்து வாழவேண்டியிருக்கிறது. இந்த விசயத்தில் சட்டம் பிரதான பாத்திரம் வகிக்கிறது. சட்டம் சமூகம் முழுமைக்கும் மட்டுமல்லாது ஒவ்வொருவருடைய சொந்த வாழ்விலும் கூடப்பங்கேற்கிறது. முறையாக வடிவமைக்கப்பட்ட சட்ட வழிமுறைகளின் துணையல்லாது மானுட குலம் ஒரு சமூகமாக ஒன்றுபட்டு இருக்க இயலாது. நமது சமூகம் எவ்விதமான சட்ட நெறிமுறைகளால் பிணைக்கப்பட்டிருக்கிறதோ அதைப்பொறுத்துத்தான் நமது மகிழ்ச்சியான வாழ்க்கை முறை அமையும். இன்னும் விரிவாகக் கூறுவதானால் நாம் பிறந்த வினாடி முதல் மரணமடைகிற கடைசி வினாடி வரையில் சட்டம் தான் நமது வாழ்க்கையை நடத்திச்செல்கிறது. நமது பிறப்புச்சான்று மற்றும் இறப்புச்சான்று ஆகிய சட்ட பூர்வமான ஆவணங்களுக்கு இடைப்பட்ட நமது வாழ்நாளில் நாம் நல்ல முறையில் வாழ்க்கையை நடத்திச் செல்வதே சட்டத்தின்

துணையோடு தான். புதிதாகப் பிறந்த குழந்தை கூட சட்டத்தால் கண்களுக்குத் தெரியாத வகையில் பாதுகாக்கப்படுகிறது. அதன் இருப்பை நிலை நிறுத்துவதும், அதன் உரிமைகளைப் பாதுகாப்பதும் கூட சட்டம் தான். உண்மையில் சட்டம் தவிர வேறெந்த சமூகக் கூறும் இந்த அளவுக்கு மானுட மான்புகளோடு இருப்பதில்லை. வாழ்வின் எல்லா அம்சங்களையும் அலசி ஆராயுமளவுக்கு சட்டமன்றி வேறேதும் முக்கியத்துவம் அளிப்பதில்லை. சமூகம் சிறந்த முறையில் செயல்பட சட்டம் ஒரு சிறப்புக்காரணியாக இருக்கிறது. சட்டமன்றி வாழ்வே இல்லை. வேறெந்தக் கலையோ அல்லது அறிவியலோ சட்டத்தைப்போல மனித வாழ்க்கையோடு பின்னிப்பிணைந்ததாக இல்லை.

ஒரு நாகரீக சமுதாயத்தில் குழந்தைகள் நலன் என்பது உயரிய முக்கியத்துவம் வாய்ந்த ஒன்றாகும். ஏனெனில், குழந்தைகள் நாளைய தேசத்தின் சொத்துக்கள். எனவே, அரசு குழந்தைகள் நலனை புறக்கணிக்கக் கூடாது. இந்தியாவின் எல்லா சட்டங்களிலும் முதன்மையாக விளங்குகிற இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் முகவுரையிலேயே குழந்தைகள் நலன் மற்றும் உரிமைகள் குறித்து விரிவாக விளக்கப்பட்டிருக்கிறது. இந்த முன்னுரையில் இந்தியக் குடிமக்கள் அனைவருக்கும் சமூக, பொருளாதார, அரசியல் சமநீதி வழங்கப்பட வேண்டுமென குறிப்பிடப்பட்டுள்ளது. குழந்தைகளுக்கும் இது பொருந்தும்.

இந்திய அரசியலமைப்புச் சட்டப்பிரிவு 15(3)ல் குழந்தைகள் மற்றும் பெண்கள் நலனுக்கான தனிச்சட்டங்களை அரசு உருவாக்குவதற்கு இந்தச் சட்டம் தடையாக இருக்காது என்று குறிப்பிடுகிறது. சட்டப்பிரிவு 23 மனிதர்களைக் கடத்துவதை எல்லா வகையிலும் தடைசெய்கிறது. இதில் குழந்தைகளும் அடக்கம். ஆபத்து விளைவிக்கும் பணிகளில் 14 வயதுக்குட்பட்ட குழந்தைகளை வேலைக்கு அமர்த்துவதை சட்டப்பிரிவு 24 தடைசெய்கிறது. அதேபோல சட்டப்பிரிவு 36(e) மற்றும் (f), சட்டப்பிரிவுகள் 41, 42,45 மற்றும் 47 ஆகியவை குழந்தைகள் நலன் தொடர்பாக அரசு பின்பற்ற வேண்டிய கொள்கைகளை விவரிக்கின்றன. மேலும் சட்டப்பிரிவு 39(f) குழந்தைகள் நல்ல ஆரோக்கியமான சூழலில் தங்கள் வளர்ச்சிக்கான வாய்ப்புக்களைப் பெறுவதற்கு அரசு எடுக்கவேண்டிய நடவடிக்கைகளை விவரிக்கிறது. அரசியலமைப்புச் சட்டம் வாயிலாகக் கொடுக்கப்பட்டுள்ள சட்ட உரிமைகள் மட்டுமல்லாது, குழந்தைகள் நலனுக்கான வேறு பல சட்டங்களும் நடைமுறையில் உள்ளன. இந்தச் சட்டப்பிரிவுகளில் குழந்தைகள் தங்களது உடல் ஆரோக்கியம், குடும்பச்சூழல் ஆகியவற்றை பாதுகாத்துக் கொள்வது பற்றியும், சுரண்டலை, துன்புறுத்தலை எதிர்த்துப் போராடுவதில் தங்களது உரிமைகளை செயலாக்குவது பற்றியும் குறிப்பிடப்பட்டுள்ளது.

தேசிய, சர்வதேசிய அளவில் இவ்வளவு சட்டப்பாதுகாப்புகள் செய்யப்பட்டிருப்பினும் கூட குழந்தைகள் சுரண்டப்படுவது நின்றபாடில்லை. தேசிய பெண்கள் ஆணையத்தின் கூற்றுப்படி, பாலியல் வன்முறைஅதிகரித்து வரும் அதேவேளையில் பாதிக்கப்பட்ட குழந்தையோ அல்லது பாதிக்கப்பட்ட பெண்ணோ இது குறித்து புகார் பதிவு செய்து நடவடிக்கை கோர இப்போது நடைமுறையில் உள்ள சட்டம் போதிய திறன் உள்ளதாக இல்லை. இது ஒரு முரண்பாடு அல்லவா?. ஒவ்வொரு குற்ற நிகழ்விலும் குற்றத்தை சந்தேகத்திற்கிடமின்றி நிரூபிக்கிற பொறுப்பு, குற்ற நிகழ்வுக்கான சூழலை விவரிக்கிற பொறுப்பு பாதிக்கப்பட்டவர் தலையில் சுமத்தப்படுகிறது. இதில் எப்போதும் மாற்றம் இல்லை. குற்றம் சுமத்தப்பட்டவர் மீது பெரிதான சந்தேகம் இருந்தாலும், சாட்சிகள் மூலமும், பதிவுசெய்யப்பட்ட ஆதாரங்கள் மூலமும் அவரது குற்றச்செயல் சந்தேகத்திற்கு இடமின்றி நிரூபிக்கப்பட்டாலொழிய அவர் தண்டிக்கப்டுவது இயலாது. தற்போது நீதிமன்றங்கள் இதுபோன்ற சம்பவங்களில் தீவிர கவனம் செலுத்துகின்றன. எனவே பாதிக்கப்பட்டவரது வாக்குமூலம் எல்லா சமயங்களிலும் ஆதாரபூர்வமாக நிரூபிக்கப்பட வேண்டுமென்பது அவசியமில்லை. தற்போது உயர்நீதிமன்றங்கள் பாதிக்கப்பட்டவர் அளிக்கின்ற வாக்கு மூலத்தை அப்படியே ஏற்றுக்கொண்டு தீர்ப்பளிக்கத்துவங்கியுள்ளன. மேலும் குற்றம் சுமத்துபவரை குறுக்கு விசாரணை செய்யாமலே கூட குற்றவாளிகளுக்கு தண்டனையும் அளிக்கின்றன. ஏனெனில் சிலவேளைகளில் பாதிக்கப்பட்ட பெண்கள் குற்றம் நிகழ்ந்த சூழல் குறித்து விரிவாக விளக்குவதற்குறிய மனநிலையில் இல்லாமல் இருக்கலாம். வாதங்களை ஆழ்ந்து கவனிக்க அவரால் இயலாது போகலாம். எனினும் நாம் கோருகிற அளவுக்கு முன்னேற்றம் இன்றும் நிகழ்ந்து விடவில்லை.

உலகம் முழுமையும் மாற்றம் நிகழ்ந்துவரும் இந்த வேளையில், மானுட குல மதிப்பீடுகளும், மானுட குல நன்மைக்காக உழைப்போர் எண்ணிக்கையும் உயர்ந்து வரும் இந்த வேளையில், நாம் நமது பழைய கொள்கைகளைக் கைவிட்டு புதிய மாற்றங்களைத் தழுவ வேண்டும். குழந்தைகள் நமது தேசத்தின் அடித்தளமாக விளங்குகின்றனர். குழந்தைகள் நலன் மற்றும் வளர்ச்சிக்கான கொள்கைகளை நாம் அவசர அவசியமாக முழுமையாக வடிவமைக்க வேண்டும். நீதியரசர் சுப்பாராவ் சொல்வது போல ‘‘சமூக நீதி என்பது குழந்தைகளிலிருந்து துவங்கவேண்டும்’’ இளம் தளிர் ஒன்றை நாம் கவனமாக பாதுகாத்துப் பராமரிக்காது விட்டு விட்டோமானால் அது பயன்தரும் பெரிய மரமாக வளர்வது கடினம். ஆகவே சமூக நீதி என்பதன் துவக்கச்

செயல்பாடாக 'குழந்தைகள் நலனுக்கான கொள்கை' யை நாம் வகுத்தாக வேண்டும்.

**– Combat law, March April 2008**

(ஆயுதக்கடத்தல், போதைப் பொருள் கடத்தலுக்குப் பிறகு ஆட்கடத்தல் தொழில்தான் மூன்றாவது, பெரிய கடத்தல் தொழிலாக உருமாறி வருகிறது. இதைப் பற்றிய தவல்களை அறிய மாறுவேடத்தில் சென்று சம்பந்தப்பட்டவர்களிடம் விசாரித்த போது கிடைத்த தகவல்கள் அடிப்படையில் எழுதப்பட்ட கட்டுரை)

இந்தியாவின் மொத்த மக்கள் தொகையில், வறுமைக் கோட்டிற்கு கீழே உள்ளவர்களின் விகிதாச்சாரம் 60 சதவீதத்திலிருந்து 42 சதவீதமாகக் குறைந்துள்ளது என இந்திய அரசு கூறினாலும், உலக வங்கியின் கணக்குப்படி ஏறக்குறைய 46.70 கோடி சராசரி இந்திய மக்கள் நாளொன்றுக்கு ரூ.60க்கு கீழேதான் வருமானம் உள்ளவர்களாக இருக்கின்றனர். சொல்லப்போனால், ஒட்டுமொத்த இந்தியர்களில் சரிபாதி மக்கள் அன்றாட வயிற்றுப் பாட்டுக்கேபோதாதவர்களாகவே இருக்கின்றனர்.

மிகுந்த வறுமையையும், பணத் தேவையையும் மையமாகக் கொண்டு நடக்கும் இந்த தொழிலில் பெண்களே பலியாடுகளாக பயன்படுத்தப்படுகின்றனர். ஏனெனில் அவர்கள் தங்களது ஒவ்வொரு அடிப்படைத் தேவைகளுக்கும் பிறரையே சார்ந்திருக்க வேண்டியுள்ளது.

அவர்களின் குடும்ப உறுப்பினர்களும், நம்பிக்கைக்கு உரியவர்களும் தங்களது பணத் தேவையை காரணம் காட்டியே இவர்களை இந்த வியாபார நரகத்தில் தள்ளிவிடுகின்றனர். பாதிக்கப்பட்டவர்களில் பெரும்பான்மையோர் சின்னஞ்சிறு குழந்தைகளாகவே இருக்கிறார்கள்.

### பூட்டப்பட்ட கதவுகளின் பின்னால்

என்னை ஒரு மூன்று வயது குழந்தையின் தாயாகக் காட்டிக் கொண்டு,தில்லியிலுள்ள குறிப்பிடத்தக்க வீட்டு வேலைக்கு ஆள்பிடித்துத்தரும் நிறுவனங்களுக்குச் சென்று பார்த்தோம். அப்போது எப்படி இந்த இளம் சிறுமிகள் மேற்குவங்கம், ஜார்க்கண்ட், சத்தீஷ்கர் முதலிய மாநிலங்களின் கிராமப்புறங்களிலிருந்து மிகச் சுலபமாகக் கடத்திவரப்படுகின்றனர் என்ற அதிர்ச்சியே மேலிட்டது.

மேற்கு வங்கத்தின் அலிப்பூர் திவார் பகுதியிலிருந்து வந்தவர்களான கிரன்ஜீத் லி தம்பதியினர் ஆட்கடத்தலில் ஈடுபட்டு வரும் முக்கியப் புள்ளிகள். தொழில் வட்டாரத்தில் 'ஜான்ஸ்' என்று இவர்கள் அழைக்கப்படுகின்றனர்.

# எங்கும் காண முடியாத குழந்தைகள்

–நேஹா தீட்சித்

ஒரு பெண்ணுக்கு ரூ.500 முதல் ரூ.10,000 வரை விலை நிர்ணயம் செய்து, அவர்களை வேலை வாய்ப்பளிக்கும் நிறுவனங்களிடம் பொம்மைகள் போல விற்கும் கிரன்ஜீத்தை நெருங்கி, அவரைப் பற்றி கேட்டோம்.

தெஹல்கா : எப்படி இந்த இளம்பெண்களை டெல்லிக்குக் கொண்டு வந்தீங்க ?
கிரன்ஜீத் : மகானந்தா ரயிலின் மூலமாக. பெரும்பாலும் வடகிழக்குப் பகுதிகளிலிருந்து வரும் ரயில்களைத் தவிர்த்துவிடுவோம். ஏன்னா, கவுஹாத்தியில் போலீஸ் சோதனை செய்வாங்க. ஆனா மகானந்தா ரயில் நேரடியாகவே டெல்லிக்கு வந்துவிடுவதால், நாங்க இந்த வழியையே பயன்படுத்துறோம்.

தெஹல்கா: இளம் பெண்களிடம் என்ன சொல்லி நம்பவச்சீங்க ?
கிரன்ஜீத்: டெல்லியில் நல்ல சம்பளத்துடன் பலவித வேலைவாய்ப்புகள் இருப்பதாக மட்டுமே சொல்வேன். அதைத்தவிர வேறு எதைப்பற்றியும் அதிகம் சொல்லமாட்டேன். இங்கே இருக்கிற வேலைவாய்ப்பு ஏஜெண்ட் தலைக்கு ரூ.2,500 தருவாரு. அதுமட்டுமில்லாம, வரும் வழியில் இரவு நேரங்கள்லதான்போலீஸ் ரோந்து வருவாங்க. அவர்களும் பெண்கள் கடத்தப்படுவதைக் கண்டுபிடித்தாலும், தலைக்கு ஒரு தொகை கணக்குப்போட்டு வாங்கிட்டு விட்டுடுவாங்க.
தெஹல்கா: பெண்களை கடத்துவது தெரிஞ்சும், அவங்க பணம் கேட்பாங்களா ?
கிரன்ஜீத்: ம்...ம்... தலைக்கு 200 ரூபாய் கேட்பாங்க.

சுமிதா (வயது 16) வின் கதை அப்படிப்பட்டதுதான். அவள் மூன்று வருடங்களுக்கு முன்பு தனது தந்தையின் நண்பர் மூலமாக ஜார்க்கண்டிலிருந்து டெல்லியின் பஞ்சாபி பாக் பகுதியில் உள்ள வேலைவாய்ப்பு நிறுவனத்திற்கு அழைத்துவரப்பட்டாள். தங்கவைக்கப்பட்ட இடத்தில், எவ்வித வேலைவாய்ப்புமின்றி இருந்த அவள் வேலை வாங்கித்தரும் ஏஜெண்டின் மூலம் பலவித தொல்லைகளுக்கு ஆளானாள். தொடர்ந்து மூன்று மாதகாலமாக அவளை தனக்கு மசாஜ்செய்யச் சொல்லிக் கட்டாயப்படுத்திய ஏஜெண்ட் ஒருநாள் அவளை வன்புணர்ச்சியும் செய்தான். அதற்கடுத்த நாளே அங்கிருந்து தப்பி ஓடிய அவள் தெருவோரங்களிலேயே சிலநாட்கள் தங்கியிருந்திருக்கிறாள். கையில் பணமும், வாயில் ஹிந்தியும் இல்லாத காரணத்தால் ஒன்றும் புரியாமல் தவித்த அவளை சேட்நாளயா பகுதியைச் சேர்ந்த ஒரு சமூகநல அமைப்பினர் காப்பாற்றியுள்ளனர். அவள் “கற்பிழந்தவள்” என்ற காரணத்தினால், அவளது குடும்பத்தினர் அவளை ஏற்றுக்கொள்ள மறுத்துவிட்டனர். என்ன செய்வதெனத் தெரியாமல் பரிதவித்த அவளுக்கு ஒரு பாதுகாப்பு விடுதியினர் அடைக்கலம் அளித்துள்ளனர். சுமிதாவை சீரழித்த வேலைவாய்ப்பக ஏஜெண்ட் மீது வழக்குப் போடப்பட்டும், ஓராண்டுக்கு முன் அவன் சட்டத்தின் பிடியிலிருந்து தப்பித்து விட்டான்.

## குழந்தையைப் பார்த்துக் கொள்ளும் பணியாளைத் தேடி

தெற்கு டெல்லியின் லஜ்பட் நகரில் உள்ள ’பூல்சந்த் வேலைவாய்ப்பகத்தை’ அணுகிய போது எங்கள் முன்பு 10 முதல் 14 வரையுள்ள இளம்பெண்கள் கடை பொம்மைகளைப் போன்று வரிசையாக நிறுத்தப்பட்டனர். அந்தப் பெண்களின் அனுபவத்திற்கேற்ப (முன்னால் வேலை செய்த அனுபவம் அல்லது வேலை அனுபவம் இல்லாதவர் எனும் அடிப்படையில்), நம்மிடமிருந்தும் அவர்களிடமிருந்தும் கமிஷன் வசூல் செய்வதாக ஏஜெண்ட் தெரிவித்தார். கட்டணத் தொகை 6,000 ரூபாயிலிருந்து 10,000 ரூபாய் வரை நீளுமெனவும் தெரிவித்தார். மேலும் சில கேள்விகளுக்கு அவர் கூறிய பதில்கள் வருமாறு–

தெஹல்கா: நான் ஏற்கனவே என் குழந்தையைப் பாத்துக்கொள்ள ஒரு சிறுமி தேவைப்படுவதாக சொல்லியிருந்தேனே...
ஏஜெண்ட்: அப்படியே ஆகட்டும் (பின்னால் திரும்பி) அவர்களைக் கூப்பிடு. (உடனே சில சிறுமிகள் வருகின்றனர்)
தெஹல்கா: எனக்கு இந்தப் பொண்ணு போதும். உம் பேரு என்னம்மா ?
சிறுமி: சில்பி.
தெஹல்கா: உனக்கு என்ன வயசு ஆகுது ?
சில்பி: பன்னிரண்டு
தெஹல்கா: முன்னாடி எங்கேயும் வேலை பாத்திருக்கியா ?
சில்பி: ம், நொய்டாவில் இரண்டு வருசம் வேலை பாத்திருக்கேன்.
தெஹல்கா: சரி, நான் இந்தப் பொண்ணையே எடுத்துக்கிறேன்.
ஏஜெண்ட்: அந்தப் பெண்ணோட அம்மா கொஞ்ச நேரத்துல இங்க வருவாங்க, அவங்ககிட்டேயும் ஒரு வார்த்தை சொல்லிடுங்க.

அந்தச் சிறுமியின் மாதச் சம்பளம் 3,000 ரூபாய் என முடிவு

செய்யப்பட்டது. அந்த ஏஜெண்ட், 11 மாத ஒப்பந்தம் அடிப்படையில் அந்த பெண் எங்களிடம் வேலை செய்வாள் என்றும், மாதத்தில் 2 நாள் விடுமுறை தரவேண்டுமென்றும் தெரிவித்தார். ஆனால், நாங்கள் அதற்கு ஒத்துக்கொள்ளவில்லை, விடுமுறை இல்லாமல் வேலை செய்தால் கூடுதலாகவே சம்பளம் தருவதாகவும் கூறினோம். சிறிது நேரத்தில் அவளது தாயார் என்று சொல்லப்பட்ட பெண் வந்தார். தனது பெயர் ஜார்னா என கூறினார். அவருடன் பேசியவை கீழே.

தெஹல்கா: இது உங்க பொண்ணுதானே ?

ஜார்னா: ஆமாம்.

தெஹல்கா: நீங்க என்ன பண்றீங்க ?

ஜார்னா: கிராமப்புறங்களிலிருந்து பெண்களைக் கூட்டி வந்து இங்கே (டெல்லி) இருக்கிற வேலை வாய்ப்பகங்களிடம் கொடுப்பேன்.

தெஹல்கா: உங்க ஊரு எங்க இருக்கு ?

ஜார்னா: சிலிகுரிக்கும் கிஷாங்கருக்கும் நடுவிலே தர்குலர்னு ஒரு ஊரு... அதான் எங்க ஊரு.

தெஹல்கா: என்னுடைய தங்கை கூட இதே மாதிரி ஒரு பொண்ணு வேணும்னு கேட்டா, இதோடு இன்னொரு பொண்ணு எனக்,கு கிடைக்குமா ?

ஜார்னா: இங்க பாருங்க, போலீஸ் சோதனை செய்றதுனால சின்னப் பொண்ணுங்களை கூட்டிட்டு வர்றது ரொம்பக் கஷ்டம். ஆனா அதே சமயம் ஒருத்தரோட சொந்த பொண்ணுன்னா எந்தக் கஷ்டமும் இல்ல, யாரும் என்னை எதுவும் கேட்க முடியாது.

ஆனாலும், எங்களுக்கு அந்த சந்தேகம் நீடித்தது. ஜார்னா அந்தச் சிறுமியின் உண்மையான அம்மா கிடையாது. ஜார்னாவிடம் பேசியதிலிருந்து எங்களுக்கு ஒரு விஷயம் புலப்பட்டது. சிறுமிகளை கடத்த 'ஜான்ஸ்' பயன்படுத்தும் அதே வழி முறையைத்தான் இவர்களும் பயன் படுத்துகிறார்கள் என்பதே அது.

அந்த ஏஜெண்ட் கூட சில்பியின் சம்பளத்தைப் பற்றி பேசும்போது, பணமாகத் தரக்கூடாது எனவும், காசோலையாகவே கொடுக்க வேண்டும், அல்லது பணத்தைத் தனது வங்கிக் கணக்கில் போட வேண்டும் என்றும் கூறினார். அதுவே எங்கள் சந்தேகம் அதிகரிப்பதற்கு ஒரு ஆதாரமாகிவிட்டது.

லதிகா தாஸ் என்ற சிறுமி அலிப்பூர் தவாரியிலிருந்து டெல்லிக்கு 2005 ஜனவரியில் வந்தாள். இப்போது படிப்பறிவற்று, முற்றிலும் ஆதரவற்று நிற்கும் அவளின் வயது 14. புதிய நகரத்திற்கு வங்கிக் கணக்கு கூட இல்லாமல் வந்தது அவளுடைய தவறு அல்ல.

அவளின் வேலைவாய்ப்பக நிர்வாகி அவளது பெயரை 'பிரவீன்' என மாற்றிவிட்டார். ஏனெனில், அப்போதுதான் அவளது சம்பளப் பணத்தை அந்த ஏஜென்டின் வங்கிக் கணக்கில் போட முடியும்.

ஒரு வீட்டில் ஒரு வருடமாகக் கஷ்டப்பட்டு உழைத்து அவள் சம்பாதிதத 12,000 ரூபாய் பிரவீன் என்ற பெயரில் வசூலிக்கப்பட்டிருக்கிறது. இதுபற்றி அவளே கூறியபோது "என்னோட சம்பளப் பணத்தை என்கிட்டக் கொடுத்து, என்னை எங்க வீட்டுக்குத் திரும்பி வீட்டுக்கு அனுப்புங்கன்னு நிறையத்தடவை ஏஜன்டுகிட்ட கேட்டேன். ஆனா அவரு மாட்டேன்னுட்டார். அதுமட்டுமில்லாம இதுபத்தி நான் புகார் கொடுத்தால் போலீஸ் என்னைத்தான் கைது பண்ணுவாங்கன்னும் சொன்னாரு."

சட்டத்தின் பிடியில் சிக்கிக்கொள்ளாத அந்த நிர்வாகி அவளுக்கு வேறு சில இடங்களில் வேலைபெற்று அனுப்பி வைத்தார். அவள் அந்த இடங்களில் வேலைபார்த்தபோது சில சமூக நல அமைப்புகளின் உதவியுடன், நிர்வாகி மேல் வழக்குப் பதிவு செய்தாள். இப்போது, நிர்வாகி அவளுக்கு 36,000 ரூபாய் திருப்பித் தரவேண்டும். பாதுகாப்பு விடுதியிலிருந்த அவளை அணுகியபோது, "என்னோட பணத்தைத் திரும்ப வாங்காம எங்க வீட்டுக்கு நான் திரும்பிப் போக முடியாது. இங்கே என்ன செஞ்சேன்கிறதை அவங்ககிட்ட நான் எப்படிச் சொல்ல முடியும்,'' என கேட்கிறாள். நியாயம் தானே ?

கீதா (12), பிரியங்கா, பருல்(7) ஆகியோர் 2006 ஜனவரியில் ஹரியானாவிலுள்ள பரீதாபாத்தில் மணீஷ்–ரீது குப்தா என்பவர்களது வீட்டில் வேலை செய்ய அனுப்பிவைக்கப்பட்டனர். பிரியங்கா, பருல் இருவரும் துணி துவைத்தல், வீடு மற்றும் கழிப்பறைகளை சுத்தம் செய்தல் (வெறும் கையில் ஆபத்தான அமிலத்தை பயன்படுத்த வேண்டிய அவலம்) ஆகிய வேலைகளில் ஈடுபடுத்தப்பட்டனர். கீதா சமையலறை சார்ந்த வேலைகளுக்கு வைத்துக் கொள்ளப்பட்டாள்.

இந்தப் பெண்களின் கூற்றுப்படி, குப்தாவின் வீட்டில் தண்டனை என்பதே விவரிக்க முடியாத நிலையில் இருக்குமாம். சின்னஞ் சிறிய செயல்களுக்குக் கூட தண்டிப்பார்களாம். அதுவும் வேலை செய்யும் போது தூங்கினால் அவ்வளவுதான். குளிர்கால இரவுகளில் தண்ணீர் நிரம்பிய குளியலறையில் தூங்கச் சொல்வது, உடற்பயிற்சிக் கருவிகளையும் கிரிக்கெட் மட்டையையும் கொண்டு அடிப்பதும் சர்வசாதாரணமாக நடக்கும். அப்படி அடிக்கும்போது அவர்களின் வாய்களைத் துணியினால் கட்டிவிடுவார்களாம்; அவர்களது சத்தம் வெளியே கேட்கக்கூடாது என்பதற்காக. மேலும், அவர்களுக்கான உணவை தரையில் தூக்கி வீசி எறிவார்களாம். தரையில் சிதறியவற்றைத்தான் அவர்கள் பொறுக்கிச் சாப்பிடுவார்களாம். அவர்கள் மூவரும் குப்தாவின் வீட்டில் இரண்டு வருடங்களாக வேலை பார்த்தும், அவர்களுக்கு ஒருமுறை கூட சம்பளமோ, அவர்களது பெற்றோரைப் பார்க்க அனுமதியோ கிடைத்ததில்லை,

இது பற்றி கீதா கூறுகையில், ''நான் ஒருதடவை கூட என் அம்மா அப்பாவிடம் பேசியதில்லை. ஒரு தடவை போனில் பேச முயற்சித்த போது மேடம் (ரீது குப்தா) அதைப் பார்த்துட்டாங்க. உடனே போன் நம்பர் எழுதி வச்சிருந்த பேப்பரைப் பிடுங்கி சுக்குநூறாய்க் கிழிச்சுப் போட்டுட்டாங்க. என்னை அம்மணமாக்கி கண்களில் மிளகாய்த்தூளை அப்பிவிட்டு, சமையல் ரூம் கதவோடு சேர்த்து கட்டிப் போட்டுட்டாங்க. அதுக்கடுத்த அஞ்சாறு நாள் எனக்கு சாப்பாடே தரலை.''

மணீஷ் குப்தா பலமுறை கீதாவுடன் வன்புணர்ச்சி கொள்ளவும் முயற்சித்தாராம். அவள் எதிர்த்ததால் ஆத்திரமடைந்த மணீஷ் ஒரு இரும்புக் கம்பியால் அவளது தொடையில் சூடுவைத்தாராம். அவரது மனைவி ஏனென்று கேட்டதற்கு ''இவ அதிகமாக சாப்பிடுறா'' என சாக்குப் போக்கு சொன்னாராம். மணீஷ்குப்தா ஒரு பொறியியல் வல்லுநர். அவரது மனைவி மேற்படிப்பு படித்தவர். இந்தக் கொடுமையை என்னவென்று சொல்வது.

இறுதியில் பக்கத்து வீட்டுக்காரரின் உதவியோடு மூன்று குழந்தைகளும் அங்கிருந்து தப்பித்து வெளியேறினார்கள். தற்போது ஒரு காப்பகத்தில் வசித்து வருகிறார்கள். காவல் நிலையத்தில் புகார் செய்தும் மணீஷ், ரீது இருவரும் நீதிமன்றம் சென்று ஒரே நாளில் ஜாமீன் பெற்று வெளிவந்துவிட்டார்களாம்.

கீதா பொறுமை இழந்தவளாகக் காணப்படுகிறாள், தனக்குத் தெரிந்த ஹரியாணா மொழி வழக்கிலேயே அவள் சொன்னவை, ''அவங்க ரெண்டு பேரையுமே கொலை செய்யணும், நாங்க எப்படி வேதனையடைஞ்சோமோ அதை அவங்களும் அனுபவிக்கனும்,'' என்கிறாள்.

மூவரில் சிறியவளான பரூலிடம் கேட்ட எல்லாக் கேள்விகளுக்கும் ஒரே பதிலையே திரும்பத் திரும்பக் கூறுகிறாள்: ''நான் என் வீட்டுக்குப் போகணும். நான் என் வீட்டுக்குப் போகணும்'' அவ்வளவுதான்.

இந்த மூன்று பேருமாவது தங்களுக்கு நேர்ந்தவற்றிலிருந்து தப்பிக்கவாவது முயன்றனர். ஆனால் 23 வயது பிரீத்தியின் நிலைமை இன்னும் கொடுமை. டெல்லி லோதி சாலை ரயில்வே குடியிருப்பில் வசிக்கும் கே.சி. தத் என்பவரிடம் தனது 8 வயது முதலே வேலை செய்து வந்தவர் பிரீத்தி. மேற்கு வங்கத்திலிருந்து தனது மாமாவின் மூலம் டெல்லிக்கு வந்து கே.சி. தத் வீட்டில் வேலை பார்த்த பிரீத்தி தனது 15 வருட கால அனுபவத்தில் ஒருமுறை கூட வீட்டை விட்டு வெளியே போனதேயில்லை. அந்த அனுபவமே அவளை எவரிடமும் ஒட்டிப்பேசாமல், யாரிடமும் நம்பிக்கையில்லாமல் வாழவைத்திருக்கிறது.

தனியார் காப்பகத்திலிருந்த அவளைச் சந்திக்க முயன்றபோது எங்களைக் காண மறுத்துவிட்டாள், இவ்வளவு ஏன்? அவளது தந்தை இறந்தபோது கூட அவள் போகவில்லை, தன்னை அழைத்துச்செல்ல வந்த தமக்கையிடம் கூடப் பேச மறுத்துவிட்டாள், பிரீத்தியின் முகத்திலும், உடலின் மற்ற இடங்களிலும் தழும்புகள் நிறைந்து காணப்படுகிறது.

## பாலியல் தொழிலில் ராஜ்யம் நடத்தும் ஜி.பி சாலை

ஐ.நா. மக்கள்தொகை வளர்ச்சி மற்றும் பாதுகாப்பு நடவடிக்கைகளுக்கான அமைப்பின் கணக்குப்படி, இந்தியாவில் நாளொன்றுக்கு குறைந்தது 200 இளம் பெண்களாவது பாலியல் தொழிலில் புதிதாக ஈடுபடுத்தப்படுகிறார்கள். அவர்களில் 160 பேர் வேறு வழியற்றவர்களாக அதையே போக்கிடமாக்கிக் கொள்கின்றனர். போகப்போக, அதையே வியாபார ரீதியாக மாற்றிக் கொள்கின்றனர். இந்தியாவிலுள்ள 3 லட்சம் பாலியல் தொழில் விடுதிகளிலும், 1,100 சிவப்பு விளக்குப் பகுதிகளிலும் எடுத்த கணக்கின் படி மொத்தம் 25 லட்சம் பாலியல் தொழிலாளர்கள் உள்ளனர் என்று மத்திய பெண்கள் மற்றும் குழந்தைகள் நல அமைச்சகத்தின் தகவலில் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

மஹாராஷ்டிரத்தைச் சேர்ந்த ரீதா காம்படே என்ற பெண் 1997ல் தனது 17வது வயதில் டெல்லி ஜி.பி. சாலைக்குக் கடத்தி வரப்பட்டு, 3000 ரூபாய்க்கு விற்கப்பட்டாள். முதலில் இதில் ஈடுபட அவள் மறுத்தபோது, அவளுடன் சேர்த்து வேறு 100 பெண்களையும், ஒரு குறுகிய, இருட்டறையில் 20 நாட்களுக்கும் மேலாக அடைத்துவைத்து சித்திரவதை செய்திருக்கின்றனர். அந்த விடுதிகளை நிர்வகித்து வரும் பெண்களின் கணவர்கள்தான் புதிய பெண்களுக்கான முதல் வாடிக்கையாளர்களும் கூட. சில சமயங்களில் அந்த பெண்களின் பிறப்புறுப்பில் மிளகாய்ப் பொடியைத் தூவி கொடுமைப்படுத்தி, தொழிலில் ஈடுபட சம்மதிக்க வைப்பார்களாம். ஒருவழியாக ரீதா தொழிலில் ஈடுபட சம்மதித்து விட, அவளை வார நாட்களில் ஒவ்வொரு நாளும் 20 முதல் 80 வரையிலான வாடிக்கையாளர் களுடனும், ஞாயிற்றுக் கிழமைகளில் 50 வாடிக்கையாளர் களுடனும் தொழில் செய்ய வற்புறுத் தப்பட்டார். ஒருநாள் வீட்டுக்கு போக விரும்புவதாகரீதா கூறியபோது, விடுதியின் பெண் நிர்வாகி ரீதாவிற்கென கொடுத்த தொகையை திருப்பி கேட்டாராம். ''நான் எப்படி பணத்தை திருப்பித் தர முடியும்? எனக்கு அவங்க சம்பளமே தந்ததில்லை. வெறும் உணவும், உடைகளும் தான் தந்தனர்,'' என்றார் ரீதா. 9 வருடங்களுக்குப் பிறகு ரீதாவை எலும்புருக்கி நோய் தாக்கியது. சிகிச்சைக்காக மருத்துவமனைக்கு போகும் வழியில் ரீதா அவர்களிடமிருந்து தப்பிவிட்டாள். தற்போது

குழந்தைகளுக்கு சேவை புரியும் நிறுவனம் ஒன்றில் பணியாற்றி வருகிறாள். அவள் தொடுத்த வழக்கு நீதிமன்றத்தில் இருக்கிறது. தீர்ப்பு வரும் முன்பே அவளின் வாழ்வு முடிந்துவிடக்கூடும்– ஏனெனில் அவளுக்கு எய்ட்ஸ் இருக்கிறது.

புதுதில்லி ரயில் நிலையத்தை ஒட்டி, அமைந்துள்ள ஜி.பி. சாலையினை இப்படிப்பட்ட பல விபச்சார விடுதிகள் ஆக்கிரமித்துக் கொண்டுள்ளன. இவற்றில் பல, ஆசியாவின் மிகப்பெரிய சில்லறை விற்பனை வணிக வளாகக் கட்டிடத்தின் மேல் தளத்தில் இயங்குகின்றன.

அந்த வணிக தளத்தில் 64ம் எண் விடுதியே எல்லாவற்றிலும் 'சிறந்தது' எனக் கேள்விப்பட்டு, நாமும் உள்ளே நுழைந்தோம்.

இந்த 64ம் விடுதியின் மவுசு என்னவென்றால் பருவமடையாத சிறுமிகள் நிறையப் பேர் இங்கே மலிவான கட்டணத்தில் கிடைப்பார்கள் என்பதே. பருவமடையாத சிறுமியுடன் உறவு கொண்டால், 'உறவில் இயலாமை' என்ற பாலியல் பலவீனத்துக்குத் தீர்வு கிடைக்கும் என்பது போன்ற மூடநம்பிக்கைகளோடு நாடிவரும் மேல்தட்டு, நடுத்தர வயது ஆண்களுக்கு இங்கே அதிக வசதி ஏற்படுத்தி தரப்படுகிறது. பெண்களின் அழகும், நிறமும் அவர்களின் விலையில் முக்கியப் பங்கு வகிக்கின்றன.

நாம் ஜி.பி. சாலையின் 70–ம் எண் விடுதிக் காப்பாளர் சோனியாவிடம் பேசியபோது, அவர் தெரிவித்தவை உண்மையிலேயே அதிர்ச்சியூட்டின.

தெஹல்கா: தொழிலுக்கான பெண்களை எங்கிருந்து பெறுகிறீர்கள் ?

சோனியா: முன்னாடியெல்லாம் தரகர்கள் இருந்தாங்க. ஆனா இப்ப பெரும்பாலான பொண்ணுகளை அவங்களப் பெத்தவங்களே கொண்டு வந்து விடுறாங்க. கொல்கத்தா, மஹாராஷ்டிரா, ஆந்திரான்னு பல இடங்கள்லயிருந்து இப்படிக் கொண்டு வர்றாங்க.

தெஹல்கா: பொண்ணுகளைக் கொண்டுவரும் தரகர்கள் பத்திச் சொல்லுங்களேன்.

சோனியா: தரகருங்க ஆரம்பத்தில் இதைவைச்சு நிறையா பணம் சம்பாதிச்சாங்க. ஆனா இப்போ அவங்க வழியே வேற. முதல்ல ஒரு பொண்ணு கூட அவளைக் காதலிக்கிற மாதிரி நடிப்பாங்க. அப்புறம் அவளுக்கு கடத்தல்காரங்ககிட்ட விலைபேசுவாங்க. அப்புறம் அந்த பொண்ணை வித்துடுவாங்க. ஒரு விடுதியில அந்தப் பொண்ணு இருக்கிறப்பவே அவளுக்கு விலைபேசி வெளியே அழைச்சிட்டுப்போய் இன்னொரு விடுதியில வேற பெரிய தொகைக்கு வித்து பணம் சம்பாதிக்கிறாங்க.

தெஹல்கா: ஒரு பொண்ணை எத்தனை முறை விப்பாங்க ?

சோனியா: அதெல்லாம் உங்களுக்கு எதுக்கு ?

தெஹல்கா: இது போலீசுக்கு தெரியுமா ?

சோனியா: போலீஸ் என்ன செய்வாங்க ? மாசாமாசம் வந்து மாமூல் மட்டும் கரெக்டா வாங்கிட்டுப் போயிடுவாங்க.

இதைப் பற்றி, ஜி.பி. சாலை கமலா சந்தை காவல் நிலைய பெண் அதிகாரியிடம் கேட்டோம். "எனக்குத் தெரிஞ்சவரைக்கும், இந்தப் பக்கம் எங்கேயும் பருவமடையாத பெண்கள் தொழிலில் ஈடுபடுத்தப் படுவதில்லை," எனக் கூறினார் அவர்.

பெண்களைக் காப்பாற்றி காப்பகங்களில் தங்கவைத்தாலும் கூட, தரகர்கள் சும்மா இருப்பதில்லை.

நாரி செடான் பகுதியில் உள்ள இந்தக் காப்பகத்தில் உள்ள 16 வயது நிரம்பிய சிறுமியைத் தேடி தக்க ஆதாரங்களுடன் (புகைப்படம், பிறப்புச் சான்றிதழ்) சிலர்வந்து, தாங்களே அப்பெண்ணின் உண்மையான பெற்றோர் என்று கூறி சட்டப்பூர்வமாக எழுதிக் கொடுத்து, அப்பெண்ணை தங்களுடன் கூட்டிச் சென்றனர். சில நாட்கள் கழித்து விசாரித்தபோது, அவளை அருகில் உள்ள கிராமத்தைச் சேர்ந்த 50 வயது மனிதருக்கு திருமணம் செய்து வைத்தது தெரிய வந்திருக்கிறது, பிறகு தனது குழுவினருடன் சென்று அவளை மீட்டு வந்ததாகக் கூறினார் ரோஹடாக் காப்பகம் நடத்தி வரும் ஜஸ்வந்தி.

**கருச் சிதைவு**

கருவிலிருப்பது ஆணா? பெண்ணா? என அறிந்துகொள்ளும் முறைக்கு, 1994ல் கொண்டுவரப்பட்ட கருவியல் குற்றங்களைத் தடை செய்யும் சட்டம் தடை விதித்திருக்கிறது. ஆனாலும் ஒவ்வொரு வருடமும் இந்தியாவில் சுமார் 9 லட்சம் பெண் குழந்தைகள் மண்ணைத் தொடாமல் கருவிலேயே கலைக்கப்படுவது நீடிக்கத்தான் செய்கிறது.

ஆண் குழந்தைகளுக்கு ஆசைப்படுவதன் விளைவை இப்போது பஞ்சாப்பும் ஹரியானாவும் அனுபவித்துக் கொண்டிருக்கின்றன.

இன்றைய நிலையில் ஹரியானா மற்றும் பஞ்சாப் ஆகிய இரு மாநிலங்களிலும பாலின விகிதாச்சாரம் மிகுந்த சிக்கலுக்கு உள்ளாகியிருக்கிறது. பஞ்சாபில் 1,000 ஆடவர்களுக்கு 876 பெண்கள் ஹரியானாவில் 1,000 ஆடவர்களுக்கு 861 பெண்கள்தான் என்பதாக நிலைமை சீர்குலைந்துள்ளது.

இதுபோன்ற மாநிலங்களில்தான், காசு கொடுத்துப் பெண்ணை விலைக்கு வாங்குவதும், பாலியல் வல்லுறவில் ஈடுபடுத்தும் குற்றங்களும் அதிகரித்துள்ளன.

பஞ்சாபின் முரிண்டா கிராமத்தை சேர்ந்த 16 வயது சீதா அனுபவித்துக்கொண்டிருப்பது இன்று ஒரு நரக வாழ்க்கையே. சீதாவின் தந்தை ஒரு லாரி ஓட்டுநர்.

அவளது தாய் ஒரு வீட்டில் வேலை செய்து வருகிறாள். இப்படி இருவரும் வேலை பார்த்துக் கொண்டு வரும் பணம் செலவுக்குப் போதாதால், சீதாவும் தன் தாயுடன் வீட்டு வேலைக்கு செல்ல ஆரம்பித்தாள். அப்போதும் பற்றாக்குறை தொடர, ஒரு நாடகக் கம்பெனியில் வேலைக்குச் சேர்ந்தாள். ஆனால், அது நாடகக் கம்பெனி என்ற பெயரில் இயங்கி வந்த பாலியல் தொழில் விடுதி. அது அவளுக்குத் தெரிய வந்ததே போலீஸ் 'ரெய்டு' நடத்தியபின்புதான். அங்கிருந்து நாரி நிகேதனில் உள்ள 'கர்னல்' என்ற ஊழல் எதிர்ப்பு அமைப்பு ஒன்றில் தஞ்சமடைந்தாள், அங்கும் கடுமையான குடிநீர்த் தட்டுப்பாடு, உணவுப் பற்றாக்குறையின் காரணமாக அவளால் ஒரு வருடம் கூட தாக்குப்பிடிக்கமுடியவில்லை, அங்கிருந்து வெளியேறியவள் ஹரியானாவில் பாணிபட் என்ற கிராமத்தின் பேருந்து நிலையத்திற்கு வந்துசேர்ந்தாள். அங்கே ஜஸ்பீர் என்ற மெக்கானிக் ஒருவனால் சீரழிக்கப்பட்டாள், அவன் அவளைத் திருமணம் செய்துகொள்வதாகக் கூறி பல்பவான் ஆசிரமத்தில் விட்டுவிட்டான். ஆசிரமத்தின் துணை நிர்வாகி சீதாவை வன்புணர்ச்சி செய்ததோடு, அவளது பிறப்புச் சான்றிதழை மாற்றி, அவள் பருவமடைந்துவிட்டதாகக் கூறி, 25 வயதான சஞ்சய் வர்மா என்பவனிடம் 36,000 ரூபாய் வாங்கிக் கொண்டு 'திருமணம்' என்று கூறி அவனிடம் அவளை விற்றுவிட்டான்.

வீட்டுச் சிறையில் அடைக்கப்பட்ட அவள், சஞ்சய் வர்மாவின் மிகப்பெரிய குடும்பத்தைச் சமாளிக்க முடியாதவளாக ஒரே மாதத்தில் ஓடிவந்துவிட்டாள். பின்னர் மனநிலை பாதிக்கப்பட்ட அவள் தற்போது 'பாலாஷ்ரம்' என்ற தொண்டு நிறுவனத்தின் பாதுகாப்பில் இருக்கிறாள்.

ஆசிரமத்தின் தலைமை நிர்வாகியை சந்தித்தபோது அவர், "இந்த ஒரு வாரத்தில் மட்டும் மூன்று நான்கு முறையாவது அவள் தற்கொலைக்கு முயற்சி செய்திருக்கிறாள். அதோடு காய்கறி நறுக்கும் கத்தியைக் கொண்டு அனைவரையும் தாக்கவும் முயன்றாள். மனநல மருத்துவரிடம் கொண்டு போக நினைத்தாலும், இப்பகுதியில் அதுபோன்று யாரும் இல்லாதது வேதனையளிக்கிறது" எனக் கூறினார்.

அவளது கணவன் சஞ்சய், பல்பவான்ஆசிரம துணை நிர்வாகி அமர்ஜீத், மெக்கானிக் ஜஸ்பீர் ஆகியோர் மீது வழக்கு தொடரப்பட்டுள்ளது. அது முடிய வெகு நாள் ஆகும்போல் தெரிகிறது. இந்நிலையில் அவளது வீட்டிகு அனுப்பி வைக்க முயன்றாலோ, தனது தந்தையே தன்னைக் கொன்றுவிடுவார் என்று கூறி சீதா போக மறுக்கிறாள்.

இது போன்று, சமூகம் புறக்கணித்த பெண்கள் ஒரே இடத்தில், ஒரே மன நிலையில் வாழ்வது மிகவும் இயலாத காரியமாகும். ஏனெனில் இதுபோன்று விடுதிகளிலிருந்து சொந்தக் கிராமங்களுக்குச் செல்லும் பெண்களை கிராமத்தினர் "டெல்லி–பெண்" என்றே கூறி அழைக்கிறார்களாம், ஏனெனில் 'டெல்லி' என்றாலே அந்தப் பகுதி மக்கள் அசுத்தமானதாக நினைப்பதே இது போன்றே மேற்கு வங்கத்தின் துர்காபூரைச் சேர்ந்த ஜோதியின்(14) கதையும் விரிகிறது.

ஒரு ஏழைக் குடும்பத்தின் நான்கு பெண்களில் கடைசி மகளான ஜோதிக்கு திருமணம் நடந்து முடிந்த கதை கொஞ்சம் வித்தியாசமானது. திடீரென ஜோதியின் தந்தை மரணமடைந்ததால் ஏற்பட்ட பொருளாதார நெருக்கடியால் ஜோதியின் தாய் வேலைக்குச் செல்ல முயன்றார். ஒன்றும் பலிக்காமல் போகவே, ஜோதியின் மீது அனைவரின் பார்வையும் பதிந்தது.

உத்தரபிரதேசத்தின் அலிகார் நகரைச் சேர்ந்த 40 வயது பி.டி சிங்கிற்கு ஜோதி திருமணம் செய்துவைக்கப்பட்டாள். அதற்கு விலையாக ரூ.15,000 கைமாறியது. புகுந்த வீட்டிற்குச் சென்ற ஜோதிக்கு பல உண்மைகள் புலப்பட ஆரம்பித்தன. அவளது கணவனுக்கு ஏற்கெனவே திருமணம் ஆகியிருந்தது, 4 பெண் குழந்தைகள் இருப்பது போன்ற உண்மைகள் தெரியவந்தன. கணவனின் முதல் மனைவி மூலம் மிகுந்த இன்னல்களுக்கு உள்ளானாள். ஆண் குழந்தை வேண்டும் என்ற ஒரே காரணத்திற்காகவே தன்னை பி.டி. சிங் திருமணம் செய்துகொண்டார் என்ற உண்மையையும் அவள் தெரிந்துகொண்டாள். அங்கிருந்து தப்பி பி.டி. நிகேதனில் உள்ள 'கர்னால்' பாதுகாப்பகத்தில் தஞ்சம் புகுந்தாள். இன்று அவளின் ஒரே விருப்பம், தனது அம்மாவின் முகத்தைப் பார்ப்பதுகூட அல்ல, நன்றாகப் படித்து ஒரு ஆசிரியையாக மாறி தன்னைப் பாதுகாத்துக் கொள்ள வேண்டும் என்பதே.

12 வயதேயான சவீதா, அஸ்ஸாமின் கூஜ்ஜிபார் பகுதியைச் சார்ந்த சிறுமி. அவளது தந்தையும், அண்ணனும் மனநிலை பாதிக்கப்பட்டவர்களாக, இறுதியில் சவீதா பேரம் பேசப்பட்டாள். பக்கத்து வீட்டைச் சார்ந்த ராணா சுராஜ்மல் என்ற தையல் தொழிலாளியிடம் விற்கப்பட்டாள்.

சுராஜ்மல் சவீதாவிற்கு வேலை வாங்கித் தருவதாகக் கூறி தன்னோடு ஹரியானாவின் பகதூர்கார் பகுதிக்கு அழைத்துச் சென்றான். அங்கே அவளுக்கு வேலை வாங்கித் தராமல் தனது வீட்டிலேயே கொத்தடிமை போல நடத்த ஆரம்பித்திருக்கிறான். வீட்டு வேலை செய்ய வைத்து கொடுமைப்படுத்தியதோடு நில்லாமல், அவளை பலமுறை பாலியல் வன்முறைக்கும் உள்ளாக்கினான். இறுதியில் ஒருநாள் சவீதா காணாமல் போய்விட்டதாக அவளது தாய்க்குத் தகவல் தந்திருக்கிறான்.

போலீஸ் விசாரணையில்தான், சுராஜ்மல் அவளைக் கொடுமைப்படுத்திய உண்மை தெரியவந்தது.

அவன்மேல் வழக்குப் பதிவு செய்து கைது செய்துவிட்டாலும், தொலைந்துபோன சவீதா மட்டும் இன்னும் கிடைக்கவே இல்லை.

லக்னோவில் உள்ள ஒரு தனியார் மகளிர் தொண்டு நிறுவனத்துக்குச் சென்று விசாரித்தபோது இணை–நிர்வாகி சுனில் சிங் கூறியது: ‘‘பொதுவாகவே இதுபோன்ற பெண்கள் சமூகத்தால் புறக்கணிக்கப்பட்டவர்களாகவே இருக்கின்றனர். எந்த ஆதரவும் இல்லாமல், பணத் தேவையினால் உந்தப்பட்டு இவர்களைக் குடும்பத்தினரே விலை பேசி விற்றுவிடுகின்றனர். வெறும் பணத்தையும், பாலியல் வன்முறைகளையும் சந்தித்து ஒரு கட்டத்தில் சமூகத்தைப் பற்றிய பார்வையையே மாற்றிக் கொள்கின்றனர். சில நேரங்களில், பாவம் இந்த பெண்களில் சிலருக்கு, திருமணம் செய்து கொண்ட கணவனும், அவனது குடும்பத்தினரும் என்ன இனத்தினர், என்ன மொழி பேசுகின்றனர் என்பதுகூட தெரியாமல் போய்விடுகிறது. திருமணம் என்ற பெயரில் எளிதில் ஏமாற்றப்படும் இந்த அபலைகளுக்கு தங்களது வாழ்க்கையை தொலைத்து மிகுந்த மனநெருக்கடியும், மரணமுமே விடைகளாகி விடுகின்றன.’’

**இந்த விளையாட்டில் தொலைந்துபோனவர் திரும்ப வாய்ப்புள்ளதா ?**

கொஞ்சம் கூடகிடையாது. தேசிய மனித வளத்துறை அமைச்சகம் கூறும் தகவல்படி, ஆண்டொன்றுக்கு ஏறக்குறைய 22,480 பெண்களும், 44,476 குழந்தைகளும் காணாமல் போகின்றனர். 5,452 பெண்கள், 11,008 குழந்தைகளைப் பற்றிய விவரங்கள் சரிவர கிடைப்பதில்லை. என்ன காரணம்? ஆட்கடத்தல் உலகின் மாயாஜாலம்தான் காரணம்,

அப்படியானால் அரசு என்ன செய்கிறது? பலவித கமிஷன்களை அமைத்து பணத்தை விரயமாக்கிக் கொண்டிருக்கிறது. அதற்கு பேசாமல் வறுமையில் வாடுபவர்களுக்கு உரிய வேலைவாய்ப்பினை ஏற்படுத்தியிருந்தால் இந்த நிலைமை ஏற்பட்டிருக்குமா? இதுதானோ ஜனநாயக இந்தியா... ?

சிலசமயம், பெற்றோர் தலையிடவில்லை என்றாலும், குடும்பத்தின் வறுமையும், பசிப்பிணியுமே இந்த வகை பெண்களை வீட்டை விட்டு வெளியேற்றுகின்றன. நகரத்திற்கு வேலை தேடி வரும் இத்தகைய பெண்கள் சீரழிவுகளில் மாட்டிக் கொள்கின்றனர்.

மேற்குவங்கத்திலுள்ள நிலைமையினை ஆராய்ந்தால் நாம் தெரிந்துகொள்வது தேயிலை தோட்டங்களும் ஒரு காரணம் என்பதையே, எப்படியெனில் கடந்த ஐந்து வருடங்களில் நூற்றுக்கும் மேற்பட்ட தேயிலைத் தோட்டங்களின் உற்பத்தி கைவிடப்பட்டுள்ளது. இதனால் ஏறத்தாழ 17,000 தொழிலாளர்கள் தங்களது வாழ்வாதாரத்தை இழந்திருக்கின்றனர். அதுவும் வங்க தொழிலாளி மக்களில் ஒரு பகுதியினர் தேயிலைத் தோட்டங்களைச் சார்ந்தே பிழைக்கின்றனர்.

இதுகுறித்து ‘டீ பாண்டு இந்தியா’ நிறுவனத்தின் தலைவர் வாசுதேவ் பானர்ஜியிடம் கேட்டபோது, ‘‘ஏறக்குறைய நூறு வருடங்களுக்கு முன்பாக, சின்ன நாக்பூரிலிருந்து மேற்கு வங்காளத்திற்கு குடிபெயர்ந்து சென்றவர்கள்தான் இத்தகைய மக்கள். அவர்களுக்கு தேயிலை பறிப்பதை தவிர வேறெதுவும் தெரியாது. தேயிலைத் தோட்டங்களை மூடினால், அவர்களுக்கான வாழ்க்கைக் கதவும் மூடப்பட்டதாகவே அர்த்தம்,’’ எனக்கூறுகிறார்.

மேலும், இத்தொழிலாளர்களில் 50 சதவீதத்திற்கும் மேலானோர் பெண்களே. அவர்கள் வெளி நகரங்களுக்கு வேலை வாய்ப்புத் தேடி செல்வார்கள், அப்படித் தேடிச் செல்லும்போது வேறு வழியே இல்லாமல் ஆட்கடத்தல் கும்பல்களிடமே மாட்டுவார்கள். இதுபோன்ற சீரழிவு தொடர்ந்து கொண்டுதான் இருக்கும். அரசு இதுபற்றி ஏதும் யோசிக்குமா ? நாட்டின் வடகிழக்குப் பகுதிகளைச் சேர்ந்த ஆட்கடத்தல் கும்பல்களைத் தடுக்கும் பணியில் ஈடுபட்டு வரும் ’நேதான்’ என்ற தொண்டு நிறுவனத்தினரைச் சந்தித்தபோது, அதன் இணை நிர்வாகி திகாம்பர் கூறியது மிகவும் கவனிக்க வேண்டியதாக இருக்றது.

அவரது கருத்துப்படி அசாம் மாநிலத்தில் நிலவிவரும் உள்மாநில நடவடிக்கைகளே பெரும் காரணமாகின்றன. அசாம் மாநிலத்தில் பழங்குடியினருக்கும், போடோ இனத்தவருக்கும் இடையே நிலவிவரும் இணக்கமற்ற சூழலாலும், கலவரத்தாலும் நூற்றுக்கணக்கான மக்கள் வீடுகளை இழந்து தவிக்கின்றனர். பணநெருக்கடியினால் தங்களது குழந்தைகளை பணிக்கு அனுப்பி வைக்கின்றனர். அப்படி வருபவர்களில், பெண் குழந்தைகள் எளிதில் ஆட்கடத்தல் கும்பல்களிடம் மாட்டிக் கொள்கின்றனர்.

அதுமட்டுமில்லாமல், மஹாராஷ்டிராவின் விதர்பா மற்றும் ஜார்க்கண்ட், சட்டீஸ்கர் பகுதிகளில் உள்ள பழங்குடியின பகுதிகளில் இந்த தொழில் தனது வலையை விரிக்க ஆரம்பித்திருக்கிறது.

பழங்குடியின மக்களிடம் பணத்தேவையைக் காட்டி அவர்களது பெண்களை வேலை வாங்கித் தருவதாகக் கூறி வெளி நகரங்களுக்குக் கூட்டிச் செல்கின்றனர், அவர்களும் தங்களது பெண் திரும்பி வருவாளா? இல்லையா? எனத் தெரியாமலேயே அனுப்பி வைக்கின்றனர். இந்த நடவடிக்கை கடந்த சில வருடங்களாக அதிகரித்து வருகிறது என்பது இந்திய அரசின் பலவீனத்தையே காட்டுகிறது. உள்நாட்டிலும்சரி,

வெளிநாட்டிலும் சரி, இந்திய மக்களுக்கு உரிய பாதுகாப்பே இல்லை எனும்போது இந்த அரசு இனியும் தேவைதானா ?!

டெல்லியைச் சேர்ந்த சமூக நல தொண்டர் ரிஷிகாந்த், ஆயிரத்திற்கும் மேற்பட்ட பெண்களை தான் காப்பாற்றியிருப்பதாகத் தெரிவிக்கிறார்.

எவ்வாறெனில், ரிஷிகாந்த் ஒருமுறை தனது செல்போன் எண்ணை எய்ட்ஸ் விழிப்புணர்வு விளம்பரப் பலகையில் கொடுத்திருந்தாராம். அந்த தகவல் பலகை டெல்லியின் ஜி.பி. சாலை நடுப்பகுதியில் வைக்கப்பட்டிருந்தது. அதற்கு எதிரே உள்ள விபச்சார விடுதியில் இருந்த பெண்கள் உடனே அவரது எண்ணுக்குத் தொடர்பு கொண்டு தங்களைக் காப்பாற்றும்படி தெரிவித்தார்களாம். அதைத்தொடர்ந்து, தான் முன்நின்று அவர்களைக் காப்பாற்றியதாக கூறுகிறார் ரிஷிகாந்த். மேலும் இப்போதெல்லாம் தனது போனை ஆஃப் செய்வது கூட இல்லையாம். தொடர்ந்து தன்னை அழைக்கக் கூடியவர்களுக்கு உதவ வேண்டும் என்ற எண்ணம்தான் காரணம் என்கிறார். போன் மூலம் மட்டுமல்ல, தபால், ஃபேக்ஸ் மூலமாக ரிஷிகாந்த்தை அழைப்பவர்கள் எண்ணிக்கையும் அதிகரித்து வருகிறதாம்.

ஒருமுறை, 8 வயதேயான ஒரு சிறுமியை காப்பாற்றியபோது, அவளுக்கு தனது வீடு எங்கிருக்கிறது என்று கூட சொல்லத் தெரியவில்லையாம், இறுதியில் அவள் பாடிய நாட்டுப்புறப் பாடலின் வரிகளைக் கொண்டே அந்த இடத்தை ஊகித்து வீட்டில் கொண்டு போய்ச் சேர்த்தாராம்.

தான் இப்போதெல்லாம் இந்த பணியினை அதிகம் மேற்கொள்வதில்லை எனக்கூறுகிறார். ஏனெனில் அவர்களை ஒரு நரகத்திலிருந்து இன்னொரு நரகத்திற்குத்தான் தன்னால் காப்பாற்றி அனுப்பி வைக்க முடிகிறது. எனவே இப்பணியை முற்றிலும் நிறுத்தப் போவதாகவும் கூறுகிறார்.

நிர்மல் சாயாவில் பணிபுரியும் பாரதி சர்மாவிடம் கேட்டபோது, ''இந்த தொழிலில் ஈடுபடுத்தப்படும் பெண்கள் பெரும்பாலும் இளவயதினரே. அவர்களுக்கு படிக்கக்கூட தெரிவதில்லை. இதுபோன்ற நரகத்தில் மாட்டி தங்களது மனநலத்தையும், உடல்நலத்தையும் முற்றிலுமாக இழந்து வீடு திரும்பும் அவர்களை குடும்பத்தினர் கூட ஏற்றுக் கொள்வதில்லை. இந்தியாவில் 90 சதவீதத்தினர் படிப்பறிவு பெற்றிருக்கின்றனர் என அரசு தான் கூறுகிறதே தவிர உண்மை நிலை இதுதான்,'' என்கிறார்.

இந்த நிலையில் பெண்கள் மற்றும் குழந்தைகள் நல அமைச்சகத்துறை 2007 டிசம்பரில்தான் 'உஜ்ஜவாலா திட்டம்' என்ற, மகளிர் மற்றும் குழந்தைகளுக்கான பாதுகாப்பு சட்டத்தை பிறப்பித்தது. ஆனாலும் இவற்றைத் தடுக்க முடியவில்லை, பிறகு எதற்கு இத்தகைய கபட நாடகங்களும், விளம்பரங்களும் அறிவிப்புகளும் ?

உண்மை நிலையைப் பார்த்தால், பிறகு ஏன் இந்தியாவில் மக்களாட்சி நடக்கிறது என்றே கேட்கத் தோன்றுகிறது. ஆனால் உண்மையின் மீது கை தொட்டுப் பார்த்துவிட்ட நமக்கோ இனி எந்த அரசியல்வாதியிடமும், அமைச்சரிடமும் கூட கை கொடுக்க மனம் ஒப்பவில்லை! இது 'உள்ளங்கை நெல்லிக்கனி'. நாடகம் முடியும் வேளை எப்போது ? நடிகர்களின் வேடம் களையப்படுவது எப்போது ? மக்களும், காலமும்தான் பதில் சொல்லவேண்டும்.

(குறிப்பு: இக்கட்டுரையில் குறிப்பிடப்பட்டிருப்போரின் உண்மைப் பெயர்கள் மாற்றப்பட்டுள்ளன)

**– Sources: Tehelka**

*குழந்தைகள் கடத்தப்படுவது பற்றிய செய்திகள் அவ்வப்போது செய்தித்தாள்களில் வெளிவந்து கொண்டிருக்கிறது. ஆனால் இவ்வாறு காணாமல் போகும் குழந்தைகளை மீட்பது பற்றிய முறையான செயல்முறை ஏதும் இதுவரை வகுக்கப்படவில்லை. காவல்துறை தனது அலட்சியப்போக்கினைக் கைவிட்டு உருப்படியாக செயல்படத் துவங்கவேண்டும் என்று அலகாபாத் உயர்நீதிமன்றம் எச்சரிக்கை விடுத்திருக்கிறது என்கிறார் கட்டுரையாளர்* ***கருணாதயாள்.***

தில்லியின் விபச்சார விடுதியில் சிக்கிய மலஞ்சா ராஜ்பரி கிராமத்தைச் சேர்ந்த 15 வயது சிறுமி ஓராண்டு சிறைவாழ்க்கைக்குப்பின் தப்பி வந்திருக்கிறாள். ''அவர்கள் என்னை தில்லியிலுள்ள ஒரு விபச்சார விடுதியில் விற்றுவிட்டனர். அங்கு என்னை மிகக் கடுமையாக சித்திரவதை செய்து கட்டாயப்படுத்தி விபச்சாரத்தில் தள்ளினர். ஓராண்டு இந்தக் கொடுமையை அனுபவித்தேன். ஒரு நாள் எல்லோரும் அதிகாலையில் உறங்கிக் கொண்டிருக்கும் போது, அங்கிருந்து தப்பித்து ஓடிவந்துவிட்டேன்' என்று சொல்கிறாள்.

ஆந்திர மாநிலத்தின் கம்மம் மாவட்டத்தைச் சேர்ந்த சுஜாதா (பெயர் மாற்றப்பட்டுள்ளது) 10 வயதிலேயே மும்பையின் விபச்சார விடுதிக்கு ரூபாய் இரண்டாயிரம் விலைபேசி விற்கப்பட்டு விட்டாள். '' நாங்கள் திருமதி.திரிவேதி என்ற பெண்ணிடம் இருந்தோம். அவர் ஏராளமான ஆண்களோடு எங்களை அவ்வப்போது பிக்னிக் அழைத்துச் செல்வார். எங்களுக்கு உணவு, உடைகளை மட்டுமே கொடுப்பார். பணம் எதுவும் கொடுக்கமாட்டார்'' என்று சொல்லும் சுஜாதா 5 ஆண்டுகால நரகவாழ்க்கைக்குப்பின் அங்கிருந்து தப்பி

வந்திருக்கிறார்.

ஒவ்வோராண்டும் ஏறத்தாழ 30,000 பெண் குழந்தைகள் விபச்சாரத்திற்காகக் கடத்தப்படுகிறார்கள். வறுமையில் வாடும் பெற்றோர் சிலர் தமது குழந்தைகள் நகரத்தில் வீட்டு வேலை செய்து பிழைத்துக்கொள்வார்கள் என்ற நம்பிக்கையில் ஆள் பிடிக்கும் தரகர்களோடு தனது குழந்தைகளை அனுப்பிவைக்கின்றனர். சில பெண் குழந்தைகள் கடைவீதிகளிலும், மற்ற இடங்களிலுமிருந்தும் கடத்தப்படுகிறார்கள். இவர்கள் முதலில் மயக்கத்திலாழ்த்தப்பட்டு கற்பழிக்கப் படுகிறார்கள். பின்னர் இவர்களை விபச்சார விடுதிகள் நடத்தும் 'அம்மா'க்களிடம் விற்று விடுகிறார்கள்.

## ப்ரீ.கே.ஜி., மாணவர் சேர்க்கையை ஒழுங்குபடுத்த ஐகோர்ட்டில் வழக்கு

தனியார் பள்ளிகளில் ப்ரீ கே.ஜி., யில் குழந்தைகளை சேர்ப்பதை ஒழுங்குபடுத்தக்கோரி சென்னை ஐகோர்ட்டில் மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

இதற்கு பதிலளிக்க அரசுக்கும், தனியார் பள்ளிகளுக்கும் நோட்டீஸ் அனுப்ப உத்தரவிடப்பட்டுள்ளது.

சென்னையைச் சேர்ந்த பாவேந்தன் என்பவர் தாக்கல் செய்த பொதுநல மனு;

"வசதி படைத்தவர்களுக்கு மட்டுமல்லாமல், ஏழை, எளியவர்களுக்கும் கல்வி பெறும் உரிமை உள்ளது. அரசியலமைப்புச் சட்டத்தில் இது வரையறுக்கப்பட்டுள்ளது. ப்ரீ கே.ஜி., வகுப்பில் குழந்தைகளை சேர்ப்பதை தனியார் பள்ளிகள் ஒரே மாதிரியாக பின் பற்றுவதில்லை. இரண்டரை வயது குழந்தைக்கு நேர்காணல் நடத்துகின்றன. பெற்றோருக்கும் நேர்காணல் உண்டு.

பெற்றோர் பட்டப்படிப்பு முடித்திருக்க வேண்டும். கல்விக் கட்டணத்தை செலுத்தும் அளவுக்கு வசதி இருக்க வேண்டும் என, தனியார் பள்ளிகள் கருதுகின்றன. 50 ஆயிரம் முதல் ஒரு லட்சம் ரூபாய் வரை தனியார் பள்ளிகள் நன்கொடை கேட்கின்றன.

பள்ளி நிர்வாகம் கோரும் அனைத்தையும் அளிக்க பெற்றோர் தயாராக இருந்தும், சிலருக்கு இடம் கிடைப்பதில்லை. கல்வியாண் துவங்கும் முன், பல பள்ளிகளில் ப்ரீ கே.ஜி., யில் சேர்க்கை முடிந்து விடுகிறது.

எப்போது விண்ணப்பங்கள் வழங்கப்படும், எப்போது முடியும், எப்போது சேர்க்கப்படுவர் என்பதை ரகசியமாக வைத்திருக்கின்றனர். எனது குழந்தையை அசோக்நகரில் உள்ள ஒரு தனியார் பள்ளியில் சேர்ப்பதற்காகச் சென்றேன்.

கல்விக் கட்டணம் தவிர 25 ஆயிரம் ரூபாய் கேட்டனர். கல்விக் கட்டணம் மட்டும் செலுத்துவதாகக் கூறினேன். எனது குழந்தைக்கு இடம் தரவில்லை. இது குறித்து அரசுக்கு மனு அனுப்பினேன். எந்த நடவடிக்கையும் இல்லை. நன்கொடை, கட்டட வளர்ச்சி நிதி, போக்குவரத்து, சீருடை, பாடப் புத்தகங்கள், இதர நடவடிக்கைகள் என, தனியார் பள்ளிகள் விதிக்கும் ஆண்டு கட்டண விவரங்களை சமர்ப்பிக்க உத்தரவிட வேண்டும்.

தனியார் பள்ளிகளில் ப்ரீ கே.ஜி., படிக்கும் குழந்தைகளின் பட்டப்படிப்பு படிக்காத, வேலையில்லாத, ஏழை, எளிய பெற்றோரின் விவரங்களை அளிக்க உத்தரவிட வேண்டும். ஆதிதிராவிட, பழங்குடியின, மிகவும் பிற்படுத்தப்பட்ட, பிற்படுத்தப்பட்ட வகுப்பைச் சேர்ந்த குழந்தைகளுக்கு ப்ரீ கே.ஜி., யில் அனுமதி வழங்கப்பட்ட விவரங்களை அளிக்க வேண்டும். விண்ணப்பங்கள் வழங்கும் தேதி, சேர்க்கை தேதி இவற்றை நிர்ணயித்து ப்ரீ கே.ஜி.,யில் குழந்தைகளை சேர்க்க உத்தரவிட வேண்டும். நன்கொடை உள்ளிட்ட வேறு எந்த கட்டணமும் பெறாமல் ஒரே நடைமுறையை தனியார் பள்ளிகள் பின்பற்ற வேண்டும்." இவ்வாறு மனுவில் கூறப்பட்டுள்ளது. இதை நீதிபதிகள் தனபாலன், சத்யநாராயணன் அடங்கிய 'டி விஷன் பெஞ்ச்' விசாரித்தது. மனுதாரர் சார்பில் வக்கீல் கே.பாலு ஆஜரானார். மனுவுக்கு பதிலளிக்கும்படி தமிழக அரசு, சி.பி.எஸ்.இ., மண்டல அதிகாரிக்கு நோட்டீஸ் அனுப்ப நீதிபதிகள் உத்தர விட்டனர்.

சென்னையில் உள்ள 13 தனி யார் பள்ளிகளுக்கு தனியாக நோட்டீஸ் அனுப்ப வக்கீலுக்கு அனுமதியளிக்கப்பட்டது.

**–1.1.08, தினமலர்.**

# காணாமல் போகும் குழந்தைகளை மீட்க நீதிமன்ற நடவடிக்கை

அரசு, காவல்துறை ஆகியவை பாராமுகமாய் இருப்பதால் கடத்தப்படும் பெண் குழந்தைகளின் எண்ணிக்கை ஒவ்வோராண்டும் அதிகமாகி ஏறுமுகமாகவே இருக்கிறது. நாட்டுமக்களிடையே அதிர்ச்சியும், கொந்தளிப்பும் ஏற்படுத்திய நொய்டா அருகிலுள்ள நிதாரியில் ஏராளமான குழந்தைகள் கொலை செய்யப்பட்ட செய்திகள் வெளியான பின்னர்தான் தனது குடிமக்களைப் பாதுகாக்க வேண்டிய அரசாங்கமும், அதன் காவல் துறையும், எவ்வாறு பொறுப் பற்றவர்களாக, இருக்கிறார்கள் என்றும், நாட்டின் குடிமக்கள் எவ்வாறு பாதுகாப்பற்ற நிலையில் இருக்கிறார்கள் என்பதும் தெளிவாகப் புலப்பட்டது. தமது குழந்தைகளை இழந்த வேதனையோடு காவல்நிலையத்தின் கதவைத் தட்டுகிற பெற்றோர், காவல்துறையின் பொறுப்பற்ற தன்மை காரணமாக அலைக்கழிக்கப்படுகிறார்கள். சமீபத்தில் அலகாபாத் நீதிமன்றம் குழந்தைகள் காணாமல் போகும் விசயத்தை தீவிரமாக விசாரணை செய்து திரைக்குப்பின்னே ஒளிந்திருக்கும் உண்மைகளை பகிரங்கமாக வெட்ட வெளிச்சமாக்கிவிட்டது.

குழந்தைகள் தொலைந்து போவது பற்றி பல்வேறு அமைப்புக்கள் திரட்டிய தகவல்களை ஒன்றோடொன்று ஒப்பிட்டுப்பார்த்த போது இந்த எண்ணிக்கை அதிர்ச்சியூட்டும் அளவுக்கு மிக அதிகமாக இருந்தது. உண்மையான எண்ணிக்கை இதைவிடக்கூடுதலாக இருக்கலாம். ஏனெனில் பெரும்பாலான சம்பவங்கள் புகாராகப்பதிவு செய்யாமல் விடுபட்டுப்போயிருக்கவும் சாத்தியமிருக்கிறது. உதாரணமாக, உள்ளூர் தொண்டு நிறுவனம் ஒன்றின் கணக்குப்படி, காஸியாபாத் பகுதியிலேயே கடந்த மூன்று மாதங்களில் 45 குழந்தைகள் காணாமல் போயிருக்கிறார்கள். தில்லியின் 'நவ சிருஷ்டி' என்ற அரசு சாரா அமைப்பு தகவலறியும் உரிமைச் சட்டத்தின் கீழ் திரட்டிய தகவல்படி தில்லியில் 3 முதல் 18 வயதுள்ள குழந்தைகள் ஏறத்தாழ நூறு பேர் காணாமல் போய் விட்டார்கள்.

குழந்தைகள் 'காணாமல்' போவது என்பது நாடு முழுமையிலும் அன்றாடம் நிகழ்கிற வாடிக்கையாகிவிட்டது. இந்தக் குழந்தைகள் உறவினராலோ அல்லது மற்றவர்களாலோ கடத்தப்படுவதோ சொந்தக்குடும்பத்தைச் சேர்ந்தவர்கள் அல்லது மற்றவர்கள் மிரட்டல் காரணமாக தாமே சுயமாக ஓடிப்போவதோ, அல்லது ஆதரிப்போர் எவருமின்றி கைவிடப்படுவதோ நிகழ்கிறது. இவையல்லாது வெவ்வேறு வகையிலான சுரண்டல் அல்லது பாலியல் நோக்கங்களுக்காக கடத்தப்படுவதும் கூட நடைமுறையில் உள்ளது.

தனது குழந்தை காணாமல் போய் கவலையடைந்த தந்தையொருவரால் இந்தப்பிரச்சினை அலகாபாத் உயர் நீதி மன்றத்தின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டது. அவர் காணாமல் போன தனது குழந்தையை மீட்க சட்டத்தின் துணையை நாடினார். இதன் மூலம் சுமார் 7000 குழந்தைகள் காணாமல் போய் இரண்டாண்டுகளுக்கு மேல் கடந்து விட்ட விவகாரம் வெளிச்சத்திற்கு வந்தது. காவல்துறை மட்டுமல்லாது குடிமக்கள் சமூகம் கூட இந்தப் பிரச்சினையில் தேவைக்கேற்ற அளவு அக்கறை காட்டுவதில்லை. காவல் துறையின் பணிச்சுமை மிக அதிகமாக இருப்பதாலோ, அமைப்பு நிலையில் இருக்கும் அடிப்படை கோளாறு, பொறுப்பற்ற தன்மையாலோ அல்லது அரசு மற்றும் நீதித்துறையிடமிருந்து தேவையான அளவு ஆதரவு இல்லாமலிருப்பதாலோ காணாமல் போகும் குழந்தைகளைக் கண்டுபிடிக்க காவல்துறை எள்ளளவும் முயற்சிக்காமல் கைகழுவி விட்டதாகவே தோன்றுகிறது.

காவல் துறையினர் ஏழைமக்கள் மீது அக்கறை கொள்வதில்லை. காணாமல் போன குழந்தைகள் குறித்து அதிகாரபூர்வமாக அறிவிக்கப்படும் எண்ணிக்கையை விட உண்மையான எண்ணிக்கை கூடுதலாகவே இருக்கும் என்பதை அரசும், சம்மந்தப்பட்ட, அமைப்புக்களும் ஒப்புக்கொள்கின்றன. சில வேளையில் தமது வீட்டிலிருந்து தானாகவே ஓடிப்போகும் குழந்தைகள் தனது உறவினர் வீட்டிலோ அல்லது ஏதேனும் அனாதை இல்லம் போன்ற நிறுவனத்திலோ அடைக்கலம் தேடும். ஆனால் பெற்றோர் தனது குழந்தை காணாமலே போய்விட்டதாக முடிவெடுத்து விடுகின்றனர். இது குறித்த தகவல்களை முழுமையாக ஒருங்கிணைக்காததால் இந்த சம்பவங்களின் முழு பரிமாணத்தையும் புரிந்து கொள்வது இயலாதிருக்கிறது.

எவ்வாறாயினும், அலகாபாத் உயர்நீதிமன்றம் காணாமல் போகும் குழந்தைகளை மீட்பது குறித்து வகுத்தளித்துள்ள நெறிமுறைகள் காவல்துறையின் பொறுப்பற்ற தன்மைக்கு ஒரு முடிவுகட்டும் என்றே சொல்லலாம். அஞ்சல் இலாகாவில் பணியாற்றி ஓய்வு பெற்ற விஷ்ணுதயாள் சர்மா என்பவர், தனது மகன் கிருஷ்ணகோபால் 2005 ஆம் ஆண்டு பிப்ரவரி 22 முதல் காணவில்லை எனப் புகார் செய்தும் அவனைக் கண்டுபிடிக்கக் காவல்துறை தனது சுட்டு விரலைக்கூட அசைக்காத நிலையில், அவர் உயர்நீதிமன்றத்தில் முறையிட்டதை யடுத்து, அலகாபாத் உயர் நீதிமன்றம் வரலாற்றுப் புகழ் வாய்ந்த உத்தரவு ஒன்றைப் பிறப்பித்தது. நீதிபதி அமர்சரண் உள்ளிட்ட குழு ஒன்று இந்த வழக்கு விசாரணையை 2007 ஜனவரி 2ல் துவக்கியவுடனே, மாநிலம் முழுமையிலும் காணாமல்

போன குழந்தைகள் குறித்த விவரப்பட்டியலை சமர்ப்பிக்குமாறு அரசைப் பணித்தது. காவல்துறை நீதிமன்றத்தில் தனது அறிக்கையை சமர்ப்பித்தது.

காணாமல் போன கிருஷ்ணகோபால் தொடர்வண்டி ஒன்றில் பயணம் செய்த கொண்டிருந்தபோது அதே கிராமவாசி ஒருவரால் அடையாளம் காணப்பட்டு வீட்டிற்குக் கொணரப்பட்டதுமே கிருஷ்ணகோபால் கடத்தல் வழக்கு தானாகவே முடிவுக்கு வந்துவிட்டது. ஆனாலும் இந்த வழக்கின் விளைவாக குழந்தைகள் காணாமல் போவது பற்றிய முழுமையான விவரம் சந்திக்கு வந்துவிட்டது. இல்லையானால் காவல்துறை இதுபோன்ற வழக்குகளை வழக்கமாகவே மூடிமறைத்துவிடும். ஏப்ரல் 2000 முதல் ஏப்ரல் 2008 முடிய உத்தரப்பிரதேச மாநிலத்தில் மட்டும் 7,659 குழந்தைகள் காணவில்லை. இதில் 5,965 குழந்தைகள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளனர். சிலர் இறந்துவிட்டனர். வீடு திரும்பிய குழந்தைகள் தானாகவே வந்துவிட்டார்களா அல்லது அவர்களைக் காவல்துறை மீட்டு பெற்றோரிடம் ஒப்படைத்ததா என்ற விவரம் தெளிவாக இல்லை. ஆனால் இதில் முக்கியமாக கவனிக்கப்பட வேண்டியது என்ன வென்றால், இன்னும் கண்டு பிடிக்கப்படாத மீதி 2000 குழந்தைகளின் கதி என்ன? அவர்கள் காவல்துறையின் கண்களுக்கு அகப்படவில்லையா? அலகாபாத் நீதிமன்றம் பிறப்பித்த உத்தரவுகளும், அதன் வழிகாட்டு நெறிமுறைகளும் குழந்தைகள் காணாமல் போகும் விஷயத்தில் நாடாளும் அரசுகள் பொறுப்போடு செயல்பட வேண்டுமென்பதைத் தெளிவாக்கியுள்ளன. குழந்தைகள் காணாமல் போகும் சம்பவங்கள் தொடர்பாக மத்திய மாநில அரசுகள் ஒருங்கிணைந்து செயல்பட வேண்டுமென நீதிமன்றம் அறிவுறுத்தியுள்ளது.

நீதிமன்றம் தெரிவித்துள்ள வழிகாட்டு நெறி முறைகள் மூலமாக தமது குழந்தைகளைப் பிரிந்து தவிக்கும் பெற்றோர் சட்டம் மற்றும் காவல்துறை சேவைகளை நாடிப்பெறுவதில் அற்புதமான மாற்றம் நிகழ்ந்துள்ளது. குறிப்பாக வறுமையில் வாடும், அதிகார பலமற்ற பெற்றோருக்கு இது வரப்பிரசாதமாகும். நீதிமன்றம் இது தொடர்பாக உள்துறை, பெண்கள் மற்றும் குழந்தைகள் நலத்துறை, தொழிலாளர் நலத்துறை, சமூக நலத்துறை, தில்லி மாநில அரசு, தில்லி மாநிலக் காவல்துறை, தேசியக் குற்றவியல் ஆவணக்காப்பகம் ஆகியவற்றோடு தேசிய அளவிலும், மாநில அளவிலும் செயல்படும் தன்னார்வ அமைப்புகளையும் ஒருங்கிணைத்துள்ளது.

உயர்நீதிமன்ற வழிகாட்டலின்படி, காவல்துறையும், நீதித்துறையும் இணைந்து செயல்பட்டு குறிப்பிடத்தக்க முன்னேற்றம் நிகழ்ந்துள்ளது. உத்தரப்பிரதேச காவல் துறைத்தலைவர் தனது துறை இரண்டு விதமான சுவரொட்டிகளைத் தயாரித்து அவற்றைப் பரவலாக ஒட்டியுள்ளது எனத் தெரிவித்துள்ளார். ஒரு சுவரொட்டியில் குழந்தைகள் காணாமல் போவது பற்றிய சம்பவங்களைப் பதிவு செய்ய தொடர்பு கொள்ள வேண்டிய தொலைபேசி எண்கள் அச்சிடப்பட்டிருக்கும். மற்றொரு சுவரொட்டியில் குழந்தையைப் பிரிந்த பெற்றோருக்காக குழந்தைகள் பாதுகாப்பாக வைக்கப்பட்டிருப்பது, குழந்தையைப் பாதுகாப்பது குறித்த விவரங்கள் இருக்கும். நீதிமன்றம் பிறப்பித்த உத்தரவின்படி மாநிலம் முழுவதும் பள்ளி செல்லும் 6 முதல் 14 வயது வரையிலான எல்லாக்குழந்தைகளையும் புகைப்படம் எடுப்பதற்காக 2007–08 ஆம் ஆண்டுக்கு 12.7 கோடி ரூபாய் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. ஒரு சிறப்புக் குழு உருவாக்கப்பட்டு அதில் மே 2008 வரை உள்துறை, பெண்கள் மற்றும் குழந்தைகள் நலத்துறை, தொழிலாளர் நலத்துறை, சமூக நலத்துறை, சட்ட உதவிக் குழுமம், அலகாபாத் மாவட்ட நீதிபதி ஆகியோர் இணைக்கப்பட்டுள்ளனர்.

**–Combat Law - 2008**

குழந்தைத் தொழிலாளர் பிரச்சினை இந்தியா மற்றும் உலகம் முழுவதற்குமான பெரும் பிரச்சினையாக இருக்கின்றது. இந்தியாவின் நகரவெளிகளின் முறைப்படுத்தப்படாத பிரிவில் குழந்தைத் தொழிலாளர் பிரச்சினை மிகவும் முக்கியமானதாக இருக்கின்றது. இந்தியாவில், இடம் மாறும் குழந்தைத் தொழிலாளர்களின் எண்ணிக்கை என்பது விரைந்து உயரக்கூடிய தாகயிருக்கின்றது. குடியேறிய குழந்தைத் தொழிலாளர்களின் நீட்சி மற்றும் அழியாதிருத்தல் இக்காலப்புதிய சமூகத்தின் மனசாட்சியின் மீதான களங்கமாகயிருக்கின்றது. பல குழந்தைகள் ஏழைக் குடும்பங்களில் ஏழ்மையின் காரணமாகவே வேலைக்கு அனுப்பப்பட்டு அதன்பின்பு ஏழ்மையின் கொடிய வளையத்தின் அங்கமாகின்றனர். இவ்வாறு, அவர்கள் சமூகத்தின் பிரதான நீரோட்டத்திலிருந்து புறக்கணிக்கவும், சுரண்டவும் மற்றும் பிரிக்கவும் படுகின்றனர். கல்வி மற்றும் பிற அடிப்படை சேவைகளையும் இழக்கின்றனர். இளைப்பாறும் வாய்ப்புகளையும் இழந்து உடல் ரீதியான பாதிப்பிற்குள்ளாகின்றனர். பட்டினியைப் போக்க எல்லா வசதிகளையும் ஆடம்பரங்களையும் தங்கள் வாழ்வில் இழப்பதோடும் கூட வளர்ச்சிக்கும் மேம்பாட்டிற்குமான வாய்ப்புகளையும் இழந்து உற்சாகமற்ற வாழ்வை அவர்கள் வாழ்கின்றனர்.

**குழந்தைத் தொழிலாளர் பற்றியக் கருத்து:**

குழந்தைத் தொழிலாளர் என்ற இந்த வார்த்தை வெவ்வேறு விதங்களில் வெவ்வேறு அறிஞர்கள், அமைப்புகள், நிறுவனங்கள் மற்றும் நாடுகளினால் விவரிக்கப்படுகின்றது. மேலும் ஒரு நாட்டிற்குள்ளேயே கூட இந்த விளக்கம் குழந்தைத் தொழிலாளர்

சம்பந்தப்பட்ட சட்டங்களின் வெவ்வேறு நோக்குகள் அல்லது கருத்துகளுக்கு ஏற்ப மாறு படக்கூடும்.

பன்னாட்டுத் தொழிலாளர் அமைப்பின் (ILO) படி, "குழந்தைத் தொழிலாளர்கள் என்பவர்கள் குறிப்பிட்ட வயதை அடையாமலே பெரியவர்களின் வாழ்க்கையை நடத்துபவர்கள், குறைந்த கூலிக்கு நீண்ட நேர வேலை செய்பவர்கள், கட்டுப்பாடுகளின் கீழ் தங்களின் உடல் ஆரோக்கியத்தைப் பாழாக்கிக் கொள்வதோடு மட்டுமில்லாமல் தங்களின் உடல் மற்றும் உள்ள மேம்பாட்டினையும் கெடுத்துக்கொள்பவர்கள், சில நேரம் தங்களின் குடும்பங்களைப் பிரிந்திருப்பவர்கள், நல்ல எதிர்காலத்திற்கு வழிவகுக்கும் அர்த்தம் நிரம்பிய கல்வி

## வகுப்பறையில் மாணவன் மரணம் – ரூ.6 லட்சம் நஷ்டஈடு வழங்க அரசுக்கு ஐகோர்ட் உத்தரவு

ஆசிரியர்கள் கவனக்குறைவால் வகுப்பறையில் இறந்த மாணவனின் தந்தைக்கு தமிழக அரசு ரூ.6 லட்சம் நஷ்டஈடு வழங்க ஐகோர்ட் இன்று உத்தரவிட்டது.

பொள்ளாச்சியைச் சேர்ந்த அரசு உதவி பெறும் எஸ்ஆர்ஜஎம்பி மேல்நிலைப்பள்ளியில் பிளஸ் 1 படித்து வந்த மாணவர் ஜெகன்குமார் கடந்த 2004ம் ஆண்டு ஜனவரி 12ம் தேதி மாணவர்களுக்குள் நடைபெற்ற விளையாட்டுச் சண்டையில் இறந்தார். இதற்குக் காரணமாக சகமாணவர் மீது போலீசார் வழக்கு தொடர்ந்து தற்போது அவர் சீர்திருத்தப்பள்ளியில் படித்து வருகிறார்.

வகுப்பறையில் ஆசிரியர் இல்லாத காரணத்தினால்தான், மாணவர்களுக்கிடையே சண்டை ஏற்பட்டது. பள்ளி நிர்வாகம் இதற்கு தகுந்த நஷ்ட ஈடு வழங்க வேண்டும் என்று கோரி சென்னை ஐகோர்ட்டில் ஜெகன்குமாரின் தந்தை வழக்கு தொடர்ந்தார். அவர் தனது மனுவில், "ஆசிரியர் பணிக்கு வரவில்லை என்றால் அவரது வகுப்புக்கு வேறு ஆசிரியரை அமர்த்த வேண்டிய பொறுப்பு தலைமை ஆசிரியருக்கு உள்ளது. பள்ளி வேலை நேரத்தில் மாணவர்கள் அமைதியாக இருக்கிறார்களா என்பதையும் தலைமை ஆசிரியர் கவனிக்க வேண்டும். இந்தக் கடமையிலிருந்தும் தலைமை ஆசிரியர் தவறி விட்டார். ஆசிரியரின் கவனக் குறைவினால் தான் எனது மகன் இறந்து விட்டான். ஒரே மகனை இழந்து தவிக்கும் எனக்கு ரூ.10 லட்சம் நஷ்டஈடு வழங்க உத்தரவிட வேண்டும்." என்று கூறியிருந்தார்.

இந்த வழக்கை நீதிபதி பால்வசந்தகுமார் விசாரித்தார். இரு தரப்பு வாதங்களும் முடிந்த நிலையில் 18.11.2008 அன்று தீர்ப்பளித்தார். தீர்ப்பில் கூறியிருப்பது:

"மாணவன் வகுப்பறையிலேயே மரணம் அடைந்துள்ளார். இதற்குக் காரணமான மற்றொரு மாணவன் தண்டனை பெற்று சீர்திருத்தப் பள்ளியில் அடைக்கப்பட்டுள்ளார். இந்த சம்பவத்துக்கு ஆசிரியர்களின் கவனக்குறைவு தான் முக்கிய காரணம். எனவே இறந்து போன மாணவனின் தந்தைக்கு ரூ.6லட்சம் நஷ்ட ஈடு வழங்க வேண்டும். அடுத்த ஆண்டு ஜனவரி 12–ம் தேதிக்குள் இந்த நஷ்ட ஈட்டை தமிழக அரசின் தலைமைச் செயலாளர் வழங்க வேண்டும்." என்று அந்த தீர்ப்பில் கூறப்பட்டுள்ளது.

**– மாலை முரசு, 19.11.2008**

# நகரவெளிகளில் குடியேறிய குழந்தைத் தொழிலாளர்கள்: சமூக சேவை தலையீட்டிற்கான வாய்ப்பு

–பிஷ்ணு மோகன் தாஸ்

மற்றும் பயிற்சி வாய்ப்புகளையும் அடிக்கடி இழந்தவர்கள் என்ற குழந்தைகளை உள்ளடக்கியது''. குழந்தையின் உரிமைகள் மீதான ஐக்கிய நாட்டு சபையின் உடன்படிக்கை (1982) மற்றும் குழந்தைத் தொழிலாளரின் மோசமான நிலைகள் மீதான பன்னாட்டு தொழிலாளர் அமைப்பின் (ILO) உடன்படிக்கை (1982) போன்றவை 18 வயது நிறைவடையாத வரை ஒருவரை, குழந்தை ஆய்வு அமைப்புப் படி, ''குழந்தைத் தொழிலாளர் என்பவர் ஐந்திலிருந்து பதினைந்து வயது வரைக்குள் இருந்து சம்பளத்திற்கானப் பணியில், அந்தச் சம்பளத்தைப் பெற்றோ அல்லது பெறாமலோ, ஒரு நாளின் எந்த நேரத்தில் வேண்டுமானாலும் குடும்பத்திலோ அல்லது குடும்பத்திற்கு வெளியிலோ வேலையில் ஈடுபடும் குழந்தை என்று குறிப்பிடப்படுகின்றார்''.

ஒரு குறிப்பிட்ட சட்டம் சொல்லும் நடவடிக்கைகளின் தன்மைக்கு ஏற்ப குழந்தைத் தொழிலாளர் வயது பற்றிய விளக்கம் ஒரு சட்டத்திலிருந்து மற்றொரு சட்டத்திற்கு வேறுபடுகின்றது. (குழந்தைத் தொழிலாளர் சார்புடைய மத்திய சட்டங்கள் குழந்தைத் தொழிலாளர் (தடை மற்றும் ஒழுங்குமுறை) சட்டம் 1986, 14 வயது நிறைவடையாத ஒருவர் குழந்தைத் தொழிலாளர் என்று விவரிக்கின்றது.) எல்லாவிதமான குழந்தைத் தொழிலாளருக்கும் இது பொருந்தும்.

### புலம் பெயரும் குழந்தைத் தொழிலாளர்கள் – காரணங்கள் மற்றும் விளைவுகள்

இந்தியாவின் நகரப்பகுதிகள் ஒரு வளமையான மக்கள் தொகைக் குவிப்பு, திடுமெனத் தோன்றும் குடிசைகள் மற்றும் நகர வறுமை போன்றவைகளால் குணங்காட்டப்படுகின்றன. கிராமப்புறங்களிலிருந்து நகரப் பகுதிகளுக்கான மக்களின் தொடர்ச்சியான ஓட்டம் இயற்கையான மக்கள் தொகை உயர்வுடன் இசைவதால் மாறுபட்ட சமூகப் பிரச்சினைகளுக்கு வழிவகுக்கின்றது. நகர மையங்களை நோக்கி குடிபெயரும் போது, குடியேறிகள் தங்களுடன் அதிகமான குழந்தைகளையும் கொண்டு வருகின்றனர். சம்பாதிப்பதை உயர்த்திக் கொள்வதற்கு தங்களின் குழந்தைகளுக்கு வெவ்வேறு பொருளாதார செயல்பாடுகளுடனான வேலையினை அவர்கள் தேடுகின்றனர். குழந்தைத் தொழிலாளர்கள் ஒழுங்கு முறைப்பிரிவுகளில் எளிதாக உட்புகுவது என்பது அதிகமாகவேயிருக்கின்றது.(கவுர், 2005). ஒரு பெரும் எண்ணிக்கையிலான குடிபெயர்ந்த குழந்தைகள் முறைப்படுத்தப்படாத பிரிவுகள், குறிப்பாக ஹோட்டல்கள், உணவு விடுதிகள், கேன்டீன்கள், சாலையோரக் கடைகள், பட்டறைகள் மற்றும் இதுபோன்ற பல்வேறு வியாபார நிலையங்களில் பணியமர்த்தப் படுகின்றனர். தள்ளுவண்டி வியாபாரிகள், கூலிகள், ஷூபாலீஷ்போடும் பையன்கள் மற்றும் கூடை வியாபாரிகளாகவும் கூட அவர்கள் வேலை செய்கின்றனர். பெரிய நகரங்களில், வாகனங்களைக் கழுவவும் சுத்தம் செய்யவும் குழந்தைகள் பணியிலமர்த்தப் படுகின்றனர்.

குழந்தைத் தொழிலாளர்கள் இல்லை என்ற நிலை ஏற்படுத்தப்பட பல்வேறு தளங்களில் நாட்டிற்குள்ளும், வெளியிலும் விவாதிக்கப் பட்டுள்ளது. மேலும் பல்வேறு வகையான அரசு தலையீடுகளும் செயல்படுத்தப் பட்டுள்ளன. இந்தியாவில், குழந்தைத் தொழிலை அழிக்க அரசு தலையீடுகள் என்றால் அடிப்படையில் இரண்டு வகைப்படும். ஒன்று சட்டபடியான தலையீடுகள் மற்றொன்று தேசிய குழந்தைத் தொழிலாளர் கொள்கை என்ற அமைப்பிலான சமூகநலத் தலையீடுகள். சட்டப்படியான தலையீடு குழந்தைகள் கூலிக்கு வேலை செய்வதை குறிப்பாக ஆபத்தான பணிகளிலிருந்து தடுக்கின்றது. எனினும், பொதுவான குழந்தைத் தொழில் என்பது பெரிதும் குடும்பத்திற்குள்ளேயே ஊதியம் எதையும் பெறாமல் வீட்டுப் பணிகளைச் செய்தபடி வீட்டிலோ, குடும்பப் பண்ணைகளிலோ அல்லது குடும்ப நிறுவனங்களிலோயிருக்கின்றது. வீடு சார்ந்த பிரிவுகள் சட்டங்களால் பாதுகாக்கப்படவில்லை (சிங், 2008). குழந்தைத் தொழிலாளர் (தடுப்பு மற்றும் ஒழுங்கு முறை) சட்டம், 1986ன் நியமங்கள் எதுவும் குடும்பத்தின் உதவியுடன் பணியினைச் செய்யும் குழந்தைத் தொழிலாளரை உள்ளடக்கிய எந்த பிரிவிற்கும், பொருந்துவதாகயில்லை. இந்த நியமத்தின் நிழலின் கீழ், வேலை தருபவர் ஒரு குழந்தை தொழிலாளியை தன் குடும்ப உறுப்பினர் என்பது போல் காட்ட முடியும்.

குழந்தைத் தொழிலை அழிப்பதற்கென்று பல்வேறு தேசிய மற்றும் பன்னாட்டு முயற்சிகள் எடுக்கப்பட்டிருந்தாலும் கூட அரசியல், பொருளாதார, மற்றும் நேர்மைக்கு ஒரு பெரிய சவாலாகவே அது தொடர்கின்றது. பன்னாட்டுத் தொழிலாளர் அமைப்பின் அண்மைக்கால (2004) கணக்கெடுப்பின்படி உலகம் முழுவதும் 5லிருந்து 17– வயது வரையிலான குழந்தைகளில் கணக்கெடுக்கப்பட்ட 317 மில்லியன் குழந்தைகள் சிலவகையான பொருளாதார செயல்பாட்டில் இருக்கின்றனர். அவர்களில் 218 மில்லியன் குழந்தைகள் குழந்தைத் தொழிலாளர் என்ற கண்டிப்பான விளக்கத்திற்குள்ளேயே வருகின்றனர். 126 மில்லியன் குழந்தைகள் ஆபத்தான பணிகளிலேயே

பணியமர்த்தப்பட்டுள்ளனர். வேறொரு விதமாக சொல்வதென்றால், 2/3 பங்கு குழந்தைத் தொழிலாளர்கள் இதுவரையிலும் ஆபத்தான பணிகளில் அமர்த்தப்பட்டுள்ளனர். இந்தியாவின் 2001 ஆம் ஆண்டு மக்கள் தொகைக் கணக்கெடுப்பின் படி, நம் நாட்டிலுள்ள குழந்தைத் தொழிலாளரின் எண்ணிக்கை 12,591,667 என்று கணக்கிடப்பட்டுள்ளது. 1971லிருந்து தொடங்கி, குழந்தைத் தொழில் என்பதன் தோற்றம் உயரும் போக்கிலேயே உள்ளது. பின்வரும் அட்டவணையிலுள்ள வெவ்வேறு காலங்களுக்கான மக்கள் தொகைக் கணக்கெடுப்பு நம் நாட்டின் குழந்தைத் தொழிலாளர் நிலையை விவரிக்கின்றது.

| ஆண்டு | குழந்தைத் தொழிலாளர் எண்ணிக்கை |
|---|---|
| 1971 | 10,753,985 |
| 1981 | 13,640,870 |
| 1991 | 11,285,349 |
| 2001 | 12,591,667 |

(ஆதாரம்: சேகர்,2007)

வேகமான நகரமயமாதல், கிராமத்திலிருந்து நகரத்திற்கு குடிபெயர்தல், கூட்டுக்குடும்பம் மற்றும் ஊர், இன அமைப்பின் ஒற்றுமையின்மை போன்ற சமூகப் பொருளாதாரக் காட்சிகளில் ஏற்பட்டுள்ள மாற்றங்களால் குடிபெயரும் குழந்தைத் தொழிலாளர் எனப்படும் ஊறுபடக்கூடிய குழந்தைக் கூட்டம் பிரசவிக்கப்பட்டது. குடிபெயரும் குழந்தைத் தொழிலாளர் பிரச்சினை திடீரெனத் தோன்ற, விவசாயத்தில் தோல்வி, திரும்பத் திரும்ப ஏற்படும் பஞ்சங்கள், முதல் மற்றும் நிலமில்லாமல் போகும் பெற்றோர்கள், துன்பமான வாழ்க்கை நிலைகள், சுதந்திரமனப்பாங்கு மற்றும் பாசப்பிணைப்புகளும் காரணமாகின்றன. தீராத வறுமை, வேலையின்மை, நெருக்கமான வீடுகள், பெற்றோரின் தவறான வழிகாட்டுதல், குடிக்கு அடிமையாயிருத்தல் போன்றவையும் கூட குழந்தைத் தொழிலுக்கு வழிவகுக்கின்றன. இவைகள் மட்டுமின்றி, போதுமான நடைமுறை இல்லாத பற்றாக்குறை சட்டங்களும் கூட குழந்தைத் தொழிலுக்குக் காரணமாகின்றது.

பெரும்பாலான உதாரணங்களில், சிறுவர்கள் பெரியவர்களைவிட மிகவும் சுறுசுறுப்பாகவும், வேகமாகவும் செயல்படுபவர்களாகவும் மேலும் சில பணிகளில் பெரியவர்களைவிட குறைவாகவே சோர்வடைபவர்களாகவும் இருப்பதால் சிறுவர்களையே பெரியவர்களுக்குப் பதிலாக வேலை கொடுப்பவர்கள் தேர்வு செய்கின்றனர். மேலும் பெரியோரை விட சிறுவர்கள் ஒழுங்குக்கும் கட்டுப்பாட்டிற்கம் மிகவும் கட்டுப்படுபவர்களாகயிருக்கின்றனர். அவர்களின் தகுதிநிலை வழக்கமான பணியாளர்களுக்கு உள்ளதுபோல் வழங்கப்படாமல், தற்காலிகமானதாகவும், விளிம்பிலிருப்பதாகவும் இருக்கின்றது. குறைவான சம்பளம் கொடுக்க முடிவதாலும் வேலைகொடுப்பவர் சிறுவர்களைப் பணியமர்த்துகின்றனர். பெரும்பாலான உதாரணங்களில் பெற்றோர் தங்களின் குழந்தைகள் வேலைக்குப்போவதால் ஒழுங்கடைவதாகவும், சார்ந்திருக்கும் தன்மையை விடுவதாகவும், கடமையுணர்ச்சி இல்லாமல் சுற்றித் திரிபவர்களிடமிருந்து பாதுகாக்கப்படுவதாகவும் உணர்கின்றனர். எனவே தங்கள் குழந்தைகளை மிகவும் குறைவான கூலிக்கு வேலைக்கு அனுப்புகின்றனர்.

தனிப்பட்டவர், குடும்பம் மற்றும் பரந்த சமூகம் போன்றவையும் குடிபெயரும் குழந்தைத் தொழிலாளர் தோற்றத்திற்கு உடந்தையாகின்றனர். குடிபெயரும் குழந்தைத் தொழிலாளர் பல்வேறு வகையான பிரச்சினைகளை சந்திக்கிறார். அவர்கள் ஒதுக்கப்பட்டும், உரிமைகளை இழந்தும், கவனிப்பாரில்லாத குழந்தைகளாகவும், தங்களின் பிழைப்பிற்காகவும் வாழ்விற்காகவும் போராடுபவர்களாகவும் இருக்கின்றனர். வேலை செய்யும் குழந்தைகளின் ஆரோக்கியம் எப்போதுமே ஆபத்துக்குட்படுத்தப்படுகின்றது. ஊட்டக்குறைவு மற்றும் குறைவான உணவினையே அதிகம் எடுத்துக்கொள்வதால் அவர்களின் உடல் ஆரோக்கியம் மிகவும் துன்பமுடையதாகின்றது. வேலையில் ஈடுபடும் குழந்தைகள் காசநோய், இரத்தசோகை, ஆஸ்துமா, தோல் நோய்கள், கண் மற்றும் காது கோளாறுகள் போன்றவைகளை உள்ளடக்கிய பல்வேறு தொற்றுநோய்களால் துன்பப்படுகின்றனர். குழந்தைத் தொழிலாளர்கள் இடையே பாலியல் நோய்கள் பெரும் அளவில் பரவுகின்றன. பெரும் அளவிலான சிறுவர்கள் போதைக்கு அடிமைகளாகவும் இருக்கின்றனர். தொடர்ந்து அச்சுறுத்தும் விதத்தில் போக்குவரத்து விபத்துகளில் பலியாகுபவர்களாகவும் குழந்தைத் தொழிலாளர்கள் இருக்கின்றனர். (ஜோஷி, 2006, நோஸ்சியா 1987). வேதிப்பொருட்கள் பயன்படுத்தப்படும் வேலைகளிலிருக்கும் சிறுவர்களுக்கு தோல்கள் தடித்தல் மற்றும் அரிப்பு போன்ற ஆரோக்கிய கேடுகள் காணப்படுகின்றது. மூட்டுகளில், கழுத்தெலும்புகளில் வீக்கம் மற்றும் திருப்ப முடியாத நிலை (அன்கைலாஸிஸ்), முதுகெலும்பில் வீக்கம் (ஸ்பான்டைலைட்டிஸ்) மற்றும் நிலையான முகுகெலும்புசீர்குலைவு போன்றவை பணியின் போது செயல்படும் மற்றும் அமர்ந்திருக்கும் இயல்பிற்கு ஒவ்வாத நிலைகளால் ஏற்படுகின்றது. பெரும்பாலான குழந்தைத் தொழிலாளர்கள் குறிப்பாக உடல் ரீதியான, பாலியல் ரீதியான மற்றும் காவல்துறைரீதியானது போன்ற எல்லா வகையான தவறான கையாளுதலுக்கும் உட்பட்டு மிகவும் துன்பப்படும் நிலையில்லுள்ளனர். (சேகர் 2007).

பெரும் எண்ணிக்கையிலான குழந்தைத் தொழிலாளர்கள் தங்களின் சொந்தக் குடும்பங்களை விட்டுப் பிரிந்திருப்பதால் சந்தோஷமில்லாத ஒரு நிஜத்தைச் சந்திக்கின்றனர். பெரும்பாலான குழந்தைத் தொழிலாளர்கள் பாதுகாப்பின்மை, தாழ்வுமனப்பான்மை, குறைவான தன்னம்பிக்கை மற்றும் தளர்ச்சி போன்ற உணர்வுகளைப் பெற்றிருக்கின்றனர். பெரும் எண்ணிக்கையிலான குழந்தைத் தொழிலாளர்கள் ஏக்கம், மனஅழுத்தம் போன்ற பல்வேறு வகையான நரம்பு சம்பந்தமான நோய்களாலும் பாதிப்படைகின்றனர். எனவே, அவர்களின் மனநல மேம்பாடு என்பது எப்போதுமே பிரச்சினைக்குரியதாகயிருக்கின்றது.

குழந்தைத் தொழிலாளர்கள் ஓய்வு மற்றும் இளைப்பாறும் செயல்பாடுகளில் பங்கு கொள்ள முடியாததால் மனநலம் சார்ந்த வசதிகளை இழக்கின்றனர். இதனால் வேறுவிதங்களில் தேடி அவர்களில் பெரும்பாலானோர் புகைப்பிடித்தல் மற்றும் குடிப்பதைப் பழக்கிக் கொள்கின்றனர். அவர்களில் சிலர் போதைமருந்துக்கு அடிமைகளாகவோ அல்லது சூதாட்டங்களில் நேரங்களை செலவிடுபவர்களாகவோ மேலும் இது போன்ற மற்ற குற்றநடவடிக்கைகளில் ஈடுபடுபவர்களாகவும் அவர்கள் மாறுகின்றனர். குழந்தைத் தொழிலாளர்கள் கல்வி மற்றும் வேலையின் வசதிகளை இழக்கின்றனர். வேலைக்கு செல்லாத குழந்தைகளுக்கு அவைக் கிடைக்கின்றன. பெரும்பாலான குழந்தைத் தொழிலாளர்கள் பள்ளிக்குச் செல்லவே முடிவதில்லை அல்லது கல்விக்காலத்திற்கு முன்பே பள்ளியை விட்டுவிட நிர்பந்திக்கப்படுகின்றனர் (சாண்டில்யா 2006). தங்களின் சமூக மற்றும் உணர்வு மேம்பாட்டிற்குத் தேவையான விளையாட்டு மற்றும் இளைப்பாறும் வசதிகளை இழக்கின்றனர். எனவே, அவர்களின் குழந்தைப்பருவம் பொருளாதாரம் சார்ந்தவைகளால் தொலைந்துபோகின்றது. இதன் பலனாக அவர்கள் உடல், மனம் மற்றும் சமூக ரீதியாக நசுக்கப்பட்டக் குடிமகன்களாக வளர்கின்றனர்.

## குழந்தைத் தொழிலாளர்களுக்காக கட்டப்பட்ட சட்டங்கள்:

மனிதத்தின் முன்பு இன்று மிகவும் முக்கியமான மற்றும் விரைவான வேலைகளில் ஒன்றாக குழந்தைத் தொழிலை முற்றிலும் ஒழிப்பதென்பது அடையாளங்காணப் பட்டுள்ளது. குழந்தைத் தொழிலாளர் பிரச்சினையை எதிர்த்துப்போராடுதல் என்ற விஷயத்தில் இந்தியா எப்போதுமே கட்டுப்படுத்தும் கொள்கையையே பின்பற்றுகின்றது. குழந்தைத் தொழிலை இல்லாமல் செய்ய இந்தியா எப்போதுமே சட்டத்திற்கிசைந்த சட்டத்தினால் ஏற்பட்ட மேம்பாட்டு நடவடிக்கைகளுடனே நிற்கின்றது. குழந்தைத் தொழிலாளர் (தடுப்பு மற்றும் ஒழுங்குமுறைச் ) சட்டம், 1986 வெளியிடப்படுவதற்கு முன்பே பல்வேறு சட்டங்கள் தொழிற்சாலைகள், சுரங்கங்கள் மற்றும் ஆபத்தான பணிகளில் பாடுபடும் 14 வயதுக்குக்கீழுள்ள குழந்தைகளின் வேலையை முறைப்படுத்தவும், தடைசெய்யவும் தவிர மற்றப் பணிகளிலிருக்கும் குழந்தைகளின் பணிசெய்யும் நிலைமைகளை முறைப்படுத்தவும் இருந்தன. அவைகளில் முக்கியமானதாக, தொழிற்சாலைகள் சட்டம் 1948, சுரங்கங்கள் சட்டம், 1952; இந்தியத் துறைமுகங்கள் சட்டம், 1931; தேயிலை மாவட்டங்கள் (குடிபெயரும்) சட்டம் 1932; குழந்தைகள் (தொழிலாளர்) அடமானச் சட்டம் 1933; குழந்தைகள் வேலைச் சட்டம் 1938; தோட்டத் தொழிலாளர் சட்டம் 1951; கப்பலேற்றுமதி வியாபாரத் சட்டம் 1968; இயந்திர போக்குவரத்து பணியாளர் சட்டம் 1961; தொழில் பயில்வோர் சட்டம் 1961; பீடி மற்றும் சிகரெட் தொழிலாளர் (பணி வரையறைகள்) சட்டம் 1966 போன்றவை குழந்தைகள் வேலைக்கு அமர்த்தப்படுவதை தடை செய்கின்றன. குழந்தைத் தொழிலாளர் பிரச்சினையைத் தடை செய்யவும், முறைப்படுத்தவும் பல்வேறு சட்டத்திற்கிசைந்த ஷரத்துக்கள் இருக்கின்றன.

அரசியலமைப்புச் சட்ட விதி 24, எந்தவொரு பதினான்கு வயதிற்குக் கீழுள்ள குழந்தையும் தொழிற்சாலை அல்லது சுரங்கம் அல்லது மற்ற ஆபத்தான வேலையிலும் பணியமர்த்தப்படக் கூடாது என்று சொல்கின்றது. அரசு தன்னுடைய கொள்கையில் தனித்துவமாக இளம் வயதினரான சிறுவர் எவரும் தவறாகக் கையாளப் படவில்லை என்றும், மேலும் எந்தப் பொருளாதார நிர்பந்தத்தினாலும் தங்கள் வயது மற்றும் உடலின் முடியக்கூடியத் தன்மையைக் கெடுக்கக்கூடிய வகையில் வேலையினை ஒத்துக்கொள்ளவில்லை என்பதையும் உறுதி செய்யக்கூடிய வகையில் முயற்சி செய்ய வேண்டும் என்று சட்ட விதி 31 சொல்கின்றது. அரசு கொள்கையின் கட்டளை விதிகளின் சட்ட விதி 39(e) ஆண், பெண் பணியாளர்களின் ஆரோக்கியம் மற்றும் உடல் வலுவினையும், இளம் வயதிலான சிறுவர்கள் யாரும் தவறாகக் கையாளப்படாததையும், பொருளாதாரத் தேவையால் அந்த குடிமக்கள் யாரும் தங்கள் வயது மற்றும் உடல்பலத்திற்குப் பொருந்தாத பணியில் நுழையவில்லை என்பதையும் உறுதி செய்கின்றது. சட்டவிதி 39(f) குழந்தைகளுக்கு ஆரோக்கியமான விதத்திலும், சுதந்திரமான மற்றும் மேன்மையான சூழலின் மூலமும் மேம்பாடடைய வாய்ப்பும், வசதிகளும் வழங்குதல், மேலும் தங்கள் குழந்தைப்பருவம் மற்றும் இளமையை தவறாகக்கையாளுதல் மற்றும் நியாயம் நீதியைக் கைவிடுதலுக்கு எதிராகவும் பாதுகாக்கின்றது. சட்டவிதி 45 பதினாலு வயது முடியும் வரை எல்லாக் குழந்தைகளுக்கும் இலவச கட்டாயக்கல்வியை வழங்குமாறு அரசினை நிர்பந்திக்கின்றது.

அவை நீங்கலாக, பல்வேறு சட்டங்கள் ஷரத்துக்களை வேலை செய்யும் சிறுவர்களுக்குப் பாதுகாப்பினை

வழங்குவதற்கு ஏற்படுத்தின. இவ்வளவு சட்டங்கள் எல்லாம் செயல்பாட்டில் இருந்தாலும், குழந்தைத் தொழில் என்பது நம் நாட்டில் இன்னமும் உயர்ந்திருக்கின்றது. இந்த நடவடிக்கைகள் விருப்பமான பலனை கொண்டு வரவில்லை. எனவே, குழந்தைத் தொழிலாளர் (தடுப்பு மற்றும் ஒழுங்குமுறைச் ) சட்டம் 1986ல் நிறைவேற்றப்பட்டது. அட்டவனைப்படுத்தப்பட்ட 15 ஆபத்தான தொழில்கள் மற்றும் 57 செயல்பாடுகளில் சிறுவர்கள் பணிசெய்வதை இச்சட்டம் தடை செய்கின்றது. இச்சட்டத்தின் நடைமுறைப்படுத்தலுக்குப் பிறகு, ஆபத்தானத் தொழிற்சாலைகளில் சிறுவர்கள் பணியமர்த்தப்படுவதிலிருந்து பாதுகாக்கப்பட்டனர் என்பது ஆன்ம அளவில் இல்லாமல் காகித அளவிலேயே உள்ளது. அக்டோபர் 10, 2006ல் தொழிலாளர் நலத்துறை அமைச்சகத்தால் வெளியிடப்பட்ட அறிக்கை சாலை ஒர உணவுக் கடைகள், தாபாக்கள், மோட்டல்கள் போன்ற வீட்டுக்குரிய அல்லது வெளியார் இடங்களில் பணி செய்யும் 6 லிருந்து 14வயது வரையிலான சட்டப் பாதுகாப்பல்லாத குழந்தைகளைப் பற்றிப் பேசுகின்றது. இந்த அறிக்கை ஏழை மற்றும் தேவையிலுள்ளக் குழந்தைகள் தவறானக் கையாலுதலுக்குட் படுத்தப்படுதல் என்பது உயர்ந்துள்ளதால் ஏற்பட்டுள்ள விழிப்பினால் மேற்கொள்ளப்பட்ட வரவேற்பிற்குரிய நடவடிக்கை என்பதில் சந்தேகம் எதுவுமில்லை, ஆனால் அதன் நடைமுறைப்படுத்தப்படுதல் என்பது வெகுதூரத்திலிருந்து கொண்டு வரவேண்டியதாகவே உள்ளது. இளம் மற்றும் ஏழைக் குழந்தைகள் அருகிலுள்ள டீக்கடைகளிலும், துரித உணவக வண்டிகளிலும் குழந்தை தொழிலாளர்களாக இருப்பதை நம்மால் இன்றளவும் பார்க்க முடிகின்றது. சிலர் நகலெடுக்கும் கடைகளில் பணிசெய்யவர்களாகவும், வேறுசிலர் பாத்திரங்களை கழுவுவதால் தங்களின் பொன்னான குழந்தைப் பருவத்தைக் கழிப்பவர்களாகவும் இருக்கின்றனர். அரசாங்கம் இந்த அறிக்கையை சமர்பித்து முழுவதும் ஒரு ஆண்டு ஆகிய பிறகும், தவறாகக் கையாளப்படுபவர்களின் உயர்வு மற்றும் வளர்ச்சியின் நிமித்தமான அதன் முயற்சிகளைப் புதுப்பிக்க நடவடிக்கைகள் எதையும் எடுக்கவில்லை (ஜெயின், 2007).

### தொண்டு நிறுவனங்களின் செயல்பாடுகள்:

தொண்டு நிறுவனங்களின் தலையீடு என்பது குறிப்பாக குழந்தைத் தொழிலாளரின் தந்தை போதைக்கு அடிமையாகவோ அல்லது வேலையில்லாமலோ இருக்கும்போது குடும்ப அளவில் தேவையாகயிருக்கின்றது. தன்னார்வத் தொண்டு அமைப்புகள் இத்தகைய குடும்பங்களுடன் நெருக்கமாகப் பணிசெய்வதும், அறிவுரை மற்றும் வழிகாட்டுதல் சேவைகளை வழங்க வேண்டியதும் தேவையாகின்றது.

இந்தப் பிரச்சினையைச் சமாளிக்க கூடிய உபாயங்களை என்ஜிஓக்கள் மேம்படுத்த வேண்டியுள்ளது. குடிபெயரும் குழந்தைத் தொழிலாளர் பிரச்சினை என்று எளிதாக சுற்றளவின் மீதிருந்துக் திருத்த கூடியதாகயில்லாமல் இறுக்கமான கட்டுமானச் சீர்திருத்தங்களைக் கொண்டு வரவேண்டிய ஒரு சவாலாக இன்று தன்னார்வத் தொண்டு அமைப்புகளுக்கு இருக்கின்றது. ஒழுங்கில்லாப் பிரிவினை ஒருங்கிணைக்கவும், பொருளாதார ரீதியில் பலமில்லாத பிரிவுகளுக்கு சிறிய அளவிலான பொருளாதார உதவிகளை வழங்கவும், வேலை நிர்பந்தத்தில் குழந்தைகளை அனுப்புவதை நிறுத்துவதற்கு உரிய மக்களை அறிவுறுத்தும் செயல்பாட்டினைச் செய்யவும் நடவடிக்கைகளை தன்னார்வத் தொண்டு அமைப்புகள் எடுக்கவேண்டும். வீட்டிலுள்ளவர்களுக்கு சிறுகடனுதவி, வேலை செய்வதற்கு உணவு மற்றும் தொழிலாளர் நலச் சட்டங்களை நடைமுறைக்குக் கொண்டுவருதல் போன்ற அரசாங்க தலையீடுகளும் கூட இந்த இலட்சியத்தை அடைய பயனளிக்கக் கூடியவையாகும். சமூக மக்களின் ஈடுபாடு அதிகமாதல், கல்வி மற்றும் வறுமையை ஒழிப்பதில் அரசின் நிதிஒதுக்கீடு அதிகமாதல் போன்றவையும் இந்தப் பிரச்சினையைத் தீர்க்க முக்கியத் தேவையாகின்றன. தேசிய கிராமப்புற வேலை வாய்ப்பு உத்தரவாதத் திட்டத்தின் அறிமுகம் என்பது இந்தப் பாதையில் வரவேற்பிற்கு உரிய நடவடிக்கையாகவே இருந்தது. வேலை செய்யவேண்டியப் பொறுப்பிலிருந்து ஒரு குழந்தையை விடுவிக்கவறுமையில் போராடும். அதன் குடும்பத்தின் பொருளாதார நிலையில் மாற்றம் வரவேண்டியது. அவசியமாகின்றது. வருமானத்தைக் கொடுக்கும் திட்டங்கள் மட்டுமின்றி, கிராம வங்கிகளிடமிருந்து எளியக்கடனுதவிகளை பெறுவதற்கு ஏழைக்கு பெரும் அளவிலான வாய்ப்புகள் இருக்க வேண்டியதும் அவசியமாகின்றது. இது எந்த கடனுதவிகளையும் திரும்ப செலுத்தகூடிய வகையில் அவர்களுக்கு மிகவும் முக்கியமாக உதவமுடியும். மேலும் இது அவர்களின் வேலையில் பொறுப்புணர்ச்சியை அதிகமாக்கும். ரிசர்வ் வங்கியின் நிதி நிர்வாகம் உள்ளடக்கிய கொள்கை இந்தப் பாதையில் ஒரு சாதகமான நடவடிக்கையாகயிருக்கின்றது. குறைவான அல்லது இருப்பேயில்லாத கணக்குகளின் அறிமுகம் நிச்சயமாக ஏழை மக்கள் வங்கிக்கணக்குகளைக் தொடங்க உதவியாகவும், கடன்களைப் பெற வசதியாகவும் இருக்கக்கூடும். பிரச்சினையின் வேராகயிருக்கிற சமூக பொருளாதார வாழ்நிலையிலும் ஒருபுறத்தில் மாற்றங்கள் கொண்டுவராமல் சமாளிக்க முடியும் என்பதற்கு குழந்தைத் தொழிலாளர் பிரச்சினை ஒன்றும் தனித்தவேறான பிரச்சினையில்லை.

குழந்தைகள் யாரும் கண்டிப்பாக வேலை செய்யாமல்

பள்ளியில் கல்விகற்க வேண்டும் என்று ஒரு கடுமையான சட்டம் நடைமுறைப் படுத்தப் படவேண்டும். பள்ளிக்கூடம் என்பது குழந்தைகளை வேலைக் கட்டாயத்திலிருந்து பின்வாங்க வைப்பதில் மிகவும் பொருத்தமான நிறுவன செயல் பாடாகயிருக்கின்றது. சமூகத்தில் தங்களின் பாத்திரத்தைப் புரிந்துகொள்ளும் வாய்ப்பினை வழிகாட்டுதலுடன் பள்ளிக்கூடம் குழந்தைகளுக்கு வழங்குகின்றது. இத்தகைய பள்ளிகளின் ஆசிரியர்கள் இத்தகைய குழந்தைகளுக்கு நடத்துவதற்கு சரியான பயிற்சியும் பகுதிசார்ந்த புரிதலையும் கண்டிப்பாகப் பெற்றிருக்க வேண்டும். கிராமப்புறங்களில் இருக்கும் பள்ளிகளில், சமூகப் பணியாளர்கள் கல்வியின் முக்கியத்துவத்தைப் பற்றி மாணவர்களிடமும், ஏழைப் பெற்றோர்களிடமும் ஆலோசனை வழங்க கண்டிப்பாக பணியமர்த்தப்படவேண்டும். இவ்வாறான கல்வி மையங்களின் கொள்கை என்பது எளிமையானதாகவும், குழந்தைத் தொழிலாளரின் தேவைக்கேற்ப குறிப்பாக இலகுவான காலநேரங்களில் இருக்கவேண்டியது அவசியம். நகரமய குடிசைகளில் வேலைக்கான பயிற்சிமையங்கள் குறைவான படிப்பு உடையவர்களுக்கு தங்கள் தொழில் திறமையை வளர்த்துக் கொள்ள பல்வேறு இடங்களில் தொடங்கப்பட வேண்டும். இது குழந்தைகளுக்கு பிற மாற்றான வேலைகளைத் தேடிக் கொள்ள உதவுவதாகவும், ஏழை மற்றும் தேவையான குழந்தைப் பிரிவிற்கு ஒரு திட்டமிட்ட எதிர்காலத்தை வழங்கக் கூடியதாகவும் இருக்கும். கல்வியின் தரமும் கூட மேம்பாடடைய முடிகின்றது. அதன்மூலம் பள்ளி செல்லுதல் என்பது குழந்தையின் எதிர்கால வெற்றிக்கு முக்கியக் காரணியாகின்றது. வறுமையானப் பொருளாதாரச் சூழல்கள் வேலைக்குப் போதல் மற்றும் பள்ளிக்குப் போதலிடையே குழந்தைகளின் மீது பிரச்சினையை ஏற்படுத்துகின்றன. எனவே, பள்ளிக்கான வாய்ப்புகள் எளிதாகயிருந்தாலும் அவர்களின் பொருளாதார நிலை அனுமதிக்காமல் இருப்பதால் படிக்கச் சேரும் மாணவர்களின் எண்ணிக்கை உயருவதில்லை.

இறுதியாக குழந்தைத் தொழிலின் விளைவுகளை உணரும்விதத்தில் பெற்றோரையும், வேலைக்கொடுப்போரையும் அறிவுறுத்த வேண்டியது தொண்டு நிறுவனங்களின் கடைமையாகும். குழந்தை தொழிலாளர் தொடர்புடைய பல்வேறு வகைப்பட்டவர்களிடையே நல்ல புரிதலையும் விழிப்புணர்வும் உருவாக்கினால் இப்பிரச்சினையின் தீவிரம் நிச்சயமாகக் குறையும். வெறும் சட்டம் என்பது மட்டுமே குடியேறும் குழந்தைத் தொழிலாளர் என்பதேயில்லாமல் முற்றிலும் செய்துவிட போதாது. தொழிலாளர் நல அலுவலர்கள் வழக்கு மற்றும் நீதித்துறை அலுவலர்கள் குழந்தைத் தொழிலாளரின் பிரச்சினைகள் மற்றும் கஷ்டங்களை உணர வேண்டியது விரைவான தேவையாகின்றது. இப்பிரச்சினை என்பதேயில்லாமல் செய்ய நீதித்துறை அரசு அலுவலர் மற்றும் என்ஜிஒக்களின் ஒருக்கிணைந்த முயற்சிகளைத் தீவிரமாக எடுக்கவேண்டும். குழந்தைத் தொழிலாளர் தடுப்பு மற்றும் ஒழுங்குமுறைச் சட்டம், 1986ன் நடைமுறைப்படுத்துதல் என்பது இந்திய சட்டவிதிகளின் எண் 21,24,45,39 (e) மற்றும் (f) ன் சரியான நடைமுறைப்படுத்தலிருந்து குறைவாகவோ அல்லது அதிகமாகவோ இருக்கின்றது. ஆனால், விருப்பப்பட்ட முடிவை அது கொண்டுவரவில்லை. சமூகப் பணியாளர்கள் நீதித்துறை அலுவலர்கள், காவல்துறை அலுவலர்கள், வேலையளிப்போர்கள் மற்றும் பெற்றோருடன் சரியான விதத்தில் பொருத்திக் கொண்டு நம் நாட்டிலிருந்து குழந்தை தொழில் என்பதே முற்றிலும் இல்லாமல் செய்யவேண்டியது முக்கியமாகின்றது.

1. அரசியல் சட்டத்தின் அடிப்படையான சமத்துவ கோட்பாட்டினை மீறுவதாக இருப்பதால் இந்த மசோதா அரசியல் சட்டத்திற்கு முரணாகும். சமூக – பொருளாதார நிலைக்கேற்பப் மாறுபட்ட பள்ளி அமைப்புகளை மசோதாஏற்க்கின்றது.

6 முதல் 14 வயது வரையுள்ள அனைத்து குழந்தைகளுக்கும் இலவச, கட்டாய கல்வி அரசு அளிக்க வேண்டும் என்று அரசியல் சட்ட பிரிவு 21 A கூறுகையில், கட்டணப்பள்ளிகளில் உள்ள குழந்தைகள் இப்பிரிவின் வீச்சிலிருந்து விலக்கப்படுகின்றனர்.

2. சமுதாயத்தை ஒருங்கிணைக்கவும், குழந்தைகளுக்கு வீட்டருகிலேயே கல்வி பெறவும் வசதியாக 'பொது பள்ளி அமைப்பு', 'அருகாமை பள்ளி முறை' ஆகியவற்றை பல்வேறு கல்விக் குழுக்களும் வலியுறுத்தியுள்ளன. மேலும் அவை தேசிய கல்வி கொள்கையிலும் இடம் பெற்றுள்ளன. ஆனால், மசோதா பொது பள்ளி அமைப்பை பற்றி ஏதும் குறிப்பிடவில்லை. சில சரத்துகளில் 'அருகாமை' என்ற சொல்லை பயன்படுத்தியிருந்தாலும், 'அருகாமை' என்ற சொல்லிற்கான விளக்கம் கொடுக்கவில்லை. அருகாமைப்பள்ளி சித்தாந்தத்தையும் மசோதாஏற்கவில்லை.

3. 'இலவசம்', 'கட்டாயம்', 'அருகாமை' இன்னும் பல சொற்களுக்கு சொல் விளக்கம் மசோதாதரவில்லை. விதிகள் இயற்றும் அமைப்பிற்கு இப்பொறுப்பு விடப்படுவது தவறு. நாடாளுமன்றம்தான் சரியான விளக்கங்களை கவனிக்க வேண்டுமே தவிர, அதிகார வர்க்கத்திடம் இப்பொறுப்பினை ஒப்படைப்பது ஏற்புடையதன்று. இதுபோலவே உள்ளாட்சி அமைப்புகளுக்கு அதிகாரம் அளிப்பதில் தெளிவு இல்லை.

4. அரசியல் சட்ட பிரிவு 19–ன் படி எவ்வொரு இந்தியக் குடிமகனுக்கும் அரசு உதவி பெறாத கல்விக்

கூடங்களை ஏற்படுத்தவும் நடத்தவும் உரிமை உண்டு என்று D.M.A பாய் தீர்ப்பில் உச்சநீதிமன்றம் கூறியுள்ளது. இத்தகைய அனுமதி தேச நலன் மற்றும் மதச்சார்பின்மைக்கு எதிரான சக்திகள் கட்டுபாடுல்லாத அளவிற்க்கு கல்வி கூடங்கள் அமைக்க வழி வகுக்கும். கல்விக் கூடங்கள்

## கல்வி உரிமை சட்டம் வந்தும் பலனில்லை 50 சதவீத குழந்தைகளுக்கு கல்வி இல்லை

அனைவருக்கும் கல்வி அளிக்கப்பட வேண்டும் என்று போடப்பட்ட சட்டத்தால் பலனில்லை; 50 சதவீத ஏழைக்குழந்தைகளுக்கு கல்வி கிடைக்கவில்லை!

அனைவருக்கும் கல்வி கிடைக்க வேண்டும்; அதற்கு அரசு வழிவகுக்க வேண்டும் என்று பல ஆண்டுக்கு முன்பே கோரிக்கை எழுந்தது. 1988ல் கல்வி உரிமை கோரி தேசிய கூட்டமைப்பு அமைக்கப்பட்டது. சிறிய அளவில் அமைக்கப்பட்ட இந்த அமைப்பு, ஆண்டுக்கு ஆண்டு பரவி, பல மாநிலங்களில் 15 லட்சம் உறுப்பினர்கள் சேர்ந்தனர்.

கிராமம், கிராமமாக போய் குழந்தைகளுக்கு கல்வி முக்கியம்; அரசு பல நடவடிக்கைகளை எடுத்து வருகிறது என்று பிரசாரம் செய்தும், பல காரணங்களால் போதுமான விழிப்புணர்வோ, சட்டத்தால் பலனோ இல்லை என்று இப்போது தெரிய வந்துள்ளது.

இந்த அமைப்பு இப்போது ஜன் அந்தோலன் என்று பெயர் மாற்றப்பட்டுள்ளது. சமீபத்தில் பெங்களூரு நகரில், இதன் மாநாடு நடந்தது.

’கல்வி உரிமைச் சட்டம் கொண்டு வந்து மூன்றாண்டாகிவிட்டது. இன்னும் அதனால் எந்த பலனும் ஏழைக் குழந்தைகளுக்கு கிடைக்கவில்லை. இதில் நாம் தோல்வி அடைந்து விட்டோம்’ என்று மாநாட்டில் பேசினர்.

இது குறித்து அமைப்பின் உறுப்பினர் ராஜேந்திர பிரபாகர் கூறுகையில், ’அனைவருக்கும் கல்வி கட்டாயம் கிடைக்க வேண்டும் என்று தான் அரசு இச்சட்டத்தை 2005ல் கொண்டு வந்து நிறைவேற்றியது. ஆனால், இன்று நிலை இன்னும் பரிதாபமாகத்தான் உள்ளது.

மொத்தமுள்ள மக்கள் தொகையில் 50 சதவீத ஏழைக்குழந்தைகளுக்கு எவ்வித பலனும் கிடைக்கவில்லை. அவர்களுக்கு அடிப்படை கல்விக் கூட தர முடியவில்லை. அரசு இந்த விஷயத்தில் தீவிர அக்கறை காட்டவில்லை என்பதால் தான் இப்படிப்பட்ட நிலை காணப்படுகிறது’ என்று தெரிவித்தார்.

இந்தியாவில் 18 வயதுக்கு கீழ் உள்ளவர்களின் எண்ணிக்கை மொத்த மக்கள் தொகையில் 40 சதவீதமாக கணக்கிடப்படுகிறது. இந்நிலையில், இளைஞர்களுக்கு போதுமான கல்வி கிடைக்காமல் இருந்தால் நாம் பெரிய அளவில் மனித வளத்தை இழக்க வேண்டிய திருக்கும் என்றும் மாநாட்டில் எச்சரிக்கை விடப்பட்டது.

அமெரிக்காவில் உள்ள, ’பொது பள்ளி முறை’யை கொண்டு வர வேண்டும்; அப்போது தான் அனைவருக்கும், குறிப்பாக ஏழைக் குழந்தைகளுக்கு இலவச கல்வி தாராளமாக கிடைக்கும் என்றும் யோசனை தெரிவிக்கப்பட்டது.

**– தினமலர், 26.10.2008**

# இலவச, கட்டாயக் கல்விக்கானக் குழந்தைகள் உரிமை மசோதா 2008 கலந்தாய்வின் முடிவுகள்

15 டிசம்பர் 2008, அன்று ராஜ்ய சபையில் இந்திய அரசு இலவக் கட்டாய கல்விக்கான மசோதா, 2008ஐ (மசோதா எண் LXV 2008) தாக்கல் செய்தது. இந்த மசோதா, மனித வளமேம்பாட்டு அமைச்சகத்தின் நிலைக்குழுவிற்கு அனுப்பப்பட்டது. இந்த நிலைக்குழுவின் தலைவர் திரு.ஜனார்தன் திவேதி, 21 லோக்சபா உறுப்பினர்களும் மற்றும் 8 ராஜ சபா உறுப்பினர்களையும் நிலைக்குழுவின் உறுப்பினர்கள்.

நிலைக்குழு, இந்த மசோதா பற்றி பொதுமக்களின் கருத்து எதுவும் கேட்காமல், விவாதிக்காமல் அதன் அறிக்கையை இறுதி செய்து சமர்பித்துவிட்டது. இந்த மசோதாவில் பல முரண்பாடுகள் உள்ளது. பரவலாக விவாதிக்கப்பட வேண்டியுள்ளது.

இந்த விவாதங்களை உள்ளடக்கிய ஒரு கலந்துரையாடல் கூட்டம் கல்வி அமைப்பு, குழந்தைக் தொழிலாளர் எதிர்ப்பு பிரச்சாரம் (CACL - TN) மற்றும் மழலையர் மற்றும் முன்பருவக்கல்வி கூட்டமைப்பு (TN FORCES) ஆகியோறது கூட்டு அழைப்பின் பெயரில் சென்ற மாதம் 27ம் தேதி (27.1.2009) அன்று சென்னையில் நடைபெற்றது. இக்கூட்டத்தைத் தொடர்ந்து 14.2.2009 அன்று தமிழகத்தின் தலைசிறந்த கல்வியாளர்கள் பத்திரிக்யைாளர்களைச் சந்தித்தனர்.

தொடங்கவும் அவற்றை அங்கரிக்கவும், கண்காணிக்கவும் தேவையான நியமங்களை மசோதாதெரிவிக்கவில்லை.

5. ஓட்டைகள் நிறைந்த இம்மசோதா பல்வேறு வழக்குகள் தொடரப்பட இடமளிக்கும். சட்டம் பயன்னற்றதாக செய்யப்படும். மசோதாவை உருவாக்கியவர்கள் விருப்பமும் அது தானோ!

6. பள்ளி அமைப்பில் உள்ள சமுத்துவுமின்மை என்றும் தொடர மசோதாஇடமளிக்கிறது. எல்லாவகைக் கல்வி அமைப்புகளையும் ஒருங்கிணைக்க காலவரையரைக்குட்ப்பட்ட திட்டம் எதுவும் மசோதா கொடுக்கவில்லை. சமூதுவமின்மை மேலும் அதிகரிக்கவே செய்யும். இது நாட்டின் ஒற்றுமைக்கு பெறும் ஆபத்து ஆகும். தவறு செய்யும் கல்விக் கூடங்களின் அங்கீகாரத்தை விலக்க வழி செய்கையில் குழந்தைகள் நலன் பாதிக்காமல் இருக்க அவற்றை அரசே மேற்கொள்ள வகை செய்யவில்லை. பல மாநில சட்டங்களில் இதற்கு வகை செய்யப்பட்டுள்ளன.

7. சேவை என்பதற்கு மாறாக கல்வி ஒரு வாணிபம் என்பதை மசோதா ஏற்கின்றது. ஒரு சிறு தொழிலும் அரசின் அனுமதி பெற வேண்டியிருக்க எவ்வித அரசுகட்டுபாடுமில்லாது பள்ளிகள் இயங்க அனுமதிக்கின்றது.

8. அரசியல் சட்டப் பிரிவு 21 A நிபந்தனைகுட்பட்ட உரிமையாக கல்வி உரிமையைத் தருகின்றது. அரசு சட்டம் மூலம் நிர்ணயித்த வண்ணம் என்ற சொற்களை நீக்கி இவ்வுரிமையை கட்டுப்பாடற்ற முழுமையான உரிமையாக்கத் தேவையான அரசியல் சட்டத் திருத்தம் கொணரப்படவேண்டும்.

9. முன்பருவக் கல்வி அளிப்பதை அரசின் விருப்ப நடவடிக்கையாகவே மசோதா அமைத்துள்ளது. அதனைக் கட்டாய உரிமையாக்கிடவும் 14 வயதிற்கு மேற்பட்ட குழந்தைகளுக்கும் கல்வி அடிப்படை உரிமையாக்கப்படவும் வேண்டும்.

10. இம்மாசோதாவை செயல்படுத்தத் தேவையான நிதியாதரங்களையும் நிதிப்பொறுப்புகளையும் தெரிவிக்காதது மசோதாவின் மிகப் பெறும் குறை. நடுவணரசு தான் இப்பொறுப்பில் பெறும் பகுதியை ஏற்கவேண்டும். மாநிலக் கல்வி பட்ஜெட்டில் குறைந்தது 90% ஐயாவது நடுவணரசு கொடுக்கவேண்டும்.

“நான் எனது பெற்றோரின் சம்மதத்தோடு இங்கு வேலைக்கு வந்திருக்கிறேன். நான் இங்கு குறைந்தது ஒரு ஆண்டாவது முழுமையாக வேலை செய்வேன். எனக்கு இங்கு வேலை செய்ய விருப்பம் இல்லையென்றால், நான் ஒருமாதம் முன்னதாகவே இந்த அலுவலகத்திற்கு தகவல் கொடுப்பேன். நான் எந்தத் தகவலும் சொல்லாது இங்கிருந்து போய்விட்டால், என்னை இங்கு வேலைக்கு வைத்த முகவர் எந்த விதத்திலும் பொறுப்பாகமாட்டார் என்பதை அறிந்துள்ளேன்”. இது மேற்கு வங்கத்தின் வடக்கு 24 பர்கானா மாவட்டம், சந்தேஷ்காலி இரண்டாம் ஒன்றியத்திலிருந்து வந்துள்ள 14 வயது சிறுமி ஒருத்தி தன்னை அழைத்து வந்துள்ள தில்லி முகவருக்கு

பெங்காலி மொழியில் எழுதிக் கொடுத்துள்ள உறுதி மொழிப்பத்திரம். வீட்டுப் பணி செய்யும் குழந்தைத் தொழிலாளியாக தில்லிக்கு வந்த அவள் 2005 ஆம் ஆண்டு முதல் காணவில்லை. உண்மையில் இந்த ஒன்றியத்திலிருந்து கடந்த ஓராண்டில் மட்டும் 199 குழந்தைகள் கானாமல் போனதாகப் புகார் செய்யப்பட்டுள்ளது.

மேற்கு வங்க மாநிலத்தின், பெண்கள், குழந்தைகள் வளர்ச்சி மற்றும் சமூக நலத்துறையோடு இணைந்து, தன்னார்வத் தொண்டு நிறுவனம் ஒன்று நடத்திய ஆய்வின் படி, வடக்கு மற்றும் தெற்கு 24 பர்கானா மாவட்டங்களின் மூன்று ஒன்றியங்களில் இருந்து 2007 மற்றும் 2008 ஆம் ஆண்டுகளில் 3,429 குழந்தைகள் தில்லியில் வீட்டுவேலைகள் செய்வதற்காக கொண்டு போகப்பட்டுள்ளனர். இவர்களில் 27 பேர் எங்கு சென்றார்கள் என்பதே தெரியவில்லை. இவ்வாறு காணாமல் போனவர்களில் 66.6 சதவீதம் பெண் குழந்தைகள்.

இது கடலில் மிதக்கும் பனிப்பாறையின் முகடுமாத்திரம் வெளியே தெரிவது போலத்தான். ஒவ்வோராண்டும் சுமார் 16,000 குழந்தைகள் மேற்கு வங்க மாநிலத்திலிருந்து காணாமல் போகிறார்கள். இவர்களில் பலர் வீட்டுப்பணி செய்யும் குழந்தைத் தொழிலாளர் என்ற முறையிலோ, அல்லது பெண் குழந்தைகளுக்கு செலவில்லாத திருமணம் என்ற வகையிலோ வீட்டிலிருந்து அனுப்பி வைக்கப்படுகிறார்கள். சில குழந்தைகள் சொந்தக் காரணங்களுக்காகத் தாமே வீட்டைவிட்டு ஓடி விடுகிறார்கள். பெண்குழந்தைகள் 10 வயது முடிந்தவுடனே வெளியே அனுப்பப்பட்டு விடும்

## மாலந்தூர் கிராம பள்ளியின் மாணவர் ஏக்கம் தீருமா ?

–ரூபன்

பெரியபாளையத்தை அடுத்த மாலந்தூர் கிராமத்தில் நடுநிலைப்பள்ளியில் ஆசிரியர்கள் இல்லாததால் மாணவர்கள் கல்வி கற்க முடியாமல் திண்டாடுகின்றனர் விரைவில் ஆசிரியர்களை நியமிக்க வேண்டும் என கிராம மக்கள் வலியுறுத்தியுள்ளனர்.

திருவள்ளூர் மாவட்டம் எல்லாபுரம் ஒன்றியம், மாலந்தூர் கிராமத்தில் கடந்த ஆட்சியில் தான் நடுநிலைப்பள்ளியாக தரம் உயர்த்தப்பட்டது. இதில் 300க்கும் மேற்பட்ட மாணவர்கள் படிக்கின்றனர். இவர்களுக்கு கற்றுத்தர வெறும் 5 ஆசிரியர்கள் மட்டுமே உள்ளனர். குறிப்பாக முதல் வகுப்பிலிருந்து ஐந்தாம் வகுப்பு வரை 140 மாணவர்கள் உள்ளனர். இந்த ஐந்து வகுப்புகளுக்கும் சேர்த்து ஒரே ஆசிரியர் மட்டுமே உள்ளது தான் மிகக்கொடுமை. ஓர் ஆசிரியர் பள்ளியாக இப்பள்ளி மாறியுள்ளது. ஆசிரியர்கள் பற்றாக்குறையால் கல்வி தரமில்லை என பெற்றோர்கள் தானாகவே தனியார் கல்வி நிலையங்களை கட்டாயமாக நாடவேண்டிய நிலைமை உருவாகியுள்ளது. ஆவாஜிபேட்டை, மாமண்டூர், மாளந்தூர் ஆகிய கிராமங்களில் உள்ள சுமார் 20 ஆயிரத்திற்கும் மேற்பட்ட ஏழை, எளிய மக்கள் அருகில் உள்ள மாளந்தூர் நடுநிலைப்பள்ளியையே நம்பி உள்ளனர். வேறு இடங்களுக்கு செல்ல வேண்டும் என்றால் குழந்தைகள் குறைந்தது 8 கி.மீ. செல்ல வேண்டியுள்ளது. இது குறித்து மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் ஊத்துக்கோட்டை வட்டச்செயலாளர் ஏ.ஜி.கண்ணன், ஒன்றிய சிபிஎம் கவுன்சிலர் ஆனந்தன் ஆகியோர் கூறும்போது மாளந்தூர் நடுநிலை பள்ளியில் ஆசிரியர்கள் இல்லாததால் ஆடு, மாடுகளை அடைத்து வைக்கிற இடமாகத் தான் இந்த பள்ளிக்கூடம் அமைந்துள்ளது. மேல்படிப்பை பாதியிலயே விட்டுவிடும் பரிதாபம் வாழ்க்கையிலும் எந்த முன்னேற்றமும் இல்லாமல் ஒருதலைமுறை கல்வியறிவு இல்லாமல் மங்கும் அவலம் தொடர்கிறது. இதை தடுக்க போதிய ஆசிரியர்களை நியமிக்க வேண்டும் என மாவட்ட ஆட்சியர், உதவி தொடக்க கல்வி அலுவலர் ஆகியோரிடமும் புகார் தெரிவித்தும் நடவடிக்கையில்லை. அடுத்து கோரிக்கையை வலியுறுத்தி சக்தி மிக்க போராட்டம் நடத்தவும் முடிவுசெய்துள்ளோம் என்றனர்.

பல்வேறு மக்கள் நல திட்டங்களில் கவனம் செலுத்தும் தமிழக அரசு கிராமப்புற மாணவர்களின் கல்வி தரத்தை உயர்த்த வகுப்புக்களை மட்டும் தரம் உயர்த்தினால் போதாது. அதோடு ஆசிரியர்கள், வகுப்பறைகள், கரும்பலகை உள்ளிட்ட தேவையான பொருட்களும் கொடுத்தால்தான் ஓரளவிற்கேனும் சாதாரண மாணவர்களின் தரம் உயரும். இப்பகுதி மக்களின் இந்த எதிர்ப்பார்ப்பை நிறைவேற்ற அரசு முன்வருமா ?

**– தீக்கதிர் , 30.1.2009**

# மேற்கு வங்கக் குழந்தைகளின் முடிவில்லாத பயணம்

– சோம மித்ரா முகர்ஜி

அதே வேளையில், ஆண் குழந்தைகள் 17 வயது நெருங்கியவுடனே கூலி வேலை தேடி வெளியே கிளம்பி விடுகிறார்கள். மேற்கு வங்கத்தில் பல மாவட்டங்களில் வறிய குடும்பங்களிலிருந்து குழந்தைகள் இவ்வகையில் அணியணியாக வெளியே அனுப்பப்பட்டு வருகிறார்கள்.

சுந்தரவனக் காடுகளுக்குட்பட்ட பகுதியில் அமைந்துள்ள சந்தேஷ்காலி 1 மற்றும் 2–ஆம் ஒன்றியங்களிலிருந்தே பெருமளவு சிறுமிகள் இவ்வாறு கடத்தப்படுகிறார்கள். இந்தப் பகுதியைத்தான் முகவர்கள் தமது இலக்காகக் குறிவைத்துப் படையெடுக்கிறார்கள். மேற்கு வங்கத்தின் குழந்தைத் தொழிலாளர் தடைச்சட்டம் ( தடை மற்றும் ஒழுங்குபடுத்துதல்) 1986 செயலற்றுப் போய்விட்ட நிலையில், கடந்த 10 ஆண்டுகளாக எவ்வளவு பெண்குழந்தைகள் காணாமல் போயிருக்கக்கூடம் என்பதை வாசகர்களின் ஊகத்திற்கே விட்டுவிடுகிறோம்.

அனேகமாக, இந்தப் பகுதியைச் சேர்ந்த எல்லோருமே இது போன்ற நெஞ்சடைக்கச் செய்யும் சோகக் கதையைச் சொல்கிறார்கள். நான்காண்டுகளுக்கு முன்பு தெற்கு 24 பர்கானா ராம்பூர் மாவட்டத்தின் கிராமத்தைச் சேர்ந்த தாது மற்றும் ராணிபாலா சர்தார் தம்பதியரின் 13 வயது மகள் ஷர்மிளா தன்னையொத்த மூன்று சிறுமிகளோடு சேர்த்து முகவரால் தில்லிக்கு அழைத்துச் செல்லப்பட்டாள். இதுவரை அவளிடமிருந்து எந்தத்தகவலும் இல்லை. அவள் திரும்ப வரவும் இல்லை. அவளது பெற்றோர் எந்தப்பணமும் பெறவில்லை.

‘‘அந்த ஏஜென்ட் என் மகளை தில்லிக்கு அழைத்துக் கொண்டு போய் வேலைக்கு வைத்து மாதம் 1800/– ரூபாய் அனுப்புவதாகச் சொல்லித்தான் அழைத்துச் சென்றான். ஆனால் அவன் அவளை எங்கு அனுப்பிவைத்தான் என்றே தெரியவில்லை. அவள் இதுவரை திரும்பவரவும் இல்லை. பணமும் வரவில்லை. நாங்கள் தில்லியிலுள்ள அந்த முகவரின் சகோதரரை தொலைபேசி மூலம் விசாரித்தோம். அப்போது அவர்கள் இங்கு வரும் போது என் மகளையும் உடன் அழைத்து வருவதாகக் கூறினார். அந்த ஆட்களும் திரும்ப இங்கு வரவில்லை. என் மகளும் வரவில்லை’’ என்று வருத்தம் தோய்ந்த மெல்லிய குரலில் ராணிபாலா முனகுகிறார்.

தில்லி தரகர்களின் வஞ்சக வார்த்தைகளுக்கு பலியாகிற குடும்பங்கள், பெரும்பாலும் தாழ்த்தப்பட்ட, மலைவாழ் மக்களினத்தைச் சேர்ந்தவையாகும். இவர்களிடையே அரசால் அமல்படுத்தப்படும் வறுமை ஒழிப்புத்திட்டங்கள் குறித்து எந்த விழிப்புணர்வும் இல்லை. இவர்களுக்கான வருவாய் வாய்ப்பு என்பது மீன்பிடித்தொழில் மட்டுமே. பெரும்பாலானவர்கள் உள்ளூரில் நிலத்தைக் குத்தகையெடுத்து செயற்கை முறையில் மீன் வளர்த்து மாதமொன்றுக்கு சராசரியாக 1500 ரூபாய் முதல் 2000 வரையில் பொருளீட்டுகிறார்கள். குடும்பக்கட்டுப்பாடு என்பதே அனேகமாக இல்லை. மிகக்கடுமையான பாலியல் பாகுபாடு நிலவுகிறது. ஹல்தார் பாராவின் நிரஞ்சன் சர்தார் (56)ன் மகள் 11 வயது சானியா கடந்த இரண்டாண்டுகளாகக் காணவில்லை. ‘‘எனக்கு ஆறு குழந்தைகள் எனது மூத்த மகளுக்குத் திருமணமாகிவிட்டது. எனது மகன்கள் என்னோடு இருந்தாக வேண்டும். எனவே சானியா மட்டுமே வேலைக்குச் செல்ல முடியும். இங்கிருந்து சென்றபின் அவள் ஒரே முறை வந்தாள், கடந்த இரண்டுவருடமாக அவள் பணமும் அனுப்பவில்லை, தொலைபேசி மூலமாகப் பேசக்கூட இல்லை. அவள் எங்கிருக்கிறாள் என்பதே தெரியவில்லை. அவளை கூட்டிச்சென்ற முகவர்களும் தெரியாது என்கிறார்கள்’’ என்கிறார் நிரஞ்சன் சர்தார்.

இது போன்ற ஆளெடுப்பு முகவர்கள் வளர் இளம் பெண்களைத் தான் குறிவைக்கிறார்கள். காணாமல் போகும் இந்தச் சிறுமிகள் விபச்சாரச் சந்தைக்காகக் கடத்தப்படுகிறார்கள். காணாமல் போகும் சிறுமிகளில் 49 சதவீதம் பேர் 15 முதல் 18 வயது கொண்டவர்கள். இவர்களில் 64.6 சதம் பேர் மூன்றாம் வகுப்பு வரை மட்டுமே பள்ளிக்குச் சென்றுள்ளனர். 14.6 சதவீதம் பேர் பள்ளியின் பக்கமே சென்றதில்லை.

‘‘இதன் செயல்படுமுறை மிகவும் எளிதானது. தரகர்கள் பெரும்பாலும் தில்லியிலிருந்து வருகிறார்கள். தங்களுக்கு யார் வேண்டுமோ அவர்களுடைய உறவினரையோ அல்லது அக்கம்பக்கம் உள்ளவர்களை நட்பாக்கிக் கொண்டு அவர்களைக் கொண்டே பெற்றோரை சம்மதிக்க வைக்கிறார்கள். கொல்கொத்தா மாநகரம் தான் இது போன்ற வீட்டுப்பணி செய்யும் குழந்தைத் தொழிலாளர்களின் புகலிடமாக இருக்கிறது. அது ஒரு பரிமாற்ற முனையமாகவும் செயல்படுகிறது. இதே போன்ற புகலிடங்களாக தில்லி, மும்பை ஹரியானா, உத்தரப்பிரதேசம், பஞ்சாப், காஷ்மீர், தமிழ்நாடு மற்றும் கேரளா ஆகியவையும் இருக்கின்றன’’. என்கிறார் சமூகப்போராளி விஸ்வரூப் பானர்ஜி.

இந்த முகவர்கள் குழந்தைகளுக்கு திருமணம் என்று சொல்லித்தான் பெரும்பாலான பெற்றோரைப் பணிய வைக்கிறார்கள். சில சமயங்களில் பெண் குழந்தைகளே வெளியில் சென்று வருமானம் தேடுவது அல்லது தகுதியான மாப்பிள்ளையைக் கைப்பிடிப்பது என்ற நம்பிக்கையில் ஆர்வத்தோடு தரகர்களோடு உடன் செல்ல முன் வருகிறார்கள். தான் வசிக்கும் கிராமத்தில் நிலவும் வேலையில்லாத்திண்டாட்டம், ஒழிக்க முடியாத

அளவுக்கு நீடித்துள்ள வரதட்சனைப் பிரச்சினை ஆகியவற்றிலிருந்து தப்பித்துச் செல்லவிரும்பும் இந்தப் பெண்குழந்தைகளுக்கு தம்மை அழைத்துச் செல்லவந்திருக்கும் தரகர்கள் கண்கண்ட தெய்வமாகக் காட்சியளிக்கிறார்கள். இரண்டாண்டுகளுக்கு முன்பு இதேபோல தனது 11 வயது மகள் சம்பாவை அனுப்பிவைத்த ரம்பா கோஸ்வாமி'' பணம் அவர்களது ஆர்வத்தைத் தூண்டுகிறது. எனவே, அவர்கள் பெற்றோர் சொல்வதைக் கேட்பதில்லை. நான் எனது மகளிடமிருந்தோ அல்லது அவளை அழைத்துச் சென்ற தரகரிடமிருந்தோ இது வரை ஒரு சல்லிக்காசு கூட வாங்கவில்லை. அவளிடமிருந்து எந்தத்தகவலும் இல்லை. என்ன செய்வது அல்லது யாரைக் கேட்பது என்று எனக்கு ஒன்றுமே புரியவில்லை. நான் அப்போதே உறுதியாக இருந்து அவளைத் தடுத்திருக்க வேண்டும்'' என்று கவலையோடு கதறியழுகிறார்.

``பெரும்பாலான பெற்றோர் தான் இதுவரை பணம் பெற்றதில்லையெனக் கூறினாலும் கூட, இதில் ஆரம்பத்தில் பணப்பரிமாற்றம் நடந்திருப்பது உறுதியாகிறது. பெண் குழந்தைகளை அழைத்துச் செல்கிற தரகர்கள் பின்னர் குழந்தைக்கும் பெற்றோருக்குமிடையேயான தொடர்பைத் துண்டித்துவிட்டு குழந்தையால் ஈட்டப்படும் மொத்த வருமானத்தையும் தாங்களே சுருட்டிக் கொள்கிறார்கள். இன்று பணம் வரும் அல்லது நாளைவரும் என்ற நம்பிக்கையில் பெரும்பாலான பெற்றோர் புகார் செய்வதில்லை. காணாமல் போன குழந்தைகளில் 16 சதவீதம் பேர் குறித்துத் தான் புகார் பதிவு செய்யப்பட்டுள்ளது'' என்கிறார் ஒரு தொண்டு நிறுவனப்பிரதிநிதி தற்போது மேற்கு வங்க அரசு குழந்தைகள் கடத்தப்படுவதைத்தடுக்க தன்னார்வ அமைப்புகளை இணைத்து கூட்டாக பிரச்சாரம் செய்துவருகிறது. இதன்பலன் தெரிய சில மாதங்களாகலாம்.

எவ்வாறாயினும் சுதந்திர நாட்டின் குடிமக்களுக்குள்ள உரிமைகள் போலவே குழந்தைகளுக்கும் உயிர் வாழும் உரிமை, வளர்ச்சிக்கான உரிமை, பாதுகாப்பு மற்றும் பங்கேற்புக்கான உரிமைகள் வழங்கப்பட வேண்டுமென்பதே நமது கோரிக்கை.

**–Social welfare Nov 2008**

# பள்ளிகளில் கல்வித்தரம் : நிபுணர் குழு அதிருப்தி

நமது நாட்டில் கல்வித்தரம் திருப்தியற்ற வகையில் உள்ளது என மத்திய அரசு அமைத்த நிபுணர் குழு கருத்துத் தெரிவித்துள்ளது.

மத்திய மனிதவள மேம்பாட்டு அமைச்சகத்தின கீழ் இயங்கிவரும் கல்வி கற்பித்தல் திட்டமிடல் மற்றும் நிர்வகிப்புக்கான தேசிய அமைப்பு இது தொடர்பாக ஆய்வு செய்து சமீபத்தில் தனது அறிக்கையை அரசிடம் அளித்திருந்தது.

2001ம் ஆண்டு முதல் 2010 ம் ஆண்டுவரையிலான பள்ளி கல்வி திட்ட அமலாக்கத்தில் இதுவரை சாதித்தது என்ன என்று ஆய்வு மேற்கொள்ளப்பட்டதில், பல மாநிலங்கள் மாணவர் சேர்க்கை, கல்வி கற்பித்தல் ஆகியவற்றில் சிறந்து விளங்யபோதிலும் கற்றறிதலை பொருத்தவரை திருப்திப்படும்படியாக எதுவும் சாதிக்கவில்லை என தெரியவந்துள்ளது.

2015ம் ஆண்டுக்குள் அனைவருக்கும் கல்வியளித்தல் என்ற நோக்கத்துடன் துவக்கப்பட்ட திட்டம் என்ற போதிலும் இதற்காக பள்ளிகளில் அடிப்படை வசதிகள் செய்வதில் சாதனை படைக்கப்பட்டுள்ளது. பள்ளிக்கு மாணவர்கள் வருகை தரும் விகிதமும் சற்று அதிகரித்துள்ளது.

பள்ளிகளுக்கு நல்ல கட்டடங்கள் கிடைத்துள்ளபோதிலும், அவற்றால், மாணவர்கள் கல்வி கற்கும் திறனில் எந்தவித முன்னேற்றத்தையும் ஏற்படுத்த முடியவில்லை.

மாணவர்கள் கல்வி கற்கும் திறன் மாநிலத்திற்கு மாநிலம் வேறுபடுகிறது. அதுபோல, ஆதிதிராவிடர்கள் மற்றும் பழங்குடியினர் கல்வி கற்கும் திறனுக்கும் மற்ற பொதுபிரிவினர் கல்வி கற்கும் திறனுக்கும் அதிக வித்தியாசம் காணப்படுகிறது.

சிறுமிகள் பள்ளிகளுக்கு படிக்க வருவது அதிகரித்திருக்கிறது. ஆனால், பாலின பாகுபாடு அதிகமாக உள்ளது.

சிறுபான்மையினரை பொருத்தவரையிலும் இந்த பிரச்னைகள் கவலைப்படத்தக்கவகையில் உள்ளன. முஸ்லிம்கள் மத்தியில் கற்றறிதல் என்பது எதிர்பார்த்த வெற்றியை தரவில்லை.

எனவே, பள்ளிக்கட்டடம் கட்டுவதாலோ அல்லது பள்ளிக்கு வேண்டிய வசதிகளை செய்து கொடுப்பதன் மூலமோ கல்வி கற்றலில் எந்த முன்னேற்றமும் கண்டுவிடமுடியாது. மாறாக, கல்வி பெறும் வாய்ப்பு கிடைக்காத குழந்தைகள், பெண்கள், ஆண்கள் எங்கெல்லாம் இருக்கிறார்களோ அவர்களையெல்லாம் தேடிப்பிடித்து கல்வி கற்பித்தால் மட்டுமே கல்வியறிவை பெருக்குவதில் முன்னேற்றம் காணமுடியும் என சுட்டிக்காட்டப்பட்டிருக்கிறது.

நமது நாட்டில் உள்ள பள்ளிகளில் பெரும்பாலானவை ஓராசிரியர் பள்ளிகளாகவோ அல்லது ஒரே ஒரு வகுப்பறை மட்டும் கொண்டதாகவோ இருக்கின்றன. சுமார் 52,800 பள்ளிகள் தங்கள் மாணவர்வருகை பட்டியலில் தலா 25 மாணவர்களை மட்டும் கொண்டிருக்கின்றன.

கடந்த 20 ஆண்டுகளில் ஆரம்ப பள்ளிகள், நடுநிலை பள்ளிகள் ஆகியவற்றில் மாணவர்களின் வருகை கணிசமாக உயர்ந்துள்ளது. ஆனால், மாணவர் ஆசிரியர் விகிதம் நாடு முழுவதிலுமே பொருத்தமானதாக இல்லை.

இருப்பினும், ஆரம்ப கல்வி கற்பித்தலில் இலக்கை எட்டுவது திண்ணம் என்ற நிலை உள்ளது. எனவே, பள்ளி நிர்வாகங்களை வலுப்படுத்துவது, கற்பித்தல் முறையை மேம்படுத்துவது, வகுப்பறையில் கற்பித்தல்–கற்றறிதலை மேம்படச் செய்தல் மற்றும் இதன் மூலம் கல்விகற்றலில் நிறைந்த பலன் கிடைக்கச்செய்தல் ஆகியனவே இப்போதைய தேவைகளாக இருக்கின்றன.

கற்பித்தலிலும் சாதனை, கற்றலிலும் சாதனை என்பதே நமது நாட்டிற்கு தேவை. ஆனால், இதில் ஏற்றத்தாழ்வு இருந்தால் இந்த திட்டத்தல் பலன் இராது என்பது நிபுணர் குழுவின் கருத்து.

**– தினமணி, 16.02.2009**

The States Parties to the present Covenant shall take, individually and through international co-operation, the measures, including specific programmes, which are needed: Taking into account the problems of both food-importing and food-exporting countries, to ensure an equitable distribution of world food supplies in relation to need.

*International Covenant on Economic, Social and Cultural Rights, Art. 11*




JEAN PLANTU / *France*

***Education Material Published on behalf of***

***Campaign for Custodial Justice & Abolition of Torture by Human Rights Advocacy and Research Foundation (HRF)***

*No.10, Thomas Nagar, Little Mount, Saidapet, Chennai - 600 015.*
*Ph : 044-2235 3503, Fax : 044-2235 5905,*
*E-mail : hrf@md3.vsnl.net.in, Website : www.voiceofstruggletn.org*